கல்கி

KALKI 31.1.99 ரூ. 4.50



கிரிக்கெட்டில் ஆர்வம் ஏன்?

— கலைஞர் பதில்!



டென்ஷனான கிரிக்கெட் ரேட்டி!

— த.மா.கா இளைஞரணித் தலைவர்

டாக்டர் செல்லக்குமார்



"தமது அமைச்சர்களைக் கலைஞரே சாடியிருக்கிறார்!"

தமக்கு மேல் ஒருவரை நியமித்ததனால் கடந்த ஆறு மாத காலமாகத் தமக்களிக்கப்பட்ட த.மா.கா இளைஞரணித் தலைவர் பதவியை ஏற்காது அதிருப்தி காட்டி வந்த டாக்டர் செல்லக்குமார், தற்போது த.மா.கா இளைஞரணித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார். ஏன் இப்படி?

கோவை வந்திருந்த அவரிடமே கேட்டோம்...

"நிர்வாகம் என்பது தலைவரின் முழு சுதந்தரம். அதைப்பற்றி நான் விமர்சனம் செய்யத் தயாரில்லை. மனிதனாகப் பிறந்த அனைவருக்குமே கருத்து வேறுபாடுகள் வருவது சர்வ சகஜம். கட்சியில் அவரவர் கருத்தைத் தலைவர்கிட்டே சொல்ல வருகிறார்கள். இதைத்தான் எங்களுக்குள் கருத்து வேறுபாடு என்று பத்திரிகைகள் எழுதி விடுகின்றன. நாங்கள் யாரும் அப்படிப் பத்திரிகைகளுக்குப் பேட்டி தரவில்லையே!"

"தலைவர் மூப்பனாரும் மற்ற தலைவர்களும் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களில் (சமீபத்திய உதாரணம் திருப்பூர் மாநாடு) பெரும்பாலும் உங்களைக் காணமுடிவதில்லையே. மூப்பனார் ஒரு பக்கம் பொதுக்கூட்டம் போட்டால் நீங்கள் வேறொரு இடத்தில் கூட்டத்தைத் திரட்டுகிறீர்கள். கட்சியில் தனித்தன்மை காட்டும் நோக்கமா?"

"அப்படியொன்றும் இல்லை. நீங்கள் குறிப்பிடும் திருப்பூர் கூட்டத்தின்போது பரமக்குடியில் எனக்குப் பொதுக்கூட்டம். அதுவும் தலைவரின் சம்மதத்தின் பேரில்

தான். தலைவருடன் சில கூட்டங்களில் கலந்து கொள்ள முடிந்தாலும் சில கூட்டங்களில் கலந்து கொள்ள முடிவதில்லை. காரணம், குடும்பச் சூழ்நிலை, அவ்வப்போது எழும் தொகுதிப் பிரச்னை. மற்றபடி இதற்கு உள்நோக்கம் ஏதும் இடையாது..."

"ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை' என்று முதன்முதலாக கலைஞர் அரசை கடுமையாகச் சட்ட சபையில் சாடின த.மா.கா எம்.எல்.ஏ நீங்கள். இப்போது இந்த ஆட்சியின் காட்சி எப்படி உள்ளது?"

"இந்த ஆட்சியின் தவறுகளை முதல்மைச்சரே ஒப்புக் கொண்டுள்ளார். 'அமைச்சர்கள் நிர்வாகத்தை சரியாகப் பயன் படுத்தவில்லை. மக்களுக்குப் போதுமான நன்மைகள் செய்ய வில்லை' என்று தமது அமைச்சர்களையே சாடியிருக்கிறார். எதிர்க் கட்சி ஆள் நான் சொல்லக் கூடாதா? இப்போதும் இங்கே தவறு நடக்கிறது. கடந்த காலத்தில் என்ன தவறு நடந்ததோ - என்ன ஊழல் நடந்ததோ அதில் ஒரு சிறிதும் இப்போது குறைய வில்லை."



"அந்த எழுத்தாளர் எழுதின ஒரு தொடர் கதை பெரிய புயலைக் கிளப்பிடுச்சு, தெரியுமில்ல...?"

"தெரியும். அதுக்காக அவர் புயல் நிவாரண நிதி கேட்டுக்கிட்டு அலையறதுதான் சகிக்கலை!"

— யமுனா ரெங்கநாதன்

"அவற்றைக் குறைபாடுகளாக வேண்டுமானால் சொல்லலாம். ஊழல் என்றால் பெரிய அளவுகளில் - பெரிய தலைகள் செய்வதல்லவா? கீழ்மட்ட விஷயங்கள் 'லஞ்ச-லாவண்ய' அளவில் மட்டும் தானே கொள்ள முடியும்?"

"ஊழலில் இரண்டு விதம். நேரடியாகவும் செய்யலாம். தம் புத்திக் கூர்மையைப் பயன்படுத்தி மற்றவருடைய கண்ணுக்குத் தெரியாமலும் செய்யலாம். இது இரண்டாவது ரகம். அதை உதாரணங்களோடு கால நேரம் வரும்போது சுட்டிக் காட்டுவோம்!"


"கலைஞர் அரசு மீது நீங்கள் (இளைஞரணி) ஒன்றைச் சொல்கிறீர்கள். த.மா.கா மூத்த தலைவர்களோ ரொம்பவும் அடக்கி வாசிக்கிறார்கள். இது ஏன்? கொள்கை முரண்பாடு வந்து விடும் ஆபத்து உள்ளதே?"

"இது வயது முரண்பாடு. எங்களைப் பொறுத்தவரை ஊழலுக்கு எதிராகப் புறப்பட்ட இயக்கம். அதில் தெளிவாகவே உள்ளோம். ஊழலை எதிர்க்கக் கூடாதுன்னு எங்க தலைவர் எப்பொழுதும் சொன்னதில்லை. தப்பு எங்கே நடந்தாலும் தட்டிக் கேட்க வேண்டும் என்றுதான் எங்கள் தலைவர் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார். அப்படிக் கேட்பதில் நாங்கள் கொஞ்சம் வேகமாக இருக்கிறோம். அவ்வளவே."

"இளைஞர்களுக்கென த.மா.கா என்ன திட்டம் வைத்துள்ளது?"

"ஒவ்வொரு அரசியல் இயக்கமும் ஒவ்வொரு கால கட்டத்தில் இளைஞர்களைப் பயன்படுத்தியே ஆட்சிக்கு வந்துள்ளது. குறுக்கு வழியில் எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்று இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டு - அவ்வுணர்ச்சிகளுக்கு அவர்களை அடிமையாக்கி, அவர்தம் வாழ்க்கையையே அழித்துத் தலைவர்கள் தங்களை வளர்த்துக் கொண்டதுதான் கடந்த கால உண்மை. அது ஒரு கால கட்டத்தில் மொழியாக - இன்னொரு கால கட்டத்தில் ஜாதியாக - இன்றைக்கு ஜாதியில் ஓர் உட்ஜாதி என்கிற நிலைக்கு இழுத்துச் செல்லவும் தலைப்பட்டிருக்கிறது. இதனால் இதனை ஊக்குவித்த தலைவர்கள் பயனடைந்திருக்கிறார்களேயன்றி எந்த ஓர் இளைஞனும் பயனடைந்ததாக உதாரணம் இல்லை. அதற்கு மாற்றாக இங்கே இளைஞர்களை நல் வழிப்படுத்தி, காமராஜர் ஆட்சியின் உன்னதம் கற்றுக் கொடுத்து, இளைஞர்களை மிக முக்கியமான ஆக்க சக்தியாக உருமாற்றப் புறப்பட்டிருக்கிறோம்."

பேட்டி: கா.சு. வேலாயுதன்
படம் : சௌந்தர்ராஜன்



தமிழ்க்குடிமகனுக்கு மற்றொரு தலைவலி!

● தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் என்ற அமைப்பு தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்குகிறது. இப்போது துறைச் செயலாளருக்கும், மன்றத்துக்கும் மோதல். தகுதியில்லாத ஒரு நபருக்குப் பதவி உயர்வு கொடுப்பதில் தான் விவகாரம் துவங்கியதாம். ''அந்த நபர் கல்வித் தகுதி எதுவும் இல்லாமல் ஏற்கெனவே இரண்டு பதவி உயர்வுகள் பெற்று விட்டார். அது சம்பந்தமாக, தணிக்கை அதிகாரிகள் ஆட்சேபம் எழுப்பியிருக்கிறார்கள். இந்த நிலையில், மீண்டும் ஒரு உயர்வு எப்படிக் கொடுக்க முடியும்? ஆனால் கோட்டை அதிகாரிகள் அந்த நபருக்குத்தான் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்பதில் குறியாக இருப்பதன் காரணம் புரியவில்லை!'' என்றார் மன்றத்தில் முக்கியப் பொறுப்பில் உள்ள ஒருவர். தமிழ்க்குடிமகனுக்கு மற்றொரு தலைவலி!

● திமுகவின் உட்கட்சித் தேர்தலில் ஒரு கௌரவப் பிரச்னைக்கான போட்டி என்பது வடசென்னை மாவட்டச் செயலாளருக்கான போட்டிதான். துணை சபாநாயகர் பரிதி இளம்வழுதி ஒரு பக்கம் இருக்க எதிரணியில், இப்போதைய மாவட்டச் செயலாளர் எஸ். பலராமன், செங்கை சிவம், கோ. சி. நடராஜன் ஆகியோர் கூட்டணி அமைத்திருக்கிறார்கள். இதை, "பெரிசுகள் அணி" என்று செல்லமாக அழைக்கிறார்கள். எல். பலராமன் இப்போது சென்னை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் இருக்கிறார். தமது ஆதரவைப் பெருக்கிக் கொள்வதற்காக வட்ட அளவில் முக்கியமான நபர்களுக்கு வங்கிக் கடன் தருகிறேன் என்று தூண்டில் போடுகிறாராம் பலராமன்.

● கொருக்குப்பேட்டையில் போலி டாக்டர் போட்ட ஊசியால் ஒருவர் இறந்ததைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் போலி டாக்டர்களை வேட்டையாடியது போலீஸ். அதன் பின்னர் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட, நீதிமன்றம் சில வழிகாட்டு முறைகளைக் கொடுத்து, பாரம்பரிய சித்தா, யுனானி, ஆயுர்வேதா, ஹோமியோபதி டாக்டர்களைத் தொடர்ந்து பிராக்டீஸ் செய்ய அனுமதித்தது. 'ஊசி போடக் கூடாது; அங்கீகாரம் பெறாத மருத்துவர்' என்று பெயர்ப் பலகையில் குறிப்பிட வேண்டும் - இப்படிப் பல நிபந்தனைகள். இந்த நிபந்தனைகள் போடப்பட்டது காவல் துறையினருக்கு வசதியாகப் போய் விட்டதாம். 'அங்கீகாரம் பெறாத மருத்துவர் என்று குறிப்பிட்டுக் கொண்டு, ஊசியும் போடாமலிருந்தால் மக்கள் யாரும் வர மாட்டார்கள் என்பதால் இந்த நிபந்தனைகள் மீறப்படுகின்றன. எனவே, ''ஒயின் கடைகளில் மாமூல் வசூலிப்பது போன்று, இந்த டாக்டர்களிடமும் வசூல் வேட்டையைத் துவங்கி விட்டார்கள் உள்ளூர் போலீஸ்'' என்று நம்மிடம் சொன்னார் மருத்துவத் துறையின் முக்கியப் பிரமுகர் ஒருவர்.

● டெலிஷாப்பிங் நெட் ஒர்க் என்பது பாப்புலராகிக் கொண்டு வருகிறதல்லவா! அந்த டெலிஷாப்பிங் கம்பெனிகளிடையே போட்டிகளும் ஆரம்பமாகி விட்டன. ஸாடிலைட் தொலைக்காட்சியில் ஒரு டெலிஷாப்பிங் கம்பெனியின் நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போது, மற்றொரு கம்பெனி ஆட்கள், அந்தக் கம்பெனியின் தொலைபேசிகளுக்குத் தொடர்ந்து போன் செய்து வேண்டாத தகவல்களைக் கேட்டுக் கொண்டே இருப்பார்களாம். இதனால் நிகழ்ச்சியை ஒளிபரப்புச் செய்து கொண்டிருக்கும் கம்பெனியின் தொலைபேசிகள் தொடர்ந்து 'என்கேஜ்ட்' ஆக இருக்கும். மக்கள் தொடர்பு கொள்ள முயன்று அலுத்துப் போவார்கள். போட்டியாளர்களின் வியாபாரத்தை அமுக்க இப்படியொரு வழி!

— தில்லப்பா

காதில் விழுந்தவை :

டென்ஷனான கிரிக்கெட் பேட்டி!

இன்னும் ஓராண்டுக்குக் கலாட்டாவை ஒத்தி வைத்திருப்பதாகத் தாக்கரே அறிவித்திருந்தாலும் டென்ஷன் குறைந்தபாடில்லை...

சேப்பாக்கம் ஸ்டேடியம் எம்.ஜே.கோபாலன் கேட். பக்கிங்காம் கால்வாயை ஒட்டிய சாலை வெறிச் சோடிக் கிடக்கிறது. ஆங்காங்கே கையில் துப்பாக்கி யுடன் காக்கிச் சட்டைகள்.

தொப்பை, தொந்தியுடன் இருக்கும் அந்த எஸ்.ஐ. மூச்சு வாங்க கேட்டின் உள்ளுக்கும், வெளியிலும் போய் வந்து கொண்டிருக்கிறார்.

"....என்னாது...பத்திரிகையா..? மைக் ஸெவன் to மைக்... நாற்பது... ஐயா கல்கி பத்திரிகைகாரங்களாம்..."

"..........."

"போங்க ஸார்."

பெயர் விலாசமெல்லாம் எழுதி வாங்கிக் கொண்டு, பார்வையிலேயே நம்மை எக்ஸ்ரே செய்து அனுப்பு கிறார்கள்.

வழியில் குறுக்கிடும் காவலர்களுக்கெல்லாம் பதில் சொல்லி, மூன்று கேட் தாண்டியதும் பச்சைப் புல் வெளி. சரியாக ஸ்டேடியத்தின் நடுவில் பான்பராக் கடைக்காரரின் குடை. அடியில் உட்கார்ந்திருக் கிறார் எஸ்.ஐ. ஒருவர். ஆடு களத்தை சுற்றிலும் கையில் 303 துப்பாக்கியுடன் காவலர்கள்.

"இப்படிப் பனியிலும் வெய்யி லும் பிட்சை பாதுகாத்துக் கொண்டிருப்பது மிகக் கடுமை யான ஒரு விஷயமல்லவா?"


"இதுக்காகத் தானே ஸார் நாங்க இருக்கோம்"- சலிப்பில் லாமல் வருகிறது குரல்.

'ஒரு கிரிக்கெட் டெஸ்ட், இந்தியாவின் கௌரவத்துக்குச் சவால் விடுவதா?... விடமாட் டோம். எந்த ஒரு சின்னச் சம்பவமும் நடக்க விடமாட் டோம். விளையாட்டுக்களில் அரசியல் விஷ(ய)த்தைக் கலக் கலாமா?' என்று காக்கிச் சட் டைகளின் பரபரப்பு.


கிரிக்கெட் பந்தோபஸ்து



• அசோக் கும்பத்



• டி. ராதா கிருஷ்ணன்.



• போலீஸ் பாதுகாப்புடன் பிட்ச்!

என்பது ஜாலியான நாட்களாக இருந்ததெல்லாம் இப்போது போயே போய் விட்டது.

''டென்ஷன் ஸார்''- கூடுதல் துணைக் கமிஷனர் தணிகாசலம் காலரியின் ஒரு மூலையில் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார். பக்கத்தில் மிகவும் களைப்புடன் உதவிக் கமிஷனர் திருவேங்கடம்.

“இந்த ஏரியா முழுதும் நமக்கு அத்துபடி. 71ல் இங்கே எஸ்.ஐ.ஆக இருந்தபோது இந்த ஸ்டேடியத்தைச் சுற்றிச் சுற்றி வந்து, டிராபிக் ஏற்பாடு, கார் பார்க்கிங், வி.ஐ.பி. வருகை எல்லாவற்றையும் கவனித்திருக்கிறேன். வங்கக் கடல் காற்றுக் கூட, பர்மிஷன் வாங்கிட்டுத்தான் உள்ளே வரணும். காக்கி உடுப்புக்கள் போட்ட போலீஸார் மட்டுமல்ல; யூனிஃபார்ம் போடாத நூற்றுக் கணக்கான பேர் சுற்றிலும் இருக்காங்க தெரியுமா?'' தணிகாசலம் தோழமையுடன் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

ஆடுகளத்துக்கு 24 மணி நேரமும் ஒரு உதவிக் கமிஷனர் தலைமையில் காவல்.

“எங்கள் கால்கள் ஆடுகளத்துக்கு அருகிலும் செல்ல வேண்டிய நிலை வரும் என்று ஒரு போதும் நினைத்தது கிடையாது ஸார்...''- எஸ்.ஐ. ஒருவர் சொல்கிறார்.

துப்பாக்கியுடன் நான்கு காவலர்கள். ஒவ்வொருவரும் தினசரி ஆறு மணி நேரம் டூட்டி. ஸ்டேடியம் முழுக்க, எலெக்ட்ரிக் வேலை, வெள்ளை அடித்தல் என்று ஏகப்பட்ட



[illegible]

ஆட்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரும், பாஸ் கொடுக்கப்பட்டு கண்காணிப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.

மாடியில் உள்ள கிரிக்கெட் அலுவலகம். ஊழியர்கள் வருடக் கணக்காய் வேலை செய்பவர்கள். வருடப்படுவதும் (செக்யூரிட்டி செக்) டிபன் பாக்ஸை காண்பிப்பதும் புது விதமான அனுபவங்கள். டி.என்.சி.ஏ.வில் ஒரு முக்கிய நபர். மனிதரை வாசலில் நிறுத்தி விட்டார்கள்! ''என்னய்யா என்னையே நிறுத்தரே... ஹைகோர்ட்லே போய் ஸ்டே வாங்கிடுவேன்'' என்று மனிதர் ஆவேசமாகி விட்டார். நிலைமையைச் சொல்லி, பாஸை கழுத்தில் மாட்டி விட்டோம்! என்ன ஸார் பண்றது? இப்படிச் சில பேர்!''



''அம்மா.. உன்னோட மருமகள் போட் கடுதாசு டிருக்கா...''
''என்னவாம்?''
''அத்தையை நாய் கடித்துவிட்டது என்று கேள்விப்பட்டேன்... தற்போது நாய்க்கு எப்படியிருக்கிறது? ஆபத்து ஒண்ணுமில்லையே...?''
- புளியறை கணேசன்

''மாட்ச் அன்றுதான் கெடுபிடிகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் இப்போது கொஞ்சம் வித்தியாசம்... அவ்வளவுதான்!'' ஊழியர்கள் எல்லோரும், மாறி இருக்கும் சூழ்நிலையுடன் ஒன்றிப் போய் ஒத்துழைப்பு நல்கிக் கொண்டிருக்கிறார்கள்.

''இவ்வளவு உஷாரா இருந்தும் கூட, பாருங்க... இன்னிக்கு மதியம் ஒருவன் உள்ளே வந்து சாக்கு நிறைய நரகலைக் கொண்டு வந்து போட்டு விட்டான். பிடித்து விசாரித்ததில் ஹிந்திதான் பேசுகிறான். இந்த வம்பெல்லாம் நமக்கு வேண்டாம் ஸார்.'' விஷயத்தைச் சொன்ன திருப்தியில் ஓடி விடுகிறார் அந்த ஊழியர்.

டென்ஷன் பார்ட்டிகளுக்கு நடுவில் புகை+புன்னகையுடன் இருப்பவர் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கச் செயலாளர் அசோக் கும்பத் மட்டும்தான்.

''தொ... பாருங்கோ... மெட்ராஸ் கிரௌண்ட் ஸ்போர்ட்ஸ் லவ்விங் கிரௌண்ட்'' என்று உற்சாகமாகப் பேசுகிறார்.

''ஒரு மாமாங்கம்-அதான் பன்னெண்டு வருஷம் ஆச்சு ஸார் சென்னையில் இந்தியா-பாகிஸ்தான் டெஸ்ட் விளையாடி. நிறைய கூட்டம் வரும்னு எதிர் பார்க்கிறோம். வரணும். இந்த மாதிரி சமயத்திலே விளையாட்டு ரசிகர்கள் தங்கள் ஒற்றுமையைக் காண்பிக்கணும். இதைக் கண்டு கலாட்டா செய்ய நினைக்கும் ஆட்கள் ஓட்டம் பிடிக்கணும். எப்படி நான் சொல்றது?'' கும்பத்தை தொடர்ந்து பேச விடாமல் செல்போன்களும் தரை போன்களும் சிணுங்குகின்றன.

''விளையாட்டின் நுணுக்கங்களைப் பற்றி முழுதும் அறிந்தவர்கள் சென்னை ரசிகர்கள். அம்பயர், பாகிஸ்தானுக்கு எதிராக அழுகுணித் தீர்ப்புக் கொடுத்தால் அதைக் கண்டிக்கும் விசால மனம் படைத்தவர்கள். இதே பிட்சுலே ஒருநாள் மாட்சுல பாக் வீரர் அமீர் சோயல் 197 அடித்த போது என்ன ஒரு உற்சாகம்''- கும்பத்தின் உதவியாளர் சொல்கிறார்.

இவர் டு கமிஷனர் ஆபீஸ்.

ரம்ஜான் தினம். மாலை நான்கு மணிக்கு காலை டிபனையும், மதிய லஞ்சையும் ஒரு சேர சாப்பிட்டு விட்டு, ஒரு மில்லி கிராம் களைப்பு கூட தெரியாமல், ''சொல்லுங்க ஸார்!'' என்கிறார் இணைக் கமிஷனர் டி. ராதா கிருஷ்ணன். சேப்பாக்கம் ஸ்டேடியம் அமைந்திருக்கும் ஏரியா இவரது கண்ட்ரோலுக்குள் தான் வருகிறது. பேச்சில் கனிவு இருந்தாலும், அதனுடன் இணைந்து வெளிப்படும் தீர்மானமான முடிவுகள்.

''எங்கள் பாதுகாப்பு கெடுபிடிகள் காரணமாக ரசிகர்களின் உற்சாகத்துக்கு எந்தக் குறைவும் வராது. ஆனால் அவர்



"பாகிஸ்தானுடன் நட்புக்கே சாத்தியமில்லை!"

– தமிழக சிவசேனா தலைவர்

பால்தாக்கரே சிஷ்யர்கள் மாட்சில் குழப்பம் விளைவித்து, தமிழ் நாட்டுக்கு அவப் பெயர் தேடித் தந்து விடுவார்களா? தமிழ் நாட்டில் சிவசேனா இருக்கிறதா? முன் னெச்சரிக்கையாக, கைது செய்யப்படு வதைத் தவிர்த்து தலை மறைவாக இருந்த தமிழக சிவசேனாவின் பொதுச் செயலாளர் எஸ். தென்மறவனை தேடிப் பிடித்துச் சந்தித் தோம். தேவர் மக்கள் முன்னணி என்ற அமைப்பின் தலைவராகவும் இவர் இருக் கிறார்.

"(சசிகலா) நடராஜன் என் நண்பர் தான். ஆனால் பார்த்து இரண்டு வருஷம் ஆச்சு!" என்கிறார். தமிழக சிவசேனாவில் 75,000 உறுப்பினர்கள் இருக்கிறார்களாம்! பால் தாக்க ரேவை இரண்டு முறை சந்தித்திருக்கிறாராம்.

"பாம்புகளைப் பிடித்து பார்வையாளர் மத்தியில் விடுவோம் என்றெல்லாம் சொல்லி யிருக்கிறீர்கள். இதெல்லாம் சரியா? நியா யமா?"

"எங்கள் மும்பைத் தோழர்கள் சொன்ன செய்தி அது. நாங்கள் அது போலச் செய்ய மாட்டோம். ஆனால் ஆயிரம் தொண்டர்கள் டிக்கெட் வாங்கிக் கொண்டு செல்வார்கள். மாட்சை நிறுத்த முயற்சி செய்வோம். வன்முறையில் இறங்கவே மாட்டோம்!"

"இது இந்தியாவின் கௌரவப் பிரச்னை மட்டுமல்ல... தமிழ கத்தையும் பாதிக்கும் விஷயம் அல்லவா?"

"நாட்டின் எல் லையிலும் உள்ளேயும் குழப்பத்தை விளை வித்து சதிச் செயல் களைத் தூண்டி வரும் பாகிஸ்தானுடன் நமக்கு விளையாட்டு உறவு இருப்பது கூட சரியல்ல. எனவே எங் கள் தேசப் பற்றைக் காட்டுவதற்கு இதை ஒரு வாய்ப்பாக எடுத் துக் கொண்டிருக் கிறோம். தமிழகத்தில் இரண்டு பிரதான கட்சி கள் அவற்றின் தலைவர்கள் திருமணம் போன்ற சமூக நிகழ்ச்சிகளில் ஒருவரை ஒருவர் சந்திப்பதைத் தவிர்த்து பகைமை பாராட்டுகிறார்கள். அப்படியிருக்க, நமது நாட்டுக்கு எதிராக சதிச் செயல்களில் இறங்கி யிருக்கும் பாகிஸ்தானுடன் இந்த அளவு நட்பு இருப்பதற்கான சாத்தியமே இல்லை."

"உங்களுக்கு மட்டும்தான் தேசப் பற்றா? லட்சக் கணக்கான கிரிக்கெட் விசிறிகளுக்குக் கிடையாதா?"

"எந்த ஒரு விஷயத்துக்குமே, நிறைய ஆதரவு இருந்தாலும் களத்தில் இறங்கிப் போராடுபவர்கள் மைனாரிட்டியாகத் தான் இருப்பார்கள். எனவே எங்கள் நிலைக்கும் ஆதரவு கொடுப்பவர்கள் இருக்கவே செய் வார்கள்."

–நம்மிடம் அவசரமாக விடை பெற்று மீண்டும் தலைமறைவானார் தென்மறவன்.

களும் எங்களுடன் ஒத்துழைக்க வேண்டும். ஆயிரக் கணக்கான சிவசேனா ஆட்கள் வெளி இடங்களில் இருந்து வருகிறார்கள் என்பதெல்லாம் வதந்திகள்தான். எங் களைப் பொறுத்த மட்டில், முழுப் பாது காப்புக் கொடுப்பதற்கான எல்லா ஏற் பாடுகளும் தயார். சென்னை ஏர்போர்ட் டில் இறங்குவது முதல், ஆடி முடித்து மீண்டும் விமானம் ஏறுவது வரை பாகிஸ்தான் அணியினருக்குப் பாதுகாப் புக் கொடுத்து, இந்தியாவே தமிழ்நாடு காவல் துறையைப் பாராட்டும் விதமாக நடத்திக் காட்டுவோம். ஆனால் எங்கள் செயல்பாட்டின் விவரங்களை உங்களு டன் பகிர்ந்து கொள்ள முடியாது!"– குரலில் நம்பிக்கை தொனிக்கிறது.

— ப்ரியன்

படங்கள்: ராஜன்

அட்டை வண்ணப்படம் (டெண்டுல்கர்) : சாரி

"மற்ற விளையாட்டுகளுக்கு இல்லாத முக்கியத்துவம் கிரிக்கெட்டுக்கு ஏன்?" என்று சில பிரபலங்களிடம் கேட்டபோது...



டாக்டர் ஆனந்த கிருஷ்ணன் (முன்னாள் துணைவேந்தர் – அண்ணா பல்கலைக் கழகம்): சின்ன வயதிலிருந்தே காசு செலவில்லாமல், அதிக இடம் தேவைப்படாமல் ஆட முடிவதால்தான் கிரிக்கெட் இவ்வளவு பிரபலமாகி விட்டது!

ராஜரத்னம் (கபடி வீரர்) : மற்ற விளையாட்டுகள் போல் இல்லாமல், கிரிக்கெட் என்பது மிகவும் சுதந்தரம் கொண்ட ஒரு

கிரிக்கெட்டுக்கு இத்தனை பிரபலம் ஏன்?

'போர்டின்' வசம் இருக்கிறது. அவங்க இதை ப்ரொபஷனலாக, பணத்தையும் குவிக்கிற வகையில் திட்டமிட்டுச் செய்கிறார்கள். அதற்கான வசதி வாய்ப்பும் அவங்ககிட்டே இருக்கு. கிரிக்கெட் வீரர்களுக்குப் பந்தயங்களின் மூலமாகவும் மாடலாகத் தோன்றுவதன் மூலமாகவும் கிடைக்கும் எக்கச்சக்க வருமானமும் இங்கே கிரிக்கெட் வளர முக்கியமான காரணம். 1990ல் பெய்ஜிங்கில் நடந்த ஆசிய விளையாட்டுகளில் கபடியில் தங்கம் பெற்றுத் திரும்பினோம். வீட்டு மனை ஒன்று தருவதாக வாக்களித்தது அரசு. செய்திகள் வந்தனவே தவிர, அந்த மனை சுலபத்தில் கிடைத்து விடவில்லை. அடுத்த ஆசிய விளையாட்டில் (1994ல் ஹிரோஷிமாவில் நடந்தது) மீண்டும் தங்கம் பெற்றபோது மாநில அரசு ஃப்ளாட் தருவதாகக் கூறியது. நாலு வருடங்களுக்கு மேலாகியும் அது கைக்கு வரவில்லை. ஒரு வழியாக சமீபத்தில் "மனையை திருப்பிக் கொடுத்தால் ஃப்ளாட் தருகிறோம்" என்று இப்போது கூறியிருக்கிறார்கள். இந்தச் சூழலில் இளைஞர்களுக்கு பிற விளையாட்டுகளில் எப்படி ஆர்வம் வரும்?



டாக்டர் கனிஜி சாலமன்: "அற்புத ஆட்டம் என்பதோடு கனவான்களின் ஆட்டம் என்ற கருத்தும் இதற்கு முக்கியத்துவம் வந்ததற்கு முக்கிய காரணம். கிரிக்கெட் ஹீரோக்களுக்குக் கிடைக்கிற பிரபலமும் ஒரு காரணம். ஆனால் ஐந்து நாள் போட்டிகளை ஒழித்து விட்டு, ஒருநாள் பந்தயங்கள் மட்டுமே நடத்தப்பட வேண்டும். நேரம் மிச்சமாகும்.



எஸ்.வி. சேகர்: இங்கு கிரிக்கெட்டின் புகழுக்கு முக்கியக் காரணம் அதில் இந்தியா அடிக்கடி வெற்றிகளைக் குவித்து வந்திருப்பதுதான். எலெக்ட்ரிகல் என்ஜினியரிங் படிக்க ஆசைப்படும் மாணவன், மெக்கானிகல் பிரிவில் படிக்கும்படி நேருவதில்லையா! அந்த மாதிரி பிற விளையாட்டுகளில் ஆர்வம் உள்ள இளைஞர்கள் கூட கிரிக்கெட்டுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தால் அதில் பெயர் வாங்கவே ஆசைப்படுகிறார்கள்.





ஷைனி வில்சன்: அதிகபட்சமாக ஒரு டஜன் நாடுகள்தான் கிரிக்கெட் ஆடுகின்றன. அதிலும் ஒரு பந்தயத் தொடர்ணா வெறும் மூணு நாடுகள்தான். ஆனால் தடகளம் போன்ற விளையாட்டுகளில் சர்வதேச அளவில் ஆடும்போது நூற்றுக்கும் மேற்பட்ட நாட்டு வீரர்களோடு போட்டியிடுகிறோம். கிரிக்கெட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கட்டும். ஆனால் அதே அளவு முக்கியத்துவம் பிற விளையாட்டுகளுக்கும் கொடுக்கணும். முக்கியமாக ஆசிய விளையாட்டுக்கள், ஒலிம்பிக் ஆகியவற்றில் இடம் பெற்றுள்ள விளையாட்டுகளுக்கு, மீடியாவில் அதிகம் இடம் கிடைத்தால் மீதி விளையாட்டுகளுக்கும் இளைஞர்கள் முன்னுரிமை கொடுப்பாங்க.

— குல்லூ

Make aeroplanes at home



Short Story Contest Results

A TEACHER'S PROBLEMS

Lots of fun, lots to read

FEBRUARY '99
Rs. 6/- only

GOKULAM

The monthly magazine for children

47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097



• ஸ்ரீநாத்



• ஆசீப்

இந்தியாவின் செல்லப் பிள்ளை!

ஆசிய விளையாட்டு களில் தென் கொரியா, சீனா, ஜப்பான் போன்ற பல நாடுகள் எக்கச் சக்கமாக மெடல்களை அள்ளிக் குவிக்க, இந்தியாவுக்கு ரேஷன் அரிசி நிலையில் தான் மெடல்கள்!

இதற்குக் காரணம் கேட்டால் கூறப் படும் முக்கிய குற்றச் சாட்டுகளில் ஒன்று, நம் நாட்டில் கிரிக்கெட்டுக்கு அளிக்கப்படும் அதிமுக்கியத்துவம்; பிற விளையாட்டு களிடம் காட்டப்படும் மாற்றாந்தாய் மனப்பான்மை.

பள்ளிச் சிறுவர்களிலும் பெரும் பாலான மாணவர்களின் முதல் சாய்ஸ் கிரிக்கெட்டாகவே இருக்கிறது. விளையாட்டு என்றாலே கிரிக்கெட் என்ற நிலை உண்டானதேன்?

இதை அறிய சென்னை தூய பீட்ஸ் உயர் நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடந்து கொண்டிருந்த கிரிக்கெட் கோச்சிங் கேம்ப்பிற்குச் சென்றோம். கிட்டத்தட்ட தினமுமே கோச்சிங் நடக்கிறது. பிற பள்ளி மாணவர்களும் இதில் கலந்து கொள்ளத் தடையில்லை.

"ஜடேஜாவின் ஆட்டம் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவரை மாதிரி பீல்டிங் செய்யணும்னு எனக்கு ஆசை. எனக்கு கேரம், செஸ் ஆகிய விளையாட்டுகளிலும் இன்ட்ரெஸ்ட் உண்டுன்னாலும் அப்பாவுக்குக் கிரிக்கெட் பிடிக்கும். அதனால என்னையும் கிரிக்கெட் பயிற்சிக்கு அனுப்பினார்" என்றான் ஸ்ரீநாத். சிவசாமி கலாலயா மாணவன்.

சிறுவர்களுக்கு கிரிக்கெட் ஆர்வம் இருக்கிறது என்பதை விட அவர்களுடைய பெற்றோருக்குத் தங்கள் பிள்ளை கிரிக்கெட்டில் கொடிகட்டிப் பறக்க வேண்டும் என்ற ஆர்வம் கொழுந்துவிட்டு எரிகிறது என்பதை அங்கு பயிற்சிக்கு வந்திருந்த பல மாணவர்களிடம் பேசிப் பார்த்த போது புரிந்தது.

செயின்ட் மைக்கேல்ஸ் பள்ளியில் படிக்கும் காஷ்யப் சுரேஷ் கூட "எனக்கு எல்லா ஸ்போர்ட்ஸும் இஷ்டம்தான். ஆனால் என் அம்மா நான் கிரிக்கெட் தான் கத்துக்கணும்னு ஆசைப்பட்டாங்க. அதனால்தான் ஒரு வருடமா பயிற்சி எடுத்துக்கறேன்" என்றான். தனது லட்சிய ஹீரோவாக ஆலன் டொனால்டை குறிப்பிட்டான்.

இப்படி ஒவ்வொரு சிறுவனுமே ஒரு குறிப்பிட்ட கிரிக்கெட் வீரரின் தீவிர விசிறியாக இருப்பதோடு, தானும் அவரைப் போலவே ஆக வேண்டும் என்ற ஆசையில் பயிற்சி செய்கிறான். இந்தியா முழுவதும் உயிரைக் கொடுத்து கிரிக்கெட் பயிற்சி செய்யும் சிறுவர்களில், எத்தனை பேர் வருங்கால இந்திய கிரிக்கெட் குழுவில் இடம் பெற்றுவிட முடியும்? இது போன்ற யதார்த்தங்களெல்லாம் கிரிக்கெட்டின் மவுசைக் குறைத்து விடவில்லை.

நங்கநல்லூரில் வசிக்கும் ஆசிப், மயிலாப்பூரில் உள்ள செயின்ட் பீட்ஸ் பள்ளியில் சேர்ந்து படிக்கக் காரணமே அங்கு நன்றாக கிரிக்கெட் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதுதான். "யார் என்ன சொன்னாலும் நான் கிரிக்கெட்டுக்குத்தான் முன்னுரிமை கொடுப்பேன். ஒரு கிரிக்கெட் மேட்சிலே 'மேன் ஆஃப் தி மேட்ச்'ன்னு பேர் வாங்குவது எவ்வளவு அற்புதமான விஷயம்!



• பழனி



• சுரேஷ்



• ரோனக்

அதுதான் என் கனவு. கால்பந்திலேயெல்லாம் இப்படி எங்கே கொடுக்கறாங்க?" என்று தனது கிரிக்கெட் அபிமானத்துக்குக் காரணம் கூறினான் இந்த அஸாருதீனின் தீவிர விசிறி.

"கால் பந்து, ஹாக்கி இதுமாதிரி விளையாட்டுக்கெல்லாம் கட்டாயம் பெரிய மைதானம் வேண்டும். ஆனால் கிரிக்கெட்டெல்லாம் சந்தடி குறைவான தெருவிலேயே ஆடிப் பயிற்சி பெறலாமே! அப்படி எங்க ஏரியாவிலே ஆடினதாலே தான் எனக்குக் கிரிக்கெட்டிலே இன்ட்ரஸ்ட் வந்தது!" எனும் டி.ஏ.வி பள்ளி மாணவன் ரோனக், "சீரியஸா கிரிக்கெட் கத்துக்கிட்டு நாட்டுக்கு உதவணும்றதுதான் என் ஆசை, டெண்டுல்கர் மாதிரி" என்றும் குறிப்பிட்டான்!

"உலக அளவிலே கிரிக்கெட்டிலே தானே நம் நாட்டு அணி பேசப்படுது. அதனாலே நிறையப் பேர் கிரிக்கெட் கத்துக்கிட்டு வந்து நம் நாட்டுப் பெருமையைத் தொடர்ந்து காப்பாற்றணும்" என்ற ரகு, சின்மையா வித்யாலயாவில் படிக்கிறான். ராகுல் டிராவிடைப் போல, டெக்னிக் கைவரப் பெற்ற கிரிக்கெட் வீரனாவதே இவனது லட்சியம்.

நாம் சந்தித்த எல்லாச் சிறுவர்களுமே தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் கிரிக்கெட் பந்தயங்களை விடாமல் பார்பதாகவும், அதன் மூலமாகவே கூட தங்கள் கிரிக்கெட் ஆர்வம் வளர்ந்ததாகவும் ஒத்துக் கொண்டார்கள்.

தொலைக்காட்சியில் கிரிக்கெட்டுக்கு மட்டும் ஏன் இப்படி ஒரு சிறப்பிடம்? இதே போன்று மற்ற விளையாட்டுப் பந்தயங்களையும் ஒளிபரப்பினால், நாளடைவில் அந்த விளையாட்டுகளிலும் சிறுவர்களுக்கு ஆர்வம் ஏற்படுமே என்ற நமது கருத்துக்கு விளக்கமளித்தார் அந்தப் பயிற்சி காம்ப்பை நடத்தி வரும் செயின்ட் பீட்ஸ் ஸ்போர்ட்ஸ் ஃபவுன்டேஷனின் இணைச் செயலாளர் பழனி.

"ஒரு கிரிக்கெட் மேட்ச் சுமார் ஏழு மணி நேரம் நடக்கிறது என்பதால்தான் ஸ்பான்ஸர்கள் இந்த விளையாட்டுக்கு அதிக அளவில் வருகிறார்கள். தவிர மீதி விளையாட்டுகளை திரையில் காட்டும் போது, இடையில் விளம்பரங்கள் போட முடியாது. ஆனால் கிரிக்கெட்டைப் பொறுத்தவரை ஒரு ஓவர் முடிந்து அடுத்த ஓவர் தொடங்குவதற்குள் விளம்பரங்களை அழகாகத் திட்டமிட்டு ஒளிபரப்ப முடியும். சென்னை போன்ற பெருநகரங்களில் சிறந்த கிரிக்கெட் வீரர்களுக்கு நிச்சயம் வேலை வாய்ப்பு பிரகாசமாகவே இருக்கிறது. கிரிக்கெட் மோகத்துக்கு இதெல்லாமும் காரணம்..." என்றார்.

— ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : **வெங்கடேஷ்**



"ஸ்டவ்ல என்னப்பா வச்சிருக்கீங்க?"

சித்தேரி மலை வனத்துறைக் குடியிருப்பில் ஃபாரஸ்டர் க்வார்ட்டர்ஸின் மேல் படியில் நின்று அவன் கத்தினான். பாஸ் என்று பெயர்ச் சுருக்கம் பெற்ற இருபத்து நான்கு வயது பாஸ்கரன்.

அவன் முகத்தில் எரிச்சல்.

படிகள் கீழே இறங்கிய சரிவில், வளைந்த திருப்பத்துத் தார்ச் சாலையில் ஒரு கருங்குரங்கு காலைச் சூரிய வெதுவெதுப்பை அனுபவித்தவாறே, சாவதானமாக நடந்து, சாலை கடந்தது. தாங்கள் போட்டு முடித்த சாலைக்கு என்ன அழகான உபயோகம் என்று நினைத்தான் பாஸ்.

கிழக்கே வனத்துறை பயணியர் விடுதி அருகில், செம்மண் மைதானத்தில் வாலி பால் 'வார்ம்-அப்' செய்து கொண்டிருந்தார் கந்தசாமி. அடுத்த வாரம் அவருக்கு அறுபது வரப் போகிறது.

மைதானத்திலிருந்தே திரும்பிப் பார்த்து அவர் "மக்காச் சோளம்" என்றார்.

"கேக்கலே" பாஸ் மீண்டும் கத்தினான்.

"செவிட்டுப்பயலே. மக்காச் சோளம்டா." கந்தசாமி குரல் உயர்த்தினார்.

பாஸ் மீண்டும் கத்தினான்.

"நீங்க சுத்த போர்ப்பா."

பாஸ் வாய் மூடும் முன், கந்தசாமி 'ஹெட்' செய்த வாலி பால் ஜிவ்வென்று பாஸ் நின்ற படியில் இறங்க வந்தது.

வேகமாய் ஒரு படி இறங்கிய பாஸ், சட்டென்று கை உயர்த்தி பந்தைப் பிடித்துக் கொண்டான்.

திருப்பி அவரிடம் பந்தைப் போடாமல் கக்கத்தில் இடுக்கினான்.

"அண்ணன் வந்தா இதைச் சாப்பிடுமா?"


"பந்தைப் போட்றா!"

"பதில் சொல்லுங்கப்பா."

"கீழ்த்தண்டாவிலேர்ந்து அவன்தாண்டா வாங்கியாந்தான்."

"மக்காச் சோளம்? காலைல டிபன்?"

" 'ஹாட்-பேக்'கிலே கொள்ளுக் கஞ்சி போட்டு வச்சிருக்கேன்!" கந்தசாமியின் இரண்டு கைகளும் இடுப்பின் மீது ஏறின. அந்த உயரமும் மிடுக்கும் மூத்தா நான்



ரேஞ்லே கொண்டு போயி நிறுத்தப் போறீங்க."

"டேய் டேய்... நேத்து இடியாப்பம் தக்காளி சூப்பு, மூந்தா நாள் இட்லி வடகறி... அதுக்கு முன்ன நாள் பூரி உருளை..." கந்தசாமி இளைய மகனுக்கு 'எந்நன்றி கொன்றார்க்கும்' தொனியில் ஆரம்பித்தார்.

"ஸ்டாப்... ஸ்டாப்! நான் டி.ஈ. ஆபீஸ் போகணும். ரிப்பேரான ஜீப்பை கொண்டு போய் விடப் போறேன். அங்ஙல டிபன் சாப்டுக்கறேன்."

"என்னண்ணா காலைல சச்சரவு?"

பெண் குரல் கேட்டுத் திரும்பினார்.

சின்னம்மிணி தலைக்கு ஹாட் வைத்து நர்ஸ் யூனிபாரத்தில் மைதான ஓரமாக நின்றாள். ரிடயர்மெண்ட் நெருங்கினாலும் ஒரு வசீகரக் களை. சித்தேரி அரசு மருத்துவமனை அவளுக்கு விடை கொடுக்க நாள் எண்ணிக் கொண்டிருந்தது.

"அது ஒன்னுமில்லேம்மா! சுடு தண்ணி வெக்கலியான்னு கேக்கறான்." கந்தசாமி பொய் சொன்னார்.

பாஸ் காதில் விழவே இடை மறித்தான்.

"ஆண்ட்டி.. டூப் அடிக்கிறார். காலைல டிபனுக்கு மக்காச்சோளமும் கொள்ளுக் கஞ்சியும் சாப்பிடணுமாம்!" என்று படி இறங்கிக் கத்தினான்.

"போங்கண்ணா நீங்க... வயசுப் புள்ளைக்கு நாக்கு வயணம் தான் கேக்கும்"

வையவன்

சேலத்தில் செகண்ட் ரன்னில் செகண்ட் ஷோ பார்த்த ஸ்பார்ட்டகஸ் படம் நினைவு வந்தது.

'அப்பா கிர்க் டக்ளஸ் சாயல்' என்று அவன் முதன் முறை கண்டு பிடித்தான்.

"நீங்களும் அந்த மகாத்மாவுமே மக்காச்சோளம் சாப்பிடுங்க! நான் டிகேபி ஹோட்டலுக்குப் போறேன்."

"இன்னிக்கு கடை லீவு. புருஷன் பொண்டாட்டி ரெண்டு பேருமே மொரப்பூர் கல்யாணத்துக்குப் போய்ட்டாங்க. ஒன்னு பந்தைப் போடு. இல்லே எறங்கி வா. ரெண்டு பேருமே வார்ம்-அப் பண்ணுவோம்."

பாஸ் பந்தைப் போடவில்லை.

"நொந்து போன குரலில், "மக்காச்சோளம்... கொள்ளுக்கஞ்சி! ஆதிவாசி



''பத்திரிகை ஆசிரியரா இருந்தவருக்கு பள்ளிக் கூடத்தில் ஆசிரியர் வேலை கொடுத்தது தப்பாப் போச்சு...''

''ஏன்?''

''பரீட்சை எழுதிய மாணவர்களுக்குக் குலுக்கல் முறையில் பிரமோஷன் கொடுக்கிறார்!''

– ஆரூர்சேகர்

என்று அவரிடமும் முகம் திருப்பி "காலைல வெண் பொங்கல் பண்ணியிருக்கேன்... நீ வர்றியா...நான் கொண்டு வரட்டா?" என்று பாஸிடமும் சொன்னாள் சின்னம்மிணி.

"நானே வந்துடறேன்... பத்து நிமிஷம்... குளிச்சுட்டு வர்றேன்" என்று படியின் மேலிருந்தே "அப்பா காச்" என்று பந்தை வீசி விட்டு க்வார்ட்டர்ஸுக்குள் ஓடினான் பாஸ்.

பந்தைக் கையில் ஏற்று வாங்கினார் கந்தசாமி. "இப்படியெல்லாம் இவனுங்க நாக்கை வளக்கக் கூடாதும்மா. ரிடயராயும் அப்பா சமைச்சுப் போடறாரேன்னு ஒரு ஒறப்பு வருதா பாரேன்" என்றார் கந்தசாமி.

அவர் உள்ளுக்குள் ஒரு ஸ்பீடா மீட்டர் இயங்கத் தொடங்கியது. சின்னம்மிணி கூப்பிட்டதுமே உள்ளே ஓடிய பாஸின் வேகம் அளந்தது.

சின்னம்மிணி மகள் திபிகா! வீட்டில் இருப்பாள்.

'பயல் திபிகாவைப் பார்த்து வழிய ஒரு தருணம் வாய்த்து விட்டது' என்று கணக்கிட்டார்.

கந்தசாமி கவலைப்படவில்லை. மகிழ்ச்சி அடைந்தார்.

'எப்படியோ விவகாரம் நல்லபடி முடிந்து சின்னவனாவது செட்டிலாகட்டும்' என்று சிந்தனை புரண்டது.

"என்னணா... நீங்களே எதுக்கு ரிடயராயிட்டேன்... ரிடயராயிட்டேன்னு தமுக்கு அடிக்கறீங்க? யார் நம்புவாங்க? யார் ஒத்துக்குவாங்க?..." என்றவள் இறுதி முத்தாய்ப்பாக "ம்ஹ்ம்" என்று ஒரு சிறு மூச்சு விட்டாள்.

"என்னம்மா பெருமூச்சு?"

கண்ணை உயர்த்தினாள். அவரது துளைக்கும் பார்வை தாங்காமல் மீண்டும் தாழ்த்தினாள்.

"இன்னிக்கி காலைல அவ்வளவு பனி இல்லே.... இல்லண்ணா" என்று பேச்சை மாற்றினாள்.

சின்னம்மிணி தன் ரிடயர்மெண்ட்டை நினைத்துப் பயப்படுகிறாள். அவருக்குத் தெரியும்.

ஏற்கெனவே சொன்ன சமாதானம் தோற்றுவிட்டது.

''ஆகறப்போ ஆவுது. பயந்து கலங்கினா நடக்காமல் போயிடுமா?''

"ஒங்களுக்கு என்னண்ணா... வாலிபால் இருக்கு. எங்க போனாலும் ஒரு டீம் சேத்துடுவீங்க. ஸ்போர்ட்ஸ்மேன் ஸ்பிரிட் இருக்கு. மூத்து முத்தா ரெண்டு பசங்க இருக்காங்க."

கந்தசாமி மறக்கிறவரல்ல. கிளறுகிறவரும் அல்ல. குறிப்பாக பிறர் வருத்தங்களை.. பிறர் கவலைகளை.

அவருக்கு ஒரு நிச்சயம் உண்டு.

இனி வழி இல்லை என்று மூடிய எந்த நிர்க்கதியின் கதவும் ஒருநாள் திறக்கும். எங்கோ எப்போதோ எப்படியோ. அதை வாய்விட்டுச் சொன்னால் கேட்பவர்கள் வெற்று ஆறுதல் என்று ஒதுக்குவார்கள்.

''என்னம்மா டி.எம்.ஓ. இன்ஸ்பெக்ஷன்னு ஃபாரஸ்ட் டிபி எல்லாம் ரிசர்வ் பண்ணீங்க!''

"அதுனாலேதான் பொங்கல், மெதுவடை பண்ணி வச்சேன். கேன்ஸலாயிட்டதுன்னு சந்தனக் கட்டை லாரியிலே மெசஞ்சர் வந்து சொல்லிட்டுப் போனான். கொஞ்சம் ஒங்களுக்கும் பொங்கல் குடுத்தனுப்பறனே!" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"வேணாம்மா... பொங்கல் ஹெவி ஐட்டம். இன்னிக்கு வயிறு லைட்டா இருக்கணும். சாயங்காலம் டீம் பாய்ஸுக்கு கோச்சிங். நாளைக்கு அரூர் டவுன் டீமோடே மேட்ச்."

''ஒங்க சௌர்யம்... பாரஸ்டர் எங்கேண்ணா?''

கந்தசாமியின் மூத்தமகன் ஆவுடையப்பனை சின்னம்மிணி பாரஸ்டர் என்றுதான் அழைப்பாள்.

''விடிகாலைலயே தேக்கு பிளான்

டேஷனுக்குப் போனான். ஏம்மா?"

"இல்ல... தீபிகாவுக்கு பிஸியோதெரபி கோர்ஸுக்கு விண்ணப்பத்திலே ஒட்ட பாஸ்போர்ட் சைஸ் போட்டோ வேணும் னாரே."

"அதான் முந்தா நாள் காலைல நிக்க வச்சு ஆவு தன் கைக் கேமராவிலே எடுத்தானே!"

"அது டெவலப் பண்ணி வந்துடுச்சி. ஒட்டிடுமேன்னா, பாரஸ்டர் வரட்டும்றா அவ!"

"என்னிக்கு கடைசித் தேதி?"

"பதினஞ்சு."

"ஒரு வாரம் இருக்கே! வந்தான்னா சொல்லியனுப்பறேன்."

சின்னம்மிணி நகரவில்லை. தலை குனிந்து நின்றாள். பந்தை இரண்டு தட்டு தட்டிக் கையில் எடுத்தார். அவள் நிற்பதில் ஒரு வித்தியாசம் உணர்ந்தார். என்னமோ இடறுகிறதே!

"என்னம்மா?"

அவள் நிமிர்ந்தாள்.

கண்கள் நிறைந்திருந்தன.

"ரோடு முடிஞ்சு போச்சு. தம்பி பாஸு நாளைக்கோ நாளன்னிக்கோ மலை எறங்கிடும். கூடவே நீங்களும் கௌம்பிடுவீங்க." அவளுக்குத் தொண்டை அடைத்தது.

அட இதென்ன இவள். காலையில் இந்த உருக்கு உருக்குகிறாள்.

இதை மாற்றவேண்டும். யோசித்தார்.

"ஒண்ணு செய்" என்றார்.

"என்னண்ணா?"

"சம்மந்தி ஆயிடு."

திடீரென்று வந்த வார்த்தைகள். எதிர்பாராதவை.

அவள் முகம் சுருங்கியது. கறுத்தது. தொண்டை கனைத்தாள்.

"அந்த பாக்கியம் எனக்கு இருந்திருந்தா அந்த பாடாவதி நடந்திருக்குமா? மூணு வருசத்துக்கு முன்னாடியே விதி உங்களை மீட் பண்ண வச்சிருக்குமே!"

சொல்லிவிட்டு சின்னம்மிணி பெருமூச்செறிந்தாள்.

அந்த பெருமூச்சு சித்தேரி மலையின் 2 கொண்டை ஊசி வளைவுகள் இறங்கி, தரை தொட்டு ப்ஸ் ஏறி ரயில் ஏறி, ஒரு பாலாற்றங்கரைக் கிராமத்தின் கல்யாணப் பந்தல் மீது படர்ந்தது.

அங்குதான் தீபிகாவின் துரதிருஷ்டக் கல்யாணம் நடந்தது.

மீண்டும் கந்தசாமி சுதாரித்தார்.

சின்னம்மிணி கண்ணீர் உதிரச் சிரித்து விட்டு, "வர்றண்ணா" என்று நகர்ந்தாள்.

ஆனால் கந்தசாமியின் உள் மனசில் ஸ்பீடா மீட்டர் முள் வேறு ஒன்றைக் குறித்துக் காட்டியது.

சம்மந்தி ஆய்விடு என்ற அவர் மறைமுகக் கோரிக்கையை சின்னம்மிணி என்ன சாதுரியமாக நிராகரித்து விட்டாள்!

தீபிகா சிரித்துக் கொண்டே பாஸுக்கு வெண் பொங்கல் பரிமாறினாள்.

அவள் சிரிப்பை பாஸ் விரும்பினான்.



"வேலைக்காரி முனியம்மா எதுக்கு உனக்கு பத்து ரூபா கொடுத்துட்டுப் போறா?"

"நம்ம வீட்டுக் கதைகளை எழுதி அனுப்பியதில் அவை பிரசுரமாகி விட்டதாம். அதற்குக் கிடைத்த சன்மானத்தில் எனக்கும் பங்கு தந்துட்டுப் போறா!"

– லலிதா செல்லப்பா

அது அவளுக்கும் தெரியும்.

"நீங்க சிரிச்சா விளக்கு வச்ச மாதிரி இருக்கு."

தீபிகாவுக்கு வயது இருபது. இருந்தும் பாஸ் மரியாதையோடு கூப்பிடுவான். அவள் அண்ணன் ஃபாரஸ்டர் ஆவுடையப்பனும்.

தீபிகா முதலில் கூச்சப்பட்டாள். மணமான மறுநாளே முறிந்துவிட்ட விவாக பந்தத்தின் வேதனை கண்ட அனுதாபத்தில் மரியாதையா? இப்படியும் நினைத்தாள். பிறகு பழகி விட்டது.

"எந்த விளக்கு?" என்று கேட்டாள்.

"புரியலே!"

"அகல் விளக்கா, குத்து விளக்கா, காமாட்சியம்மன் விளக்கா, ட்யூப் லைட்டா... சர்ச் லைட்டா?" அவள் விளக்கினாள்.

"அகல்" என்றான்.

இரண்டாவது கரண்டி வெண் பொங்கலை அவன் தட்டில் போட்டபடி.

"இப்படி ஜல் வச்சே எல்லா ஹேர் பின் பெண்டகள்ளேயும் ஜல்லி கொட்ட வச்சு, தார் ஊத்த வச்சு ரோலர் உருட்டி வேலை வாங்கி ரோட்டை முடிச்சுட்டீங்க!" என்றான்.

"ஒரு சின்ன திருத்தம்..." சிரிக்காமல் சொன்னான் பாஸ்.

"சொல்லுங்க."

"ஜல்லி லோடோட லாரியிலே வந்திருக்கேன். தார் மிக்ஸிங்ல அளவு பார்த்திருக்கேன். ரோடு ரோலர் டிரைவருக்கு ரெஸ்ட் குடுத்துட்டு டிரைவ் பண்ணியிருக்கேன்" என்றான்.

"ஆக ஒரு சகலகலா..." என்றாள் தீபிகா.

"பார்த்தீங்களா.. வார்தீங்களே!"



"வாங்கின காசுக்கு வஞ்சனை இல்லாமல் உழைக்கக் கூடியவர் நம்ம டாக்டர்தான்..."

"எப்படிச் சொல்றே?"

"கத்தியை வெச்சதுமே பேஷண்ட்டின் உயிர் போயிட்டுது. இருந்தாலும் முழு ஆபரேசனையும் பண்ணி முடிச்சிட்டுத்தான் ஆபரேஷன் தியேட்டரை விட்டு வெளியே வந்தார்!"

— எம். அசோக்ராஜா

அந்த வாரலை வரவேற்றான். ரசித்துக் குளிர் காய்ந்தான்.

அம்மா இறந்து பதி மூன்று வருஷமாய் ஒரு பெண் ஒளி அவர்கள் வீட்டில் வீசியதே இல்லை. எல்லா ஆண்களின் மண் காய்ந்த மனசிலும் உள்ள மழைத் துளி ஏக்கம் அவனுக்கும் உண்டு.

"வெண் பொங்கல் யார் பண்ணினது?" அவன் கேட்டான்.

"அம்மா."

"சூப்பர்னு சொல்லப் போறன்னு எதிர் பார்த்திங்க இல்லே?" என்று மடக்கினான் பாஸ்.

"நான் தான் செஞ்சேன்னா உங்களுக்கு ஐஸ் வேஸ்ட் ஆயிடும்" என்றாள் அவள்.

"ஐயய்யே... நான் ஐஸை வேஸ்ட் பண்றதே இல்லீங்க... அதெல்லாம் எங்க அண்ணாதான்!"

"இது அபாண்டம்" என்றாள் தீபிகா.

அவள் முகம் சிறிது மாறியது.

"அவர் வாயிலேர்ந்து ஒரு வார்த்தை உதிர்ந்தா... ஒரு முத்து உதிர்றது போல" என்று தொடர்ந்தாள்.

"அவ்வளவு கான்ஸன்ரேடட் ஐஸா?" என்றான் பாஸ்.

தீபிகா சிரித்து விட்டாள்.

"இல்லீங்க... அவர் யாரையும் சந்தோஷப் படுத்தவே முயற்சி பண்ண மாட்டார்!"

அவன் வார்த்தைகளை கூர்மையாகக் கவனித்து மனசில் குறித்துக் கொண்டான். ஒரு விள்ளல் வெண் பொங்கலை ஸ்பூனில் அள்ளி வாயில் போட்டுக் கொண்டான்.

பிறகு "அந்த கொணம் உங்களுக்குப் பிடிக்குமா?" என்று கேட்டான்.

"பிடிக்கறது வேற... மதிக்கறது வேற!" தீபிகா வார்த்தைகளைச் சிக்கனப்படுத்தினாள்.

"உதாரணமா?" பாஸ் விடவில்லை. துருவினான்.

"புடிக்கறது வெண் பொங்கல். மதிக்கறது மெதுவடை."

பாஸ் சிரித்து விட்டான்.

"அப்புறம்?" மேலே அண்ணனைப் பற்றி அவளிடம் திருவாய்மொழி கேட்க மனசு பரபரத்தது.

"தட்டிலேயே கைகழுவிடுங்க."

தீபா கத்திரித்து நிறுத்திக் கொண்டாள்.

சொல்லாமல் சொல்கிறாள். இதுதான் 'லிமிட்'. புரிந்தது.

"நான் வாஷ் பேஸின்லயே கழுவிக்கறேன்!" பாஸ் எழுந்தான்.


ஆவுடையப்பனுக்கும் தீபிகாவுக்கும் இடையே ஒரு கரங்கப்பாதை உண்டு என்ற ஊகம் அன்று அவனுள் உறுதியாயிற்று.

அவனுக்கு மனசு குறுகுறுவென்றது.

அகல் விளக்கை ஏற்றி, வீட்டு மாடத்தில் வைத்த மாதிரி.

'என்ன அற்புதமான அண்ணியாக இருப்பாள் இவள்!' அவன் மனம் தங்கள் வீட்டு ஸ்டவ் அடுப்பிலிருந்து தோட்டத்துப் பூஞ்செடி வரை தீபிகாவை வளைய வரவிட்டுப் பார்த்துக் கொண்டது. குதூகலித்தது.

(தொடரும்)





1999 ஜனவரி 31
வெகுதான்ய தை 17
மலர் : 57
இதழ் : 27

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

அராஜக அரசியல்!

பி.ஸி.ஸி.ஐ அலுவலகத்தில் நடந்த தாக்குதல், ஜனநாயகத்தின் மீது ஃபாஸிஸ சக்திகள் நடத்திய தாக்குதல் என்றே கொள்ள வேண்டும்.


'இனி இங்கே இயங்க முடியாது; கல்கத்தாவுக்கு அலுவலகத்தை மாற்றுகிறோம்' என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் இடம் பெயர்ந்து விட்டது! இந்தியாவின் கிரிக்கெட் இதயமாகக் கருதப்பட்ட மும்பை மாநகருக்குத் தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது சிவசேனை! நாட்டுக்கே அவப்பெயர் தேடித் தந்திருக்கிறது.

இத்தனைக்குப் பிறகும் பிரதமரும் அவரது அமைச்சரவை சகாக்களும் பால் தாக்கரேயையோ சிவசேனையையோ கண்டிக்கக்கூட இல்லை என்னும்போது, வெறிபிடித்த அந்த அமைப்புடன் அவர்கள் கொண்டிருக்கும் உறவைத் துண்டிக்க வேண்டும் என்கிற எண்ணம் எங்கேயிருந்து வரும்!

நடந்தவற்றுக்குத் தாங்கள் பொறுப்பல்ல என்று சிவசேனையினர் என்னதான் மறுத்தாலும், அதை நம்பமுடியாதபடிக்கு அவர்களே – தலைவர்களும் தொண்டர்களும் – மூச்சுக்கு மூச்சு வெறுப்பையும் விரோத பாவத்தையும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

எப்படியும் இந்தோ-பாக் கிரிக்கெட் பந்தயங்களைத் தடுத்தே தீருவோம்;

ஆயிரக்கணக்கானோர் சென்னைவரை பேரணியாக வந்து சிதம்பரம் ஸ்டேடியத்தில் பார்வையாளர்களோடு பார்வையாளர்களாக நுழைந்து கைவரிசையைக் காட்டுவோம்.



பாம்புகளைப் பிடித்து சேபாக் மைதானத்தில் விட்டு மேட்ச் நடக்கவிடாமல் செய்வோம்...

— என்றெல்லாம் சிவசேனை தரப்பில் பேசப்படுவதை இந்திய அரசாங்கம் கைகட்டி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறது.

சம்பவம் நடந்து நான்கு நாட்களான பிறகு சாவகாசமாகச் சில சிவசேனைத் தொண்டர்களைக் கைது செய்கிறது மும்பை போலீஸ். இந்த அழகில், தங்களுக்கு அவப்பெயர் தேடித் தருவதற்காக விரோதிகள் யாரேனும் பி.சி.சி.ஐ அலுவலகத்தைச் சூறையாடியிருப்பார்கள் என்று கதை கட்டுகிறது சிவசேனா.


ஏற்கெனவே அவர்கள் தேடிக் கொள்ளாத அவப்பெயரைப் புதிதாக யாரேனும் அவர்களுக்கு உண்டாக்கிவிட முடியுமா?

இதெல்லாம் நமது பிரதமரின் கண்களுக்கும் காதுகளுக்கும் மட்டும் தெரியவில்லை என்று சொல்ல முடியாது... தெரிந்தாலும் தெரியாத மாதிரி நடிக்கிறார் அவர்.

பிற கூட்டணிக் கட்சியினரின் வற்புறுத்தலினாலும் குறிப்பாக சந்திரபாபு நாயுடு வெளிப்படையாகத் தொலைபேசியில் அதிருப்தி தெரிவித்ததாலும் அத்வானி மும்பைக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவரை வேண்டா வெறுப்புடன் சந்தித்து, 'போனால் போகிறதென்று' ஒரு வருடத்துக்குத் தமது பாகிஸ்தான் பகிஷ்கரிப்பை ஒத்திப்போடுவதாக அறிவிக்கிறார் தாக்கரே. இதில் அவர் ஆணவம்தான் தொனிக்கிறதேயொழிய மனமாற்றம் அல்ல.

'எப்படியாவது கிரிக்கெட் பந்தயங்களை நடத்திவிடுவோம் — பலத்த பாதுகாப்பு அளிப்போம்' என்று அரசு தரப்பில் வாக்குறுதி தருவது நியாயம்தான். ஆனால் பிரச்னையின் ஒரு சிறு பகுதியை மட்டும் அணுகி, கிரிக்கெட் ஆர்வலர்களைத் திருப்திப்படுத்திவிட்டால் போதுமா...?

வெறுப்பை விசிறிவிட்டு மத துவேஷத்தை வளர்க்கிற அபாயகரமான அரசியலை அனுமதிப்பது, நாட்டின் சர்வநாசத்துக்கே வழிகோலும்.



சிவசேனையின் வெறுப்பு, இருமுனையில் கூர்தீட்டிய ஆயுதம் போன்றது. ஒரு முனை அண்டை நாடான பாகிஸ்தானைக் குறிபார்க்கிறது. மறுமுனை உள்நாட்டுச் சிறுபான்மையினரை அச்சுறுத்துகிறது.

இந்த விபரீதத்தின் முழுப் பரிமாணத்தை பிரதமர் உணராமல் இருக்க முடியாது. அனுபவஸ்தரான அத்வானி அறியாமல் இருக்க முடியாது.

ஆயினும் அவர்கள் சிவசேனையைச் சகித்துக் கொள்கிறார்கள் எனில் அதற்குக் காரணம் 'மஹாராஷ்டிராவிலும் மத்தியிலும் ஆட்சியில் நீடிக்க வேண்டுமென்ற பதவி ஆசை மட்டும்தானா?' என்கிற சந்தேகம் எழுகிறது நமக்கு.

'சிவசேனை போன்ற மதவெறி பிடித்த அமைப்பை நிராகரிக்கிறோம்; தாக்கரே போன்ற ஃபாஸிஸ தலைவரை ஏற்க மாட்டோம்...' என்று பேச முடியாமல் பி.ஜே.பியினரைக் கட்டுப்படுத்துவது அவர்களின் இதய அந்தரங்கத்தில் கொழுந்து விட்டெரியும் மதவாதப் போக்குதான் என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.

வாஜ்பாயி அண்ட் கோவின் பதவி ஆசை பிளஸ் ஹிந்து அடிப்படைவாதச் சேர்க்கை என்பது மற்றுமோர் இருமுனை ஆயுதம்!

கண்மூடித்தனமான வெறியுடன் பால் தாக்கரே ஓர் ஆயுதத்தைச் சுழற்றிக் கொண்டிருக்கிறார்; குருட்டாம்போக்கில் வாஜ்பாயி குழுவினர் மற்றொரு ஆயுதத்தை வீசிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நாட்டுக்கு அபாயமும் அச்சுறுத்தலும் அண்டை நாடுகளிடமிருந்து என்பதைக் காட்டிலும் இத்தகைய நிர்மூடமான அரசியல் போக்கினால்தான் என்பதை மக்கள் உணர வேண்டும்; எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இன்னொரு தேர்தல் வந்தாலும் பரவாயில்லை என்று உடனடியாக சிவசேனை சகவாசத்தைத் துண்டிக்க பி.ஜே.பி. முன் வருமா? இல்லாவிட்டால் இன்னொரு யுத்தத்துக்கு வழிகோலிவிடுவார் பால் தாக்கரே!

'இனம்' கண்டு கொள்ளல்

'வாழு - வாழ விடு' என்ற தலைப்பில், உதவ் தாக்கரே நடத்திய வன உயிரினங்களின் புகைப் படக் கண் காட்சியைப் பார்வையிட நல்ல கூட் டம்தான். 'இந்தச் சிங்கம், புலி, கரடிக் கூட்டத்தைக் காட்டிலும் கொடுமை யானவர்களை என் மகன் அரசியலில் சந்தித்திருப்பான்' என சிலாகித்தார் மூத்த தாக்கரே! 'வனவிலங்குகளை எல் லாம் ஃபோட்டோ பிடிக்க நிறைய காத் திருக்க வேண்டும்; சந்தர்ப்பத்தையும் நழுவ விடக்கூடாது; இந்த குணங்கள் அரசியலிலும், உதவ்வுக்கு உதவும்' என் றார் முதல்வர் ஜோஷி! ஆனால், பார் வையாளர்கள் புத்தகத்தில், ஒரு 'ஷாகா பிரமுகர்' (பேட்டைத் தலைவர்) எழுதி யிருந்தாரே ஒரு குறிப்பு – "I like the people in the photographs" என்று – டாப் டக்கர்! ஹே ரத்தத்தின் ரத்தமே! உன் கண்களுக் குப் புலப்பட்டது ஏனையோருக்கும் தெரிந்தால்... இந்த அரசியல்வாதி களை எல்லாம் காட்டுக்குத் துரத்தி விட்டு, அந்த விலங்குகளை எல் லாம் அரசியல் பண்ண விட் டிருப்போமே?

விஷ்ணு திலகம்!

பதவி நீக்கம் செய்யப்பட்ட அட்மிரல் விஷ்ணு பகவத், தில்லி வீட்டைக் காலி செய்து விட்டு, மும்பையிலுள்ள தம் சொந்த வீட் டுக்குத் திரும்பி விட்டார். தம் மீது "அபாண்ட மாக"ப் பழி சுமத்தியிருக்கும் அரசை எதிர்த்துப் போராட, இந்த தளபதி, பேனாவையே ஆயுதமாக்கப் போகிறாராம். நேவியுடனான




• மனைவியுடன் விஷ்ணு பகவத்: "கத்தி எதற்கு? பேனா போதுமே!"

தமது ஒன்பது மாத பந்தத்தை அடிப்படை யாகக்கொண்டு, ஒரு புத்தகம் எழுதப் போகி றாராம். "என் நிலையை நினைத்தால், எனக்கு லோகமான்ய திலகர்தான் நினைவுக்கு வரு கிறார்; 'நான் எதற்காகப் போராடுகிறேனோ அது வெற்றி பெற, நான் பதவியிலிருப்பதைக் காட்டிலும் அதை விட்டு விலகுவதே உகந்தது என்பது கடவுள் சித்தமாயிருக்கலாம்' என்றாரல்லவா?'' என்கிறார். இப் போதைக்கு திலகருடன் தம்மை ஒப் பிட்டுக் கொண்டிருக்கிறார். புத்தகம் முடியும் தருவாயில் இன்னுமொரு காந்தி பிறப்பாரோ என்னவோ.. பொறுத் திருந்து பார்ப்போம்!

உறவுக்கரம் உதவுமா?

சிவசேனையின் மிரட் டல்களுக்குப் பயந்து பாகிஸ் தானியரே வர மறுத்து விடுவர்; 'வா-வராதே' வாதத் தைப் புதைத்து விட்டு, மீண்டும் கை கோத்துக் கொள்ளலாம் என்றுதான் உள்ளூர் பி.ஜே.பி - சிவ சேனை அரசு மனக் கோட்டை கட்டியது.



• டயானா கிங் குரலால் கட்டிப் போட்டவர்

பிரமோத் மகாஜனை நம்பியிருக்கும் உள்ளூர் பி.ஜே.பி!

அவர்கள் விடாக் கொண்டர்களாக 'வந்துதான் தீருவோம்' என்கிறார்களா? கிரிக்கெட்டைப் பற்றி கிறுக்குத்தனமான மோதல்கள் மீண்டும் ஆரம்பித்து ஆட்சிக்கே உலை வைத்து விடும் போலிருக்கிறது. பெரிய தலைவர்களின் பிதற்றல்களைத்தான் தேசிய நாளிதழ்கள் ஃப்ளாஷ் செய்யுமோ? இதோ – உப தலைவர்களின் உளறல்கள். "பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் தங்கும் ஹோட்டல்களைத் தவிடு பொடியாக்குவோம்; அவர்களை ஏற்றி வரும் விமான சர்வீசுகளின் ஆபீசை நொறுக்கித் தள்ளுவோம்" – இது விஜய் லோகேவின் சபதம். இதே ரீதியில் சென்றால், 'அவர்களை ஆட அனுமதித்த இந்திய அரசை இல்லாமல் ஆக்குவோம்' என்பதுதானே உச்சகட்ட சபதமாக இருக்க முடியும்? உரிமைக்கு குரல் கொடுப்போரின் வாயை அடக்கி, உறவுக்குக் கை கொடுக்க வைக்க, மும்பை வர இருக்கும் முண்டேயின் மைத்துனர் பிரமோத் மகாஜனைத்தான் மலை போல் நம்பியிருக்கிறார்கள்!

'பஜ்ரங் பலி'யே பலியா?

அந்தேரி, மஹாகாளி கேவ்ஸ் ரோடிலுள்ள ஆஞ்சநேயர் கோயில் திடீரென்று பரபரப்புக்கிடமானது. இரவோடிரவாக ஓர் அம்மண உருவம், கோயிலை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து, சிலையை சிதிலமாக்கியிருக்கிறது. சத்தம் கேட்டு விழித்த பூசாரி மகன், உருவத்தைத் துரத்த, அந்தப் பக்கம் ரோந்து சுற்றிக் கொண்டிருந்த சில காவலர்களும் துரத்தலில் சேர்ந்து கொண்டனர். ஆனாலும் கயவன் தப்பி விட்டான். உடனே சிவசேனைக்காரர்கள், வழி யடைப்பு, கதவடைப்பு எல்லாம் துவங்கி விட்டனர். மறுநாள் வேறொரு சிலையை பூசாரி எடுத்து வந்தபின் அமளி சற்றே அடங்கியது. ஆனால் குற்றவாளியைப் போலீஸ் பிடிக்கும்வரை, புதுச்சிலையை பிரதிஷ்டை செய்வதில்லை என்று பக்தர்கள் சபதமெடுத்திருக்கிறார்கள். ஹூம், இனி காவல்துறையின் கையில், இந்தக் காவல் தெய்வத்தின் எதிர்காலம்!

கேட்காத குரல்கள்!

எப்போதும்போல், சம்பள உயர்வு கோரி பூச்சி காட்டுகிறார்கள் என நினைத்தால், இந்த ஜூனியர் காலேஜ் டீச்சர்களின் ஸ்டிரைக் இப்படி முடிவே இல்லாமல் நீளுகிறதே? 12வது (+2) பரீட்சை எழுத இருக்கும் 12 லட்சம் மாணாக்கர்களை இப்படியா டென்ஷனாக்குவது? 'வேலை நிறுத்தத்தை நீட்டித்தால், பேச்சு வார்த்தைக்கே இடமில்லை' என்று அரசும் பிடிவாதம் பிடிக்கிறது. BEST ஊழியர்கள், முனிசிபாலிடிகாரர்கள், ஏன்... 'பார்'களில் வேலை செய்யும் பெண்கள் ஸ்ட்ரைக் செய்தாலும்கூட, அரசு உடனே சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துகிறது. எங்கள் விஷயத்தில் மட்டும் பாராமுகமாக இருக்கிறதே' என குமைகிறார்கள் ஆசிரியர்கள். ஆனால்... மற்றவர்கள் வேலை நிறுத்தம் செய்தால் மும்பை வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. இவர்கள் செய்தால்... ஹூம்... கோச்சிங் க்ளாஸுகளே போர்ட் எக்ஸாமையும் நடத்தலாமென்றிருந்து விட்டால், இவர்களை யார் கண்டு கொள்ளப் போகிறார்கள்?

பாடலிலே ஒரு தேடல்!

அழகு ராணிகளுக்கென்று நிர்மாணிக்கப்பட்டிருந்த (புனா) அழகுக் கோட்டையில், இசையரசி டயானாகிங் ஒரு கலக்குக் கலக்கினார் பார்த்தீர்களோ? தலைமுடி இருக்க வேண்டிய நீளத்துக்கு இரட்டைப் பின்னல்கள் போல் காதணிகள் இடுப்புவரை தொங்கின! காதணி போல் தலைமுடி (கால் இஞ்ச் இருக்குமா?) மண்டையுடன் தட்டையாய் ஒட்டிக் கொண்டிருந்தது – அதுவும் நரைத்த வெளுப்பில்! (விளம்பரங்களில் இருந்த இளமை ததும்பும் கறுப்பு விக் எங்கே தொலைந்தது?) மூக்கில் வேறு ஒற்றைக் கல் (சிவப்பு?) மூக்குத்தி! என்னதான் தம் அப்பா அம்மா மூதாதையர் எல்லாம் இந்தியர்தாம் என்று நைஸாக ஜாதகத்தை நழுவ விட்டாலும், இந்த ரூபத்தில் வந்து தனக்கு "Shy guys"தான் பிடிக்கும் என்ற விஷயத்தை பறைசாற்றினால்... கூட்டத்தில் இருந்திருக்கக் கூடிய கொஞ்ச நஞ்ச வெட்கிய ஆண்களும் ஓட்டம் பிடித்திருக்க மாட்டார்களோ?

— ஜெயஸ்ரீ ராஜ்



"**எ**ங்க கிளாஸ் அருணோட தாத்தா செத்துட்டாங்க பாட்டி..."

"அடடா!"

"ஏன் பாட்டி செத்துப் போறாங்க?"

"வயசாயிடுச்சுன்னா சாமி கூப்டுக்குவாரு?"

"சாமி எங்கேயிருக்காரு?"

"மேலே... ஆகாசத்துலே..."

"அப்போ நீயும் செத்துப் போயிடுவியா? வயசான பாட்டி தானே நீயும்? மேலே சாமி கிட்டே போய்டுவியா?"

"கூப்டா போக வேண்டியது தான்..."

"நீ போனாக் கூட நான் போலீஸ்காரங்களை கூட்டிட்டு வந்து உயர உயரமா ஏணி வைச்சு ஏறச் சொல்லி உன்னைத் திருப்பி அழைச்சுட்டு வரச் சொல்லுவேன்..."

– ஆறு வயதுச் சிறுவனுக்கும் எண்பத்தாறு வயது கொள்ளுப்பாட்டிக்குமிடையே நடந்த நிஜமான உரையாடல் இது!

அப்பா ஏன்மா

மரணம் என்பது பெரியவர்களுக்கே புரியாத புதிர் – ஏற்பதற்குக் கஷ்டமான நிகழ்வு என்கிற போது குழந்தைகளை அது என்ன பாடுபடுத்தும்...!

இறந்தவர் 'சாமிகிட்டே போயிட்டார்' என்பது பெரியவர்களுக்குச் சௌகரியமான விளக்கம். அவர்கள் வலுவாக நம்பும் விளக்கமாகவும் இருக்கலாம். ஆனால் குழந்தைகளுக்கு அந்த விளக்கம் சமாதானம் அளிக்கக் கூடியது அல்ல.

போனவர் திரும்பி வருவாரா? எப்படி வருவார்? வராவிட்டால் என்ன ஆகும்? சுவாமியிடம் போய் என்ன செய்வார்கள்? போனவரைத் திரும்ப வரவழைக்க என்ன செய்யலாம் – இப்படிப்பட்ட கேள்விகள், கற்பனைகள் குட்டி மூளையில் உற்பத்தியாகிக் கொண்டேயிருக்கும் – ஆரம்பத்தில் இடம் பெற்ற உரையாடல் மாதிரி!

விஜி

நமக்கே புரியாத ஒன்றை விளக்க முயற்சி செய்யும்போது, உணர்வுகளை ஒதுக்கிவிட்டு அறிவியல்பூர்வமாக அணுகுவது உதவும்.

உலகில் உள்ள உயிரினம் எல்லாமே ஒரு நாள் இறந்துதான் போகும்.

"நம்ம தோட்டத்துல அவரைக்கொடி இருந்ததில்லியா கண்ணா...?"

"ஆமாம். கிணத்துக்குப் பக்கத்துல..."

"சின்னச் செடியா முளைச்சு, பெரிசாகி, காயெல்லாம் காய்ச்சு, கடைசில என்ன ஆச்சு?"

"என்ன ஆச்சு?"

"வாடிப் போய், காஞ்சு போச்சு இல்லையா?"

"ஊம்..."

"அந்தச் செடி மாதிரிதான் – உயிருள்ள எந்தப் பொருளும் கடைசில ஒரு நாள் உயிரில்லாம போகும்..."

"ஏன்?"

"வயசானதனாலே போகலாம். இல்லாட்டி ஏதாவது நோய் வரலாம்."

"இல்லாட்டி டீவில புலி வந்து மானை அடிக்குதே அந்த மாதிரிகூட ஆகும் இல்லியா?"

"காட்டுல அது மாதிரி நடக்கும்.."

"தாத்தா செத்துப் போனப்புறம் ஏன் வண்டில கொண்டு போனாங்க?"

"உயிரில்லாம போயிட்டா வீட்டுக்குள்ளே வைச்சுக்க முடியாது. அவரைக் கொடியை எடுத்துப் போட்டுட்டோமில்லையா... அது மாதிரிதான்..."

– ஆறு அல்லது ஏழு வயதுக் குழந்தை இந்த உண்மையின் குரூரத்தைத் தாங்குமா என்று பயப்பட வேண்டாம். உண்மையின் வலியைவிட அரைகுறை உண்மையின் மிரட்டலும் அது தூண்டும் பயமுறுத்தும் கற்பனைகளும்தான் அதிக வேதனை தரும்.

அழுதாங்க...?

அறிவு ரீதியாகப் பதில் சொல்லி விட்டால் விஷயம் முடிந்து போய் விடாது. நிச்சயமாக உணர்வு ரீதியான கேள்விகள் தொடரும்.

இறந்து போன தாத்தா இனிமேல் வர மாட்டாரெனில் யார் என்னை ஸ்கூல் பஸ்ஸில் ஏற்றி விடுவார்கள்?

'சாயங்காலம் வந்தால் யார் கதை சொல்வது எனக்கு?'

'அப்பா ஊருக்குப் போகும்போது ஹோம் ஒர்க் செய்ய இனி யார் உதவுவார்கள்?'

'உனக்கு வர போனெல்லாம் இனிமேல் யார் எழுதி வைப்பார்கள்?'

இப்படிப்பட்ட கேள்விகள் எழும்போது நமது துக்கத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு சலனமின்றி நம்பிக்கையூட்டியாக வேண்டும்.

"கஷ்டம்தான்... தாத்தா இல்லாம எல்லாருக்கும் கஷ்டம்தான். ஆனால் நீ எனக்கு உதவி பண்ணுவாயில்லையா?"

என்னும்போது பொறுப்பும் நம்பிக்கையும் சேர்ந்து விதைக்கப்படுகின்றன.

"பண்ணுவேனே... அப்புறம் நாம இரண்டு பேரும் சேர்ந்து அப்பாவைப் பார்த்துக்கலாம்... அப்பா ஏன்மா அழுதாங்க...?"

"ரொம்ப வருத்தமாயிருந்ததால அழுதாங்க... நாளாக ஆக கொஞ்சம் கொஞ்சமா வருத்தம் குறையும்..."

இந்த மாதிரி நேர்கோடு பதில்களே சௌகரியமானவை.

தத்துவார்த்தமான, மத அடிப்படையிலான விளக்கங்களுக்குக் குழந்தைகள் தயாராயிருக்க மாட்டார்கள். அத்தகைய பதில்களைத் தவிர்த்து விடுங்கள். அதே சமயத்தில், இறுதிச் சடங்குகள் குறித்து எழும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தயாராயிருக்க வேண்டும். குடும்பப் பழக்க வழக்கங்களுள் சடங்குகள் அடங்கும் என்று சொன்னால் போதுமானது. குழந்தை திருப்தியடைந்து விடும்.

சடங்குகளின் போது குழந்தைகள் இருக்க வேண்டாம் எனக் கருதினால் வெளியே அனுப்பி விடலாம். ஆனால் நெருங்கியவரின் மரணத்தை ஒரு போதும் குழந்தையிடமிருந்து மறைக்க வேண்டாம்.

'தாத்தா ஊருக்குப் போயிருக்கார்.. அப்புறமா வருவார்' என்று பொய் சொன்னால் அவர் வராத ஏக்கத்தில் குழந்தை துவண்டு போகும். தன்னை அவர் புறக்கணித்து விட்டதாக எண்ணி ஏங்கும். ஏக்கம் வேறு வடிவங்கள் கொண்டு வடிகால்கள் தேடும் – முரட்டுத்தனம், வன்முறை என்று 'நெகடிவ்' நடத்தையில் கொண்டு போய் விட்டு விடும்.

சொல்வது சுலபம்தான்.. ஆனால் துக்கச் சூழலில் குழந்தைகளைச் சமாளிப்பது கடினம். எனினும் அவர்களுக்காக நாம் முயற்சி செய்தாக வேண்டும்.

(அடுத்த வாரம் வரை....)

படம் : ஸ்ரீஹரி

சின்னத் திரையைப் பார்த்தபோது...



சென்ற வாரத்தில் தாம் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குறித்து இங்கு விமர்சிக்கிறார் இன்ஸ்பெக்டர் ஜெனரலும், எழுத்தாளருமான திலகவதி, ஐ.பி.எஸ்.

● ஏ.வி. ரமணனின் "சப்தஸ்வரங்கள்" நான் விரும்பிப் பார்க்கும் ஒரு நிகழ்ச்சி. காம்பியரிங் என்று வரும் பெண்களின் அசட்டுத் தத்துவங்கள், செயற்கைச் சேஷ்டைகள் இவற்றையெல்லாம் பார்த்து எரிச்சல் உண்டாவதில், ரமணனின் இயல்பான, ரசனையோடு கூடிய காம்பியரிங் இதமளிக்கிறது.

● ஜீ சினிமா சானலில் 'ஜுலி' படம் பார்த்தேன். கதையில் எந்தப் புதுமையுமில்லை - துஷ்யந்தன் சகுந்தலை கதைக் கருதான். கதாநாயகியாக லட்சுமி - இதற்கு முன்போ, பின்போ இவர் நடித்த படங்களில் இவ்வளவு இனிமையான தோற்றம் இவருக்கு இருந்திருக்க முடியாது என்று தோன்றியது. பழைய மூக்கும், ரெண்டுங்கெட்டான் வயதுமாக ஸ்ரீதேவி, (லட்சுமியின் தங்கை) வேடிக்கையாக இருந்தார்!

● காரைக்குடியில் விசுவின் அரட்டை அரங்கம். ஹிந்தி டாக் ஷோக்களில் (Talk Show) வருவது போல் இல்லாமல் விசு மற்றவர்கள் பேசும்போது குறுக்கிடுவதில்லை. குழந்தைகள் எதையாவது நல்லபடி பேசினால், அதன் அப்பாவோ அண்ணனோ எந்த அளவு அதில் பெருமை கொள்வார்களோ அதே அளவு பூரிப்பை விசுவின் முகத்திலும் காண முடிகிறது. அறிவு ஜீவிகள் என்பதற்கு அடையாளமாக நாம் வைத்திருக்கும் இலக்கணங்களையெல்லாம் தவிடு பொடியாக்கும்படி கிராமத்து மக்களில் பலரும் அற்புதமான கருத்துகளும் வாதங்களுமாக விளாசுகின்றனர்.

● டிஸ்கவரி சானலில் கென்யாவிலுள்ள காடுகளைக் காண்பித்தனர். நாமே அந்த சுற்றுலாக் குழுவுடன் சென்று இயற்கையை நேரடியாக ரசிப்பது போன்ற இன்ப அனுபவம். நம் கிராமத்துப் பெண்கள் குலவையிடுவதைப் போல அங்கும் பாடுகிறார்கள். பூசாரி மேல் சாமி வருகிறது - வியாதியைத், தீர்க்கிறது. இந்த நம்பிக்கை வேர்கள்தான் உலகமெங்கும் எப்படி ஒரே மாதிரி பரவியுள்ளன!

● "ஜன்னல்" என்ற தொடரில் பிரசாரதொனி அதிகமாக இருக்கிறது. நிறைய வசனங்கள், என்றாலும் சமூகத்துக்குத் தெரிய வேண்டிய, தேவையான விஷயங்களைச் சொல்கிறார்கள்.

● உச்சரிப்பில் நிதானம், சரியான ஏற்ற இறக்கம், பொருத்தமான குரல், அளவான அலங்காரம் - இப்படிப் பல விதங்களில் ராஜ் டீவி ஆங்கிலச் செய்திகளை வாசிக்கும் ஐஸ்வர்யா மனதை நிறைக்கிறார். அம்மா ஷோபனா ரவி எட்டடி பாய்ந்தால் இவர் முப்பத்திரெண்டடி.

● பி.பி.சி. செய்திகளில் சுவாரசியங்களுக்கா பஞ்சம்? அமெரிக்காவில் கல்வி, சுகாதாரம் ஆகிய துறைகளில் என்னென்ன முன்னேற்றங்கள் தேவை என்று அமெரிக்கப் பாராளுமன்றத்தில் கிளிண்டன் சகஜமாக, முகம் மலரப் பேசினார். தம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தது பற்றியெல்லாம் எந்த ஒரு கவலையையும் காட்டாமல் எப்படி இவரால் இருக்க முடிகிறது என்று ஆச்சரியம்.

● வின்ஹூய் என்ற சீன இளைஞனைக் கைது செய்திருக்கிறார்கள். சீனாவில் கல்விக்காக மட்டுமே இன்டர்நெட்டைப் பயன்படுத்தலாம். ஆட்சிக்கு எதிரான கருத்துக் கொண்டவர்களின் பட்டியலை இன்டர்நெட் மூலம் வலைவீசிப் பிடித்ததுதான் அந்த இளைஞன் மீதுள்ள குற்றச்சாட்டு. எல்லாவற்றையும் விட பாதித்த செய்தி இந்தோனேஷியாவில் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே ஏற்பட்ட தீவிர மோதலும், அதில் பத்துப் பேர் இறந்ததும். பொதுவாகவே நம் நாடு உட்பட உலகின் பல பகுதிகளிலும் மதக் கலவரங்கள் அதிகமாகி வருகின்றன. அதுவும் சமீபத்தில் பெரும் பொருளாதாரப் பின்னடைவு போதாதென்று, இந்தோனேஷியாவில் இது வேறா? வருத்தமாக இருக்கிறது.

தொகுப்பு: **ஜி.எஸ்.எஸ்.**

+2 திருப்பு முனை
TURNING POINT

ஆம்! +2 என்பது வாழ்க்கையின் திருப்புமுனைதான். +2 தேர்விலிருந்து கல்லூரி சேரும் வரை உள்ள 2 மாதங்கள்தான், ஒரு மாணவனின் வாழ்க்கையைத் தீர்மானிக்கப் போகிறது. இதை உணர்ந்த ஈஸி கம்யூனிகேஷன்ஸ் நிறுவனம், +2 மாணவர்களுக்காக, பல தேர்ந்த வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட புத்தகங்களைக் கொண்டு வருகிறது. **ஈஸி நுழைவுத் தேர்வு வழிகாட்டி** (TNPCEE) இந்த புத்தகத்தில் மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் போன்ற அனைத்து நுழைவுத் தேர்வுகளுக்கும் ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்ட 12,000 கேள்வி பதில்கள் உள்ளன. இத்துடன் **''+2க்கு பிறகு...''** மெர்வின் எழுதிய **''நுழைவுத் தேர்வு சிறப்பாக செய்வது எப்படி?''** – என்ற **இரண்டு புத்தகங்கள் இலவசமாகக் கிடைக்கின்றன.**

இந்த புத்தகங்களைப் பற்றி சென்னையில் உள்ள பிரபல பள்ளி முதல்வர்களின் கருத்து:

திருமதி. சௌந்தரி துரையப்பா, முதல்வர் SBOA மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



ஈஸி நிறுவனத்தின் இந்த புத்தகத்தைப் படிக்க... படிக்க... அவ்வளவு விபரங்கள், எனக்கே தெரியாத பல கோர்ஸ்களைப் பற்றியும் அதனால் கிடைக்கும் வேலை வாய்ப்பு, சம்பளம் போன்ற அனைத்து விபரங்களும் மிகவும் நுணுக்கமாகத் தரபட்டுள்ளது. It is a Eye opener for every +2 students and their parents.

திருமதி. சீதாலெட்சுமி, முதல்வர் Dr. அழகப்பா மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



இவ்வளவு கோர்ஸ்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றனவா என வியக்கும் வகையில், நூற்றுக்கும் மேற்பட்ட கோர்ஸ்களைப் பற்றிய அனைத்து தகவல்களும் உள்ளன. பைலட், ஏர்லைன் கோர்ஸ், போர்ட் மேனேஜ்மெண்ட், மெரைன் இன்ஜினியரிங், ஃபேஷன் டெக்னாலஜி, சேல்ஸ்டெக், ஆர்மி, நேவி, மருத்துவத்தில் அனைத்து பிரிவுகள், டெக்னாலஜியில் உள்ள பிரிவுகள். அவை எங்கு இருக்கின்றன, எப்படி சேர்வது, வேலை வாய்ப்பு எப்படி? சம்பளம், எத்தனை ஆண்டுகள் படிக்க வேண்டும், எவ்வளவு செலவாகும் போன்ற தகவல்களும் தெளிவாகத் தரப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு +2, +1 மாணவர்களுக்கும் கலங்கரை விளக்கமாக பயன்படும் என்பது திண்ணம்.

திருமதி. செண்பகம், முதல்வர், வள்ளியம்மாள் மெட்ரிகுலேஷன் பள்ளி, சென்னை.



40 வருடங்களாக கல்வித் துறையில் பணியாற்றி வருகிறேன். என் அனுபவத்தில் இப்படி ஒரு புத்தகத்தைப் பார்த்ததில்லை. ஒவ்வொரு வீட்டிலும் அகராதி இருப்பது போல் இப்புத்தகம் இருக்க வேண்டும். அவ்வளவு பயன்தரக்கூடியது. இதை படிக்காத +2 மாணவர்களுக்கு பேரிழப்பாக இருக்கும்.

ரூ. 400/- விலையுள்ள இம்மூன்று புத்தகங்கள் அறிமுக விலையாக உங்களுக்கு ரூ. 300/-க்கே கிடைக்கின்றது. இச்சலுகை பிப்ரவரி 5-ந் தேதி வரையே.

* தமிழ்/ஆங்கிலம் மீடியம் தனித்தனி புத்தகங்கள். மீடியம் குறிப்பிடவும்.

* முதலில் அனுப்புகின்ற 500 பேருக்கு திரு. வெ. இறையன்பு IAS அவர்கள் எழுதிய ''IAS தேர்வும் அணுகுமுறையும்'' என்ற புத்தகம் அன்பளிப்பாக வழங்கப்படும்.

* உங்கள் முகவரியுடன் 'Easy Communications' என்ற பெயரில் ரூ. 300 க்கான DD/MO/Cash தபாலிலோ அல்லது நேரிலோ 'Easy Communications', 50-A, 100அடி ரோடு, MMDA, சென்னை - 106 என்ற முகவரியில் செலுத்திப் பெற்றுக் கொள்ளவும். ஆர்டரின் பேரில் மட்டுமே கிடைக்கும். வேறு எங்கும் கிடைக்காது. சில ஆயிரம் பிரதிகளே உள்ளன. முந்துங்கள்!

'அள்ளி' வந்தவற்றுள் 'கிள்ளி' எடுத்த படங்கள்...

படிக்க ஆரம்பிக்கறதுக்கு முன்னால, என் படத்தைப் பாருங்க. கார்டூனிஸ்ட் நடனம், "ஏற்கெனவே உனக்கு நெல்லிக்கா கண்ணு; இப்படி டஜன் டஜனா படம் பார்த்துக் கண்ணு தக்காளிப் பழமா ஆயிடுச்சே சுமி!"ன்னு ரொம்ப வருத்தப்பட்டார். "இதே கண்ணோட உன் fans பார்த்தால் தமிழ்நாட்டுல கண்ணீர் வெள்ளம் பெருகி, முதலமைச்சர் வெள்ள நிவாரண நிதி கேட்டு சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டுக்கு எழுத வேண்டி வரும்"னு ஜோக் அடிச்சி, ஸன் க்ளாஸ் மாட்டி விட்டிருக்கார் எனக்கு!

நூற்றுக்கணக்கான படங்கள். நாலு திசை நாடுகள்ளேருந்தும் அள்ளிட்டு வந்திருந்தாங்க. அத்தனையையும் பார்க்க நம்மால ஆகாதுடா சாமின்னு செலக்ட் பண்ணி சுமார் முப்பது படம் பார்த்தேன். அதுக்கே முழி பிதுங்கிடுச்சி. 'கண்டிப்பா பத்து நாள் ஃபெஸ்டிவல்; குறைஞ்சது நானூறு படங்கள் காண்பிச்சாகணும்'னு அரசியல் சட்டத்துல ஏதாவது ஷரத்து இருக்கா என்ன? அள்ளி வந்த படங்கள்ல அநேகம் குப்பை. 'எந்த அடிப்படைல இவங்க படங்களை செலக்ட் பண்ணாங்கன்னே புரியலையே'ன்னு வந்திருந்த நிறைய ஜர்னலிஸ்ட்ஸ் குழம்பினாங்க. "இதெல்லாம் பார்க்காதீங்க. கெட்டுப் போயிடுவீங்க!"ன்னு மைக் வெச்சி அலறினாங்க பானுமதி ராமகிருஷ்ணா.



• Dharma Blue Bums

விருது பெற்ற, புகழ் பெற்ற, சமீபத்திய உலகப் படங்கள்னு ஒரு செக்ஷன். (நான் பெரும்பாலும் இதைத்தான் பார்த்தேன்.) Then, இருக்கவே இருக்கு இந்தியன் பனோரமா. Retrospective Section ல Wojaiech jerzy hasங்கற போலந்து டைரக்டர், அமெரிக்க டைரக்டர் Roland joffe இவங்க ரெண்டு பேரோட படங்கள். இது தவிர 'Country focus'னு ஒரு செக்ஷன்; அர்ஜன்டைனா படங்கள். தெலுகு படங்களுக்குத் தனியா ஒரு ஜமா. போறாது?

படங்களைப் பத்தி சொல்றதுக்கு முன்னால ஹைதராபாத் தியேட்டர்களைப் பத்திக் கொஞ்சம் சொல்லணும். பாபுகாரு என்னதான் அந்த ஊரை ஹைடெக் ஸிடியா மாத்திட்டு வர்றதா சொன்னாலும் தியேட்டர்கள்ல இன்னும் கார்பன் மாத்தற ப்ரொஜக்டர்கள்தான் வெச்சிருக்காங்க. ஸ்கிரீன்கள் அடிக்கடி அழுவுது. திடீர் திடீர்னு சவுண்ட் சிஸ்டத்துக்கு ஜலதோஷம் பிடிச்சிக்கிட்டு,



• எலிஸபெத்

நம்ம காதுல 'தேன்' வந்து பாயுது. ஒரு ஆஸ்திரிய தேசத்துப் படத்துல முக்கியமான திருப்பம் வர்ற காட்சி. ஹீரோயின் ஒரு வத்திக் குச்சியைக் கிழிக்கறா. 'சரக்'னு சவுண்ட் கேக்குது. But, ஸ்கிரீன்ல வெறும் ரீகல் வெண்மை! இது தேவலை. 'ஒரு மாதிரி'யான படங்கள்ல அடிக்கடி விஷுவல் காணாமப் போக,

ஆடியன்ஸ் அசிங்க அசிங்கமா திட்டின கூத்தெல்லாம் நடந்தது.)

டெக்னிகல் சாதனைகள் நிறைந்த படங்கள்னு இல்லை; பழைய பக்த பிரகலாதா ரிலீஸ் பண்ணக் கூடத் தகுதியில்லாத தியேட்டர்கள்.

ஒழியட்டும். என்னை பாதிச்ச சில படங்களைப் பத்தி மட்டும் சொல்லலாம்னு நினைக்கறேன். (நம்ம சினிமா ஃபீல்டுலேருந்து டைரக்டர்கள் சசி, திருப்பதிசாமி, எஸ்.பி. முத்துராமன், கேமராமேன் கே.வி.ஆனந்த், சந்தோஷ் சிவன் இன்னும் சிலர் வந்திருந்தாங்க. அவங்களை பாதிச்ச படங்களை அடுத்த வருஷத்துக்குள்ள அவங்க காட்டிடுவாங்கன்னு நினைக்கிறேன்.)

'Dharma Blue Bums' – இது கிரீஸ் தேசத்துப் படம். கொஞ்சம் யோசிச்சிப் பார்த்தா நம்ம 'முதல் மரியாதை'யோட வெஸ்டர்ன் வர்ஷன்னு சொல்லத் தோணுது.

ஒரு பழைய மாஃபியா குற்றவாளி. எந்த நிமிஷமும் மரணத்தை எதிர்பார்த்து, தனியா ஒரு வீட்டுல ஒளிஞ்சி வசிக்கிற கிழவன் அவன். மரணம் தானாவேயும் வரலாம்; கொலை ரூபத்திலேயும் வரலாம்ங்கற நிலைமை. இருட்டு வாழ்க்கை மட்டுமே பழகிப்போன அந்த ரிடையர்டு குற்றவாளிக்குத் தற்செயலா ஒரு ட்யூப் லைட் கிடைக்குது. ஐ மீன், ஒரு இளம்பெண்ணோட ஸ்நேகம். அவ பிரமாதமான அழகி. (என்னை மாதிரி!) ரஷ்யாக்காரி. லவ்வர் ஒரு குழந்தையைக் குடுத்துட்டு டாட்டா காட்டிட்டுப் போயிட, பிழைப்புக்கு வழி தேடி க்ரீஸ் வரா. குழந்தையை ரஷ்யால தன் சிஸ்டர்கிட்ட விட்டுட்டு இங்க வர்றவளுக்குக் கிடைக்கறது, 'உலகின் முதல் பெண் தொழில்'.

அவளோட உணர்வுகளுக்கு அவுட்லெட் இல்லை. இந்தக் கிழவனுக்கோ ஆதரவு இல்லை. ஸோ? தற்செயலா சந்திக்கும் போது காதல் நெருப்பு பத்திக்குது.

லேசான கதைதான்னாலும் விரசத்துக்கு எவ்வளவோ ஸ்கோப் இருந்தும் கண்ணியமா தவிர்த்திருக்கார் டைரக்டர் ஆந்த்ரே தாம் பொலாஸ். அவளோட இசை ஆர்வம்/அறிவு, கிழவனோட 'கவித்துவமான' தனிமை, ரெண்டு பேருக்கும் வர்ற பிணைப்போட இயல்பான அழகு, ட்ராமடைஸ் பண்ணாத காட்சிகள்னு பல நல்ல விஷயங்கள் உள்ள படம்.

ஆனா, சந்தோஷ் தியேட்டர்ல என்னோட சேர்த்து மொத்தம் சுமார் முப்பத்தஞ்சு, நாப்பது பேர்தான் இந்தப் படத்தை முழுசா பார்த்தது.

Milk –ஆஸ்திரிய தேசத்துப் படம்.

இந்தப் படம் ரொம்ப சீரியஸான ஒரு பிரச்னையை சொன்ன படம். But, ஒரு சினிமாவா இல்லாம போட்டோக்களோட தொகுப்பு மாதிரி - ஒரு மாதிரி கண்டின்யுடி இல்லாம, postmordern typeல இருந்ததால பலர் பாதிலேயே எழுந்து போயிட்டாங்க.

ஜப்பான்ல, அமெரிக்கக் கலாசாரம் ஒரு பூதம் மாதிரி எப்படி கவிந்து மக்களை ஆட்டிப் படைக்குதுங்கறதுதான் Knot. ஜப்பானுக்கே உரிய பண்பாடு, கலாசாரத்தையும் விட முடியாம, முழுசா அமெரிக்க கலாசாரத்தையும் ஏத்துக்க முடியாம அந்த நாட்டு இளைஞர் - இளைஞிகள் செமி ஜப்பானீஸாகவும் செமி அமெரிக்கன்ஸாகவும் கோமாளி வேஷம் போடறதைக் கிண்டல் பண்ற படம் இது.

இந்தப் படத்துல ஷாட்டுக்கு ஷாட் எக்கச்சக்கக் குறியீடுகள். 'MILK'ங்கறதை மேற்கத்திய கலாசாரத்தோட குறியீடா டைரக்டர் சொல்றார். ஜப்பானியர்களோட ஃபேவரைட் ட்ரிங்க் 'க்ரீன் டீ' இல்லியா? டீ டிகாக்ஷனும் பாலும் கலக்கற



கெஸ்ட் ரைட்டர் : சுமி

போது வர்ற ப்ரௌன் கலரை இப்ப இருக்கற ஜப்பானியர்களோட கதம்ப கலாசாரத்துக்கு உவமையா காட்டறார் – லைட்டிங் மூலமா!

லிஃப்ட் ஆபரேடரா இருக்கற ஒரு ஜப்பானியப் பெண். (லிஃப்டே ஒரு குறியீடு) ஆஸ்திரியாலேருந்து ஜப்பானுக்கு – முன்னூறு வருஷ இடுகாட்டை ஆராய(!) வர்ற ஒரு ஆர்டிஸ்ட். எப்பப் பார் ஜாகிங் பண்ற ஒரு குண்டன், ஒரு ரேடியோ அறிவிப்பாளினி – இப்படி எக்கச்சக்க கேரக்டர்ஸ் தனித்தனியா கதையை (அப்படி ஒண்ணு மொத்தமா இல்லாட்டாலும்) வளர்த்துட்டுப் போறாங்க.

இந்தப் படத்துல நான் ரொம்ப ரசிச்சது, இதுல இருந்த Satire ஐ. ஜப்பானிய இளைய தலைமுறையின் போலியான வாழ்க்கையைப் படமெடுக்க – ஒரு வெஸ்டர்ன் கண்ட்ரி டைரக்டருக்கு – ஜப்பானே நிதி உதவி பண்ணியிருக்கறதுதான் இதனோட ஹைலைட்.



* MILK

காரப் பொண்ணு தர்ற தகவல்கள், அவர்கிட்ட புஸ்தகம் இரவல் வாங்கிட்டுப் போனவங்க – இப்படி ஒரு சி.ஐ.டி. மாதிரி துருவித் துருவி ஆராய்ச்சி பண்றா.

அப்பாவோட அடையாளத்தைத் தேடிட்டுப் போறவள், கடைசியா கண்டுபிடிக்கறது என்ன தெரியுமா? தன்னோட அடையாளம்!

விறுவிறுப்புக்காகக் காட்சிகளை 'ஒட்ட நறுக்காம' நிதானமா ஓடின படம். ரொம்ப அழகான படம்.

Debt of love. ஐயோ! இது மாதிரி ஒரு 'வெல்வெட்' படத்தை இதுவரைக்கும் நான் பார்த்ததில்லை! ஒவ்வொரு ஷாட்டும் கவிதைன்னெல்லாம் கப்ஸா விட மாட்டேன். ஆனா ஒரு அழகான ஷார்ட் ஸ்டோரிக்கான எல்லா அம்சமும் நிறைஞ்ச படம்.

ஒரு அரசியல்வாதி செத்துப் போறார். அவரோட இறுதிச் சடங்குகளைச் செய்து முடிக்க, லக்ஸம்பர்க்லேருந்து அவர் பொண்ணு வரா. காரியத்தை சீக்கிரம் முடிச்சுட்டுப் போறதுதான் அவ நோக்கம்.

ஆனா, செத்திருக்கறது அவ அப்பா மட்டுமில்லை – ஒரு அரசியல்வாதியும் ஆச்சே! ஸோ, தலைக்குத் தலை அவரை நல்லவரு, வல்லவருன்னு போற்றித் துதிக்கறாங்க. ஒய்ஃப் செத்துப் போனப்புறம், மகளும் வெளியூர்ல கல்யாணம் பண்ணிட்டு செட்டிலாயிட, தனியாவே வாழ்ந்தவர் அந்த அரசியல்வாதி.

'எல்லாரும் நம்ம அப்பாவைப் பத்திப் பேசறாங்க. நமக்கு அவரை எவ்ளோ தூரம் தெரியும்?'னு யோசிக்கறா அந்தப் பொண்ணு. 'அப்பா'ங்கறதைத் தவிர அவரைப் பத்தின எந்த விஷயமும் தனக்குத் தெரியலையேன்னு ஃபீல் பண்றா.

உடனே அவரோட நண்பர்கள், எதிரிகள், தெரிஞ்சவங்க, தெரியாதவங்கன்னு எல்லாரையும் போய் சந்திச்சி, தன் அப்பாவைப் பத்தின விவரங்களை சேகரிக்கறா: அவரோட டயரி, அவருக்கு உதவியா இருந்த சமையல்

When love comes - இந்த நியூஸிலாந்துப் படம், ஃபெஸ்டிவலுக்கு வந்த படங்கள்லேயே ரொம்ப 'ஹாட் ஸ்டஃப்'. ஃபயருக்கு கொடி பிடிச்ச பால்தாக்கரே இந்தப் படத்தைப் பார்த்தால் என்ன செய்வார்னு தெரியலை. (ஒருவேளை டைரக்டர்கிட்ட ஆட்டோகிராஃப் வாங்குவாரோ என்னமோ?)

ஆறு நண்பர்கள். மூணு விதமான காதல். என்னென்ன காதல்? ஒரு இசைக்குழுல இருக்கற ரெண்டு பொண்ணுங்களுக்குள்ள ஒருவித 'நெருப்பு'க் காதல். பாடலாசிரியனுக்கு இன்னொருத்தன் மேல் காதல். அந்த இன்னொருத்தனுக்கு வேறொருத்தி மேல் காதல். அந்த வேறொருத்திக்கு வேறொரு காதலன். (தலை சுத்துதா?)

இதுல இந்த லெஸ்பியன் ஜோடி மட்டும் வாழ்க்கையை ரொம்பப் பிரமாதமா அனுபவிக்கறாங்க. மத்தவங்களுக்கு நிம்மதியே இல்லை! பாடலாசிரியன், காதல் ஏற்கப்படாததில்(!) குடிகாரனா அலையறான். அந்த 'ஹீரோ'வோ தான் காதலிக்கும் பாடகி ஏன் ரொம்ப நெருங்கி வர மாட்டேங்கறான்னு கவலைப்படறான். அவளுக்குத் தன் பழைய காதலனா, இவனா, யாரை செலக்ட் பண்றதுன்னு குழப்பம்.

கடைசில அவ தன் பழைய காதலனோட கம்பி நீட்ட, இந்த தேவதாஸ், பாடலாசிரியன் விருப்பம் போல 'ஹோமோ' ஆயிடறான்!

லாஸ்ட் லைன் பஞ்ச் என்ன தெரியுமா? அந்த லெஸ்பியன் ஜோடி இவங்களைப்

பார்த்துச் சொல்லும் : "சரியான தீர்மானம். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த இதைவிட உத்தமமான வழி இல்லை!"

சப்ஜெக்ட் கச்சடாவா இருந்தாலும் தனித்தனியா ஒவ்வொரு கேரக்டரையும் ப்ரில்லியன்ட்டா செதுக்கியிருந்தார் டைரக்டர் மார்க்வல்.

எலிஸபெத் - நான் பார்த்த படங்கள்லேயே எனக்கு ரொம்பப் பிடிச்ச படம். டைரக்டர் சேகர் கபூர் எப்பேர்ப்பட்ட திறமைசாலிங்கறதை மறுபடியும் நிரூபிச்சிருக்கற படம்.



• Debt of Love

இங்கிலாந்து ராணி எலிசபெத், அந்த நாட்டைப் பொறுத்தவரை கடவுளுக்குச் சமானம். கல்யாணம் பண்ணிக்காமல், தேசத்துக்காகவே வாழ்ந்த ராணின்னு கொண்டாடுவாங்க.

ராணி கல்யாணம் பண்ணிக்கலையே தவிர, கன்னி இல்லைன்னு தீர்மானமா சொல்ற படம் இது! மகா துணிச்சலான விஷயம். படம் வெளியான அத்தனை தேசத்திலும் தீ வெச்ச மாதிரி ஓடிட்டிருக்கு - இங்கிலாந்து உட்பட.

ரொம்ப சிக்கலான காலகட்டத்துல, சின்ன வயசுல ராணியானவங்க எலிஸபெத். அரசு - அரச குடும்பம் ரெண்டுமே மத குருமார்களோட கட்டுப்பாட்டுல இருந்த காலம். (16-ம் நூற்றாண்டு) அப்ப பட்டத்துக்கு வர்ற ராணி, ஒரு சாதாரண ஆசாமியை லவ் பண்றது, அவன் கூட டான்ஸ் ஆடறதுன்னு ரொம்ப கேஷுவலா நடந்துக்கறது மதகுருக்களுக்கு மகா கடுப்பா இருக்கு. முக்கியப் பிரச்னைகள்ல கருத்து சொல்லக் கூட ராணிக்கு ஏகப்பட்ட இடைஞ்சல். 'கௌரவமான ஒரு பையனைப் பார்த்துத் தரோம். கல்யாணம் பண்ணிக்கோ'ன்னு வற்புறுத்தறாங்க. But she never accepts. கொலை முயற்சிகள், சதிகள், போராட்டங்கள், போர், தோல்வின்னு பல சங்கடங்கள் ராணிக்கு. புத்திசாலித்தனத் தோட எல்லாத்தையும் சமாளிக்கறாங்க. 'நிறைய கிறிஸ்தவ சபைகள், நிறைய மத குருக்கள் இருக்கறதுனாலதானே பிரச்னை. ஒரே சபையா அமைக்கலாம்'னு யோசிக்கறா. இதெல்லாம் எவ்ளோ பெரிய பிரச்னையாகும்!' But, ராணி புத்திசாலி. ஒரு சின்னப் பொண்ணுக்குரிய தோற்றம்; ஞானிக்குரிய விவேகம் - ரெண்டின் சரியான கலவையா, விஸ்வரூபம் காட்டறாங்க.

காதல் கைகூடலை. வேற புருஷன் தேடிக்கறதுலயும் விருப்பமில்லை. ஸோ, 'நான் இங்கிலாந்தையே மணக்கிறேன்'னு announce பண்ணிடறாங்க.

விறுவிறுப்பான இந்தப் படத்தோட மிகப் பெரிய ப்ளஸ் பாயின்ட், கேமரா.

ராணியோட அரண்மனை பிரும்மாண்டத்தை அதிக வெளிச்சமே இல்லாம - கேண்டில் எஃபக்ட்லேயே காட்டியிருக்காங்க. உடைகள், கட்டடங்கள், ஆபரணங்கள், டான்ஸ் மூவ்மென்ட், விருந்துக் காட்சிகள் - எல்லாத்துலேயும் நாலு நூற்றாண்டுகளுக்கு முந்தைய தன்மையை அச்சு அசலா கொண்டு வந்திருக்காங்க.

இந்தப் படத்தைப் பார்த்துட்டு சேகர் கபூரைக் கூப்பிட்டு நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை வரலாறை எடுக்கச் சொல்லியிருக்கு தென்னாப்பிரிக்க அரசு!

கபூருக்கு, பாண்டிட் குயின் வாங்கித் தந்த பேரை விட, இந்த 'குயின்' இன்னும் பெரிய பேர் வாங்கித் தந்திருக்கு.

இந்தியன் பனோரமா செக்ஷன்ல ஒரே ஒரு படம் பார்த்தேன். ராம்கோபால் வர்மாவோட 'சத்யா'. மகா போர். மும்பை அண்டர்கிரவுண்ட் தாதாக்கள் பத்தின கதைன்னு சொல்லிட்டு வழக்கமான அடிதடி மசாலாவை நிறைய கெட்ட வார்த்தைகள் எக்ஸ்ட்ராவா சேர்த்துத் தந்திருக்கார். ஒரே ஒரு புது விஷயம், ஊர்மிளா (தன்ஹா! தன்ஹா!) படம் முழுக்கப் புடைவை கட்டிட்டு வர்றது. அந்தப் புதுமைக்காக மட்டுமே ஃபெஸ்டிவல்ல இடம் கிடைச்சதோ என்னவோ!

சென்னை மியாமி ஆகுமா?

எம்.டீ.வியில், நடுநிசிப் பொழுதில், 'எம்.டீ.வி. கிரைண்டு' என்று ஒரு நிகழ்ச்சியை ஒளிபரப்புவார்கள். அதில், மியாமி போன்ற அமெரிக்க பீச்களில், மேலே, கீழே, படிக் கட்டில், தண்ணீரில் என்று ஆங்காங்கே நின்று கொண்டு (குறைந்தபட்சம் நீச்சலுடை) ஆடுவதைக் காட்டுவார்கள். எதையும், உள்ளூர் டச்சுடன் செய்தால் எடுபடும் என்கிற எண்ணத்தில், அண்மையில் எம்.டீ.வியின் 'சென்னை கிரைண்டு' நடந்தது. இடம் : வி.ஜி.பி. கோல்டன் பீச்சையடுத்த 'எக்ஸ்டஸி லாண்ட்'. ஏறத்தாழ மியாமியை நினைவுபடுத் தும் லொகேஷன். மணற்பரப்பில், இருப தடிக்கு, முப்பதடி அளவில் அரையடி உயரத் துக்கு மரத்தாலான மேடை.

நுழைவுக் கட்டணம் தலைக்கு இருநூறு ரூபாய். மூவாயிரம் வாட்ஸ் மியூஸிக் ஸிஸ்டம் அலறிக் கொண்டிருந்தது. (பகல் இரண்டு மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பம் என்று விளம்பரப்



• வேகமில்லாத ஆட்டம்!

படுத்தப்பட்டாலும், மூன்றரை வரை வந் திருந்தவர்களின் எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

"ஆர்... யூ... ரெடீ... ய்...ய்?" என்று ஐந்து நிமிடத்துக்கொருதரம் ஸ்பீக்கர் அலறினாலும் ரெஸ்பான்ஸ் குறைச்சல்.

ஆட ஆரம்பித்தவர்கள் கூட, ஒரு அரை மணி, ஆடினதும் களைத்துப் போய் விட் டனர்.

நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்க, நஃபீஸா ஜோஸப் வந்திருந்தார். ஒல்லியான தேகம், நல்ல உயரம் (ஹீல்ஸ் மட்டும் ஆறு அங்குலம்!) கறுப்பு டிரஸ், கறுப்புக் கண்ணாடி. "சென்னை யில் அழகான பெண்கள் ஏராளம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் எல்லாம் எங்கே போய் விட்டார்கள்?" என்று உரக்கக் கேட்டார். அதற்கும் ரெஸ்பான்ஸ் இல்லை.

பீர் வாங்கிக் குடித்துவிட்டு மேடையேறி ஆட்டம் போட்ட இளைஞர்கள், நைஸாக ஓரம் கட்டப்பட்டனர். மற்றவர்களிலும், இரண்டு, மூன்று பேராக, தனித் தனியே ஆடிக் கொண்டிருந்தார் கள். கையில் கோக். இசைக்கேற்ப இடுப்பு அசைய, கால்கள் தாளம் போட்டுக் கொண்டிருந்தன. ஆட்டத்தில் வேகமில்லை!

"சென்னை கிரைண்டு என்றதும் நான் ஏதோ எதிர்பார்த்தேன்" என்றார் ஒருவர் உள்ளார்ந்தத் துடன். காரணம், அங்கே ஆடின வர்கள் அனைவருமே ஜீன்ஸ், டீ ஷர்ட்டில்தான் இருந்தனர்.

சென்னை சென்னைதான்! மியாமி மியாமிதான்! நிகழ்ச்சி ஒளி பரப்பாகும்போது தெரியும்... மீண் டும் இந்த லொகே ஷன் தேடி வருவார் க்ளா என்று...!

— சி.எம்.


படம் : ஸ்ரீஹரி



• நஃபீஸா ஜோஸப்



• அனைத்துக் கட்சி ஊர்வலம்.



• புதுப்பிக்கப்பட்ட பழைய பாலமும்; அருகிலேயே புதுப்பாலம்.

பாலத்தில் வெடிக்கும் பிரச்னைகள்

மக்களுக்கான அத்தனை வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்த அரசு, ஒரு கட்டத்தில் தன் முதுகுச் சுமை தாளமாட்டாது ஒவ்வொன்றாய்த் தனியார் வசம் இறக்கி வைக்கத் துவங்க ஆரம்பித்திருக்கிறது. இதனால் அரசு சந்திக்கும் இடர்ப்பாடுகள் எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு நல்ல உதாரணம், கோவையில் 'லார்சன் & டூப்ரோ' கட்டி முடித்துச் சுங்க வரி வசூலிக்கத் துவங்கியிருக்கும் பாலம்.

கோவையிலிருந்து கொச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலை (NH 47)யில் மத்திய – மாநில அமைச்சர்களால் கடந்த மாதம் திறந்து வைக்கப்பட்ட ஒரு பாலம் படும் அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல.

பாலம் திறந்து வைக்கப்பட்ட தானிலிருந்தே இதற்கான சுங்க வரி வசூலிப்பை எதிர்த்துச் சாலை மறியல், உண்ணாவிரதம், அனைத்துக் கட்சி பேரணி, ஊர்வலங்கள்; வாகன உரிமையாளர்கள், டிரைவர்கள் வேலை நிறுத்தம் என அடுத்தடுத்து நிகழ்ந்து, தற்போது 'சுங்கவரி கட்டாமல் பாலத்தின் வழியே' அத்துமீறிச் செல்லும் போராட்டமாய், அது வெடித்துள்ளது. அமைச்சர்கள்,

அதிகாரிகள், முதல்வர், பிரதமர் என மனுக்கள் பறந்து கொண்டிருக்கின்றன.

அப்படியென்ன இதில் பெரும் பிரச்னை? வாகன உரிமையாளர்களின் கூட்டுக் குழுவாக – இந்த வரிகொடா போராட்டத்தில் முழு மூச்சாய் இறங்கியுள்ள லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர்கள் கலிய பெருமாள், ஆறுமுகம், நாகராஜ் ஆகியோரைச் சந்தித்தோம்.

"கேரளா செல்லும் பிரதான சாலை இது. வாகன நெரிசல் ஏற்படுவதால் பழைய பாலத்தோடு இன்னொரு



• அனைத்து வாகன கூட்டுக்குழு தலைவர்கள் கலியபெருமாள், ஆறுமுகம், நாகராஜ்.

பாலமும் கட்டித் தரச் சொல்லி நீண்ட காலமாய்ப் பலரும் கோரிக்கை வைத்து வந்துள்ளனர். கோவை புறவழிச் சாலை அமைப்பதற்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் போட்ட அரசு (நீலம்பூர் - மதுக்கரை சுமார் 27 கி.மீ. நீள சாலை) இந்தப் பால வேலையையும் அவர்களிடமே ஒப்படைத்தது. 27 கி.மீ. நீள சாலைக்கு சுங்க வரி வசூல் சரி. ஆனால் ஏற்கெனவே உள்ள தேசிய நெடுஞ்சாலையில் – புறவழிச்சாலைக்குச் சம்பந்தமில்லாத இடத்தில் – இருந்த ஒரு பாலத்துடன் இன்னொரு பாலத்தையும் சேர்த்துக் கட்டி விட்டு இரு பாலங்களிலும் வசூல் செய்வது முறையாகுமா? மிக நீண்ட புறவழிச் சாலைக்கு வசூலிக்கும் அதே சுங்க வரியை – அதே காலகட்டத்திற்கு (20 வருடங்கள்) ஒரு சிறு பாலத்திற்கு வசூலிப்பது எந்த வகையில் சரி? நாங்கள் சாலைப் பராமரிப்பு வரியாக ஒரு வாகனத்திற்கு 10,000 ரூபாய் வீதம் வருடந்தோறும் கட்டுகிறோம். அதையும் கட்டிவிட்டு இப்படி ஒரு பாலத்திற்கும் வரி கட்ட எப்படி ஒப்புக் கொள்ள முடியும்?"

இது சம்பந்தமாய் நாம் சந்தித்த அனைவருமே கொதித்துப் போய்த்தான் பேசுகின்றனர்.

"இந்தப் பாலத்திற்கு பல கோடி செலவு என்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை அவ்வளவு ஆகியிருக்காது என்பதுதான். இதைவிட மிகப் பெரிய பாலம் சமீபத்தில் ஹைதராபாத்தில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய நீளம் 512 மீட்டர்; அகலம் 12 மீட்டர். செலவு 1.05 கோடிதான். ஆனால் இது வெறும் 32 மீட்டர் நீளம், அகலம் 12 மீட்டர்! இதிலிருந்தே இதில் ஏதோ பூடகம் உள்ளது என்று தெரிய வேண்டாமா?" என்றார் கோவை சிட்கோ தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் வசந்தகுமார்.


பாலத்தின் மீது திரும்பின பக்கமெல்லாம் 'சுங்க வரி கட்டிச் செல்க' என்கிற பலகை பிரம்மாண்டமாய். அதை விட பிரம்மாண்டமாய் வரி வசூல் மையங்கள். வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தத்தான் இரண்டாவதாக ஒரு புதுப் பாலம் கட்டினார்கள். வாகன ஓட்டிகளுக்கும் வசூல் மையத்தினருக்கும் சில விதண்டாவாதங்கள். ஏதோ ஒரு சில லாரிகள் வரி கட்டுவதைத் தவிர கார், பஸ், வேன்கள் பல வரி கட்டாமலே பறப்பதையும் காண முடிந்தது.

இது பற்றி லார்சன் & டூப்ரோ நிறுவனத்தினர் பலரும் பதில் சொல்லத் தயங்கின நிலையில், அதன் அதிகாரி ஒருவரை சந்தித்துக் கேட்டோம். பேட்டியாக இல்லாது தகவல்களாக மட்டும் பேசினார்.

"பல வாகனங்கள் இப்படி வரி கொடுக்

காமல் செல்லத்தான் செய்கின்றன. அவற்றை வாகன எண்களைக் குறித்துக் கொண்டு அனுப்பி விடுகிறோம். இப்படி பணம் கொடுக்காமல் அடம் பிடிக்கிறவர்களால் மட்டுமே நெரிசல் ஏற்படுகிறது. இந்தப் பால வேலை மட்டுமல்ல; கோவை புறவழிச்சாலை இரண்டுமே இண்டர்நேஷனல் டெண்டர். சென்டர், ஸ்டேட் அதிகாரிகள், இன்ஜினியர்கள் வந்து பார்த்து ஆய்வு செய்து கொடுத்த வேலை. இதே பாலத்தை ஒரு கோடி ரூபாயில் கூட கட்ட முடியும். அதன் தரம் எப்படியிருக்கும் என யோசித்துப் பாருங்கள். நாங்கள் இதனை 20 வருஷம் பராமரித்து, இதன் தரத்தை நிரூபித்தே அரசிடம் ஒப்படைக்கப் போகிறோம். இப்போது கட்டுகிற பாலம், சாலைகள் 20 வருஷம் கழித்து எப்படியிருக்கும் என்று யாராலும் உறுதி சொல்ல முடியுமா? ஆனால் நாங்கள் அந்த உறுதியைக் கொடுக்கிறோம். அந்தப் பொறுப்புக்குத்தான் இந்த வசூல். இந்தியாவில் இதோடு ஆறு இடங்களில் இது மாதிரியான பணிகளைச் செய்து முடித்துள்ளோம். தமிழ்நாட்டில் இது முதலாவது.

"கட்டியது ஒரு பாலம்தானே, பழைய பாலத்துக்கு எதற்கு வரி என்கிறீர்கள். ஏற்கெனவே இருந்த பாலத்திற்கு என்னென்ன வேலைகள் செய்துள்ளோம்; அதற்கு எவ்வளவு செலவாகியுள்ளது என்பது எங்களுக்குத்தான் தெரியும். அந்தப் பாலத்தை இடித்துக் கட்டினால்தான் மக்கள் நம்புவார்கள் என்றால் அந்த மனநிலைக்கு நாங்கள் என்ன செய்ய முடியும். அடிக்கடி பாலம் வழியே போய் வரும் கார் உரிமையாளர்களுக்கு மாதாந்திர பாஸ் கொடுத்துள்ளோம். அதே போல் பேருந்துகள் மாதா மாதம் ஒட்டுமொத்த தொகையாய் சுங்கவரி செலுத்த வாக்களித்துள்ளன. என்றாலும் ஒட்டுமொத்தமாய் வரி கொடுக்காமல் வாகனங்கள் செல்லும் நிலையில் நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. இப்படியே போனால் இது மாதிரியான திட்டங்கள் எதுவும் இந்தியாவிலேயே வராது!" என்றார்.



• வசந்தகுமார்

மக்களிடமும், வாகன உரிமையாளர்களிடமும் சமாதானம் பேசிப் பேசிச் சோர்ந்து போயிருந்த உள்ளூர் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமியிடம் "இது சம்பந்தமாக அரசு என்ன செய்யப் போகிறது?" என்று கேட்ட போது, "சி.எம்.மிடம் பேசி முடிவெடுக்க வேண்டும்!" என்று ஒரே வரியில் முடித்துக் கொண்டார்.

தேசிய நெடுஞ்சாலை. மத்திய தரைவழிப் போக்குவரத்து அமைச்சகம் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. உலகப் புகழ்பெற்ற பொதுத்துறை நிறுவனம் தொடர்புள்ள பிரச்னை. எப்படி எதிர் கொள்ளப் போகிறது தமிழக அரசு?

தொகுப்பு, படங்கள் : **கா.சு. வேலாயுதன்**

மனைவி அமைவதெல்லாம்...



• ஹில்லாரி

அமெரிக்காவில் ஒருவர் இரண்டு முறைக்கு மேல் ஜனாதிபதி பதவி வகிக்க முடியாது என்பதால், வரும் தேர்தலில் கிளிண்டனின் மனைவி ஹில்லாரி போட்டியிடப் போவதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்துள்ளன. பத்திரிகைகளும் அது பற்றி எழுத ஆரம்பித்துள்ளன.

இது இப்படியிருக்க, பாகிஸ்தானில் – இம்ரான் கானின் பிரிட்டிஷ் மனைவி ஜெமீமா மேல் ஒரு குற்றச்சாட்டு. தெற்குப் பஞ்சாபிலுள்ள 'உச்' என்ற இஸ்லாமியக் கல்வி மையத்தின் கூரையிலிருந்த பழைமையான 397 ஓடுகளைப் பிரிட்டனிலுள்ள தமது தாய்க்கு அனுப்ப முயற்சி செய்ததாக பாக். சுங்கத்துறை குற்றம் சுமத்தியிருக்கிறது.



• ஜெமீமா

"அவை அசல் ஓடுகள் அல்ல; வெறும் நகல்கள்தான். இதெல்லாம் எங்களைப் பழிவாங்க நடக்கிற அரசியல் சதி!" என்று அறிக்கை விட்டிருக்கிறது இம்ரானின் கட்சியான டெஹ்ரீக்-எ-இன்சாப்!

— குல்லூ

ராஜப்பா உற்சாகமாய்ப் பேசிக் கொண்டிருந்தார்.

"என்னால நம்பவே முடியலே. முதல் நாள்தான் உனக்கு நல்ல டெம்பரேச்சர் இருந்ததே. மயக்கமா நீ இருந்தபோது ஸ்வேதா இந்தப் பக்கமா வந்தா. என்ன ஆச்சு உனக்குன்னு கேட்டதும் புலம்பிட்டேன். நான் வேணாக் கஞ்சி வச்சுத் தர வான்னு அவளாகவே கேட்டா. வேணான்னு சொல்வேனா. ஜமாய்னு சொன்னேன்."

அதாவது குறிப்பாய்ச் சொல்கிறார். நான் மட்டுமில்லை. இன்னொரு ஜீவனும் உனக்காகக் கவலைப்படுகிறது என்று.

"ஸ்வேதா என்றா சொன்னீர்கள்?"

சிவராமிடம் துளிக்கூட நம்பிக்கை வரவில்லை.

அப்படி என்ன செய்து விட்டேன், என் மீது காதல் வர. உண்மையில் அவள் கோபப் படும்படிதான் நிறைய சம்பவங்கள்.

"பொறு. உனக்கே புரியும்."

ராஜப்பாவிடம் மர்மமான புன்னகை நெளிந்தது.



மதியம் சிவராம் தனியாகத்தான் அமர்ந்திருந்தான். டேப்பில் பங்கஜ் உதாஸ். கண் மூடி உட்கார்ந்து இருந்தவனின் நாசியில் நறுமணம். மனசு கிள்ளப்பட்டது.

கண் விழித்தான். எதிரே ஸ்வேதா.

"நீயா..."

விழிகள் வியப்பில் விரிய, நிமிர்ந்து அமர்ந்தான்.

"நானேதான். தேவலையா இப்போது?" என்றாள்.

சுவாதீனமாய் கட்டிலின் ஓரம் அமர்ந்து கொண்டாள்.

சிவராமுக்கு இந்த நிமிடம் அப்படியே நின்று விடக் கூடாதா என்று தோன்றியது. இது என்னவோ புதிர். விசித்திரம். ஸ்வேதா தன்னறைக்கு வருவதாவது. பேசுவதாவது.

"என்ன... பதிலே காணோம்."

"பரவாயில்லை.." என்றான் திணறலுடன்.

"ஆச்சர்யமாய் இருக்கா?"

"ம்.. ம்ஹூம்..."

"இருக்கா... இல்லையா?"

ஆமாமென்று வேறு வழியின்றித் தலையசைக்க கலீரெனச் சிரித்தாள்.

"எனக்கும்தான்..." என்றாள்.

"ராஜப்பா சொன்னார். இந்த ஒரு வாரமும் நீதான் சாப்பிடக் கொடுத்தது.."

"நன்றி சொல்லப் போகிறீர்களா..."

"இல்லை... வந்து..."

"பயப்படாதீர்கள். சும்மா பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். வரட்டுமா..."

எழுந்து நின்றாள். அறையைச் சுற்றுமுற்றும் பார்த்தாள். போய் விட்டாள்.

சிவராமுக்கு அந்த வினாடியே முழுக்க குணமாகி விட்டது.

அவளுக்கு ஏதாவது பிரசண்ட் செய்ய வேண்டும் என்று பரபரத்தது. ஆனால் ராஜப்பா தடுத்து விட்டார்.

"நன்றாக இராது. வேறு சமயம் வரும். பிறந்த நாள் மாதிரி. அப்போது கொடு."

அதுவும் சரியென்றுபட்டது. பிறந்த நாளை எப்படித் தெரிந்து கொள்வது.

ராஜப்பாவே அதற்கும் வழி சொன்னார்.

அதாவது தாமே தெரிந்து சொல்வதாகச் சொன்னார்.

"நீங்க... எப்படி..."



ரிஷபன்

"உனக்கென்ன.. தேதி தெரியணும். அவ்வளவு தானே."

மனிதர் கெட்டிக்காரர். சாதித்து விடுவார்.

''என்ன தரலாம் என்று யோசி. அது போதும்.''

என்ன தருவது... அதையும் அவளையே கேட்டு விடலாமா... உனக்கு என்ன ரொம்பப் பிடிக்கும் என்று.

தகவல் கிடைத்தபோது சிவராமால் நம்பத்தான் முடியவில்லை.

வேலு தெருவில் கிடந்தானாம். ரத்த வாந்தியாம். மேஸ்திரி பார்த்து விட்டு அரசு மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார். சிவராமிடம் வந்து தகவல் சொன்னார்.

"உங்களைப் பார்க்கணும்னு சொன்ன தாலை...'' என்றார் தயக்கத்துடன்.

சிவராம் உடனே கிளம்பி விட்டான்.

"வேலு."

அவனையும் மீறி குரல் நடுங்கியது. கண்கள் ஒளியிழந்து மார்புக்கூடு மேலெழும்பி பார்க்கவே விகாரமாய் இருந்தது.

சிவராமைப் பார்த்ததும அவனுக்குப் பலம் வந்திருக்க வேண்டும். முகத்தில் வெளிச்சம் தெரிந்தது.

''தம்பி... நீங்க வரணுமேன்னு தவிச்சுப் போயிட்டேன்..''

''இங்கே இருக்க வேணாம். வேற கிளினிக்ல உன்னைச் சேர்த்து வைக்கிறேன்'' என்றான் சிவராம்.

வேலு 'வேண்டா'மென்று கையாட்டி

விருது சாதனைக்கல்ல!

"**மு**தன் முதலாகக் கடை திறந்து மாலை நாலரை மணிக்கு முதல் பில் போட்ட வேதனையான அனுபவமும் எனக்குண்டு. அதேபோல் தற்போது கடை திறப்பதற்கு முன்னரே வாசகர்கள் காத்து நின்று புத்தகம் வாங்கிச் செல்லும் சந்தோஷமும் வந்திருக்கிறது. இதற்கு இடைப்பட்ட கால துக்கம், வேதனை, சந்தோஷம் என எல்லாவற்றிற்கும் ஓர் அடையாளம் என்றே இவ்விருதினை



உணர்கிறேன். இதுகூட எனது வெற்றியல்ல. கோவை ஜனத் தொகை 35 லட்சம். அத்தோடு இதன் செல்வச் செழிப்பையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் சிறந்த புத்தக விற்பனையாளனே அல்ல என்றுதான் கூற வேண்டியிருக்கிறது. ஆலையில்லாத ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை என்கிற கதைதான் என் விற்பனைச் சாதனை என்பதும்!"

– இவ்வாண்டின் சிறந்த புத்தக விற்பனையாளருக்கான விருதினைப் பெற்ற கோவை விஜயா பதிப்பக உரிமையாளர் மு. வேலாயுதம் கூறக் கேட்டவர்: **கேயெஸ்வி**

னான்.

"இந்த உசுரு இனிமேல நிக்காது தம்பி. உங்ககிட்டே பொறுப்பை ஒப்படைச்சுட்டா. நிம்மதியா போயிருவேன்."

வரும்போதே வார்டு டாக்டரைப் பார்த்து விட்டிருந்தான். இனி வேலுவின் நாட்கள் குறைந்த எண்ணிக்கையில்தான்.

"தம்பி... நல்ல முடிவுதானே. தனம்.. பத்தி..."

எதிர்பார்ப்பில் வேலுவின் கண்கள் மின்னின.

சிவராம் வேலுவின் கையைப் பற்றிக் கொண்டான்.

"செய்கிறேன். கவலைப்படாதே."

"அது போதும் தம்பி.. அது போதும்."

வேலுவுக்கு படபடப்பில் மூச்சிரைக்க ஆரம்பித்தது.

"தம்பி. இன்னும் ஒரே ஒரு ஆசை.. அந்தப் பொண்ணை ஒருக்கா பார்த்துரணும். கடைசி தடவையா.."

"அழைச்சுக்கிட்டு வரேன்."

"நீ போ தம்பி. எனக்கு இனிமேல் எதுவும் வேணாம்."

சிவராம் சில வினாடிகள் அவனையே பார்த்தவாறு நின்றான்.

வேலுவின் மார்பு வேகமாய் விம்மியது. கண்கள் மெல்ல மூடிக் கொண்டு சுவாசம் சீராக இயங்கியது.

பெருமூச்சு விட்டபடி வெளியேறினான்.

தனலட்சுமியை அழைத்துக் கொண்டு மீண்டும் வந்தபோது காலம் கடந்து விட்டிருந்தது.

வேலுவின் முகத்தில் வியாதிக் களையை மீறி ஒரு தெளிவு தெரிந்தது. தனத்துக்கு நல்லதொரு ஏற்பாட்டைச் செய்து விட்ட நிறைவாக இருக்கலாம்.

"மாமா..." என்று தனம் கதறியபோது உடம்பு அதிர்ந்தது. இழுத்து அணைத்துக் கொண்டான்.

"கவலைப்படாதே. நான் இருக்கிறேன்."

வேலு முன்பே அவனிடம் தெரியப்படுத்தி இருக்க வேண்டும். உறவென்று அவள் சொல்லவில்லைதான். ஆனால் பயமின்றி தயக்கமின்றி அவனுடன் ஒட்டிக் கொண்டாள்.

இறுதிக் காரியங்களுக்கு சிவராமே ஏற்பாடு செய்தான். தனத்தைத் தன்னுடனேயே அழைத்துக் கொண்டு வந்து விட்டான்.

ராஜப்பாதான் முதலில் விசாரித்தது.

"யாருப்பா இது புது உறவு?"

"எனக்கு இனிமேல் துணையாக இருக்கப் போகிறவள்."

"இந்தக் குட்டியா..."

"தாத்தா... புலிக்குட்டி. நாலு தெரியுமா"

"அடேயப்பா. என்ன வாய்."

அசந்து போனார்.

"சிவா. இனிமேல் உனக்கு வேற யாருமே வேணாம். இவ ஒருத்தியே போதும்."

"இவளை ஸ்கூல்ல சேர்க்கணும்."

"கவலையேபடாதே. பக்கத்திலேயே இருக்கு. நடக்கிற தூரம்."

"தனா... நல்லாப் படிக்கணும்..."

"சரிண்ணா..."

"அண்ணாவா..."

ராஜப்பாவுக்கு ஆச்சர்யம் கூடியது.

சிவராம் 'அப்புறம் சொல்வதாய்' சைகை செய்தான்.

கதவைத் திறந்தவர் புரபசரேதான்.

"வா..." என்றார் எதிர்பார்த்தவர் போல.

சிவராம் வரவழைத்துக் கொண்ட நிதானத்துடன் உள்ளே வந்தான்.

"உட்கார். டீ வேணுமா..."

"போடுங்களேன். உங்கள் கையால் தயாரித்த டீ என்றால் எனக்குப் பிரியம்..."

எழுந்து போனார்.

சிவராம் மௌனமாய்க் காத்திருந்தான்.

இரண்டாவது நிமிடம் டீ கப்புகளுடன் வந்து விட்டார்.

"பிளாஸ்க்கில் வைத்திருந்தேன்" என்றார் அவராகவே.

"அதே ருசி..."

குடித்து விட்டு நிமிர்ந்தான்.

"பிஸியான மனிதன் நீ. சும்மா என்னைப் பார்க்க வந்திருக்க மாட்டாய்..."

"இல்லை. சும்மாதான் வந்தேன். உங்களைப் பார்த்து வெகு நாட்களான பிரமை..."

"இல்லையே. போன வாரங் கூட ஃபோனில் பேசினோமே..."

"ஆங்... அதைப் பற்றிக் கூட ஒன்று கேட்க வேண்டும். என் தங்கை என்று..."

புரபசர் புன்னகைத்தார்.

"உனக்குத்தான் என் மீது நம்பிக்கை இல்லையே..."

"வாஸ்தவம். ஆனாலும் பெரியவர் நீங்கள் சொல்வதைக் கேட்பதில் தப்பு ஒன்றும் இல்லையே..."

புரபசருக்கு இந்த கண்ணாமூச்சி விளையாட்டு பிடிக்கவில்லையோ அல்லது மீண்டும் சீண்டி விடப்பட்டாரோ.

"பிடித்த இனிப்பு?" என்றார் திடீரென.

"ஜாங்கிரி."

"தெய்வம்?"

"முருகன்"

"நினைவில் சட்டென்று வரும் வார்த்தை?"

"நம்பிக்கை."

"சிவராம்... நீ ஒரு பெண்ணால் கஷ்டப் படப் போகிறாய். அதுவும் நீ மிகவும் நேசிப்பவளால்"

"புரபசர்."

"போய் வா. இந்த முறை நிச்சயமாய் உனக்கு என் மீது நம்பிக்கை வந்து விடும்."

"இதைத் தீர்க்க இயலாதா?"

"முடியாது. என்னை நம்பு. முழு மனதாய் ஏற்றுக் கொள். உன் விதியையே மாற்றுகிறேன்."

சிவராம் எதுவும் பேசாமல் வெளியே வந்து விட்டான்.



இந்த முறை அவன் நினைத்தபடி நடக்கவில்லை. மாறாக மீண்டும் அவன் குழப்பமடையவே நேர்ந்தது.

வேதாசலம் அவனைப் பார்த்ததும் தடுமாறியது புரிந்தது.

"என்ன..."

"உன்னோடு யாரோ... ஒரு சிறுமி..."

"எனக்கு வேண்டியவரின் பெண்தான். கொஞ்ச நாட்களுக்கு என்னோடு இருப்பாள்."

"ம்..."

வேதாசலத்தால் மகனிடம் எப்போதுமே சரளமாய்ப் பேச முடிந்ததில்லை. வளர்ந்தவன். சுயமாய் முடிவெடுப்பவன்.

தனம் மிரண்டிருந்தாள்.

"என்ன தனா..."

"ஒண்ணுமில்லே..."

பெரிய மனுஷி போல வெடுவெடுக்கென்று அவள் பேசுவது சிவராமுக்குப் பரவசமாய் இருந்தது.

"சும்மா சொல்லு..."

"அண்ணா, மாடிக்கு துணி உலர்த்தப் போனேனா... யாரோ ஒரு மாமா.. மாடியில பயம்மா இருக்குண்ணா..."

புரிந்தது. அந்த விநோத நடமாசர்

"வந்து..."

"சேப்பா... ஒரு கல்கண்டு தந்தார். பாலா சாப்பிடுன்னார்."

பாலாவா!

"ம்... அப்புறம்..."

"அவருக்குத் தெரியாம தூக்கி எறிஞ்சுட்டேன். ஓடி வந்திட்டேண்ணா."

பிஞ்சு உடம்பு அதிர்ந்தது.

சிவராமுக்கு முதன் முறையாய் அந்த விசித்திர நபர் மீது எரிச்சல் வந்தது.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறார். குழந்தையை மிரட்டுகிறாரே.



சிவராம் நின்றது அவர்களுக்குத் தெரியவில்லை. அந்த நேரத்தில் அவன் இருக்கக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லை போலும்.

"ம்... அப்படியா நடந்துச்சு..." என்றான் வேலை ஆட்களில் ஒருவன்.

இந்த ஃப்ளாட்டில் புதிதாய் வேலைக்கு வந்தவன். பழைய ஆள் விவரித்தான்.

அழகிப் போட்டியில் ஓர் ஆச்சரியம்!

இம்மாத ஆரம்பத்தில், கோவையில் நடந்தது தென்னிந்திய அழகிப் போட்டி. அரங்கம் முழுக்க ஆங்கிலமே கோலோச்சிக் கொண்டிருந்த நேரத்தில், ''அனைவருக்கும் வணக்கம்!'' என்கிற திடீர் தமிழ்க் குரலைக் கேட்டபோது, அனைவருக்குமே ஆச்சரியம். இப்படி ஆச்சரியப்பட வைத்தவர் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அல்ல. அழகிகளுக்குக் கிரீடம் சூட்ட வந்திருந்த குஷ்புதான்.

– கேயெஸ்வி

சந்தித்து இருக்கிறாள்.

"பயப்படாதே..."

அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான்.

"அவர் உன்னை ஒன்றும் செய்ய மாட்டார்."

"இல்லையண்ணா. அவர் என்கிட்டே வந்து..."

"இப்ப பார்த்தியா... முனீஸ்வரன் பார்த்துக்கிறாரு. நான் சறுக்க இருந்தப்ப நீ புடிச்சிட்டே. எல்லாம் முறைப்படி செய்ய வேண்டியதைச் செஞ்சதால..."

"ஏன்... வேற மாதிரி எதுவும் முன்னால நடந்திருக்கா.."

"போன தடவை, அதான் அய்யா முடிச்சது. அந்த ஃப்ளாட்ல ஒருத்தி செத்துக் கிடந்தா. ஏதோ அடிச்சிருச்சுன்னு சொன்னாங்க. என்ன நடந்திச்சோ..."

சிவராமுக்கு இரத்தம் உறைந்தது.

என்ன உளறுகிறான்.

"யாரோ தெருவோட போறவ. கட்டடம் கட்டற இடத்துல ஒதுங்கியிருந்தா. மாரடைப்பு. போயிட்டான்னு முடிச்சுட்டாங்க. கட்டடம் கட்ட ஆரம்பிச்ச புதுசு. அப்புறம் நான்தான் மேஸ்திரி அய்யா கையில சொல்லி கோழி வுடச் சொன்னேன். அப்புறமா ஒரு சிக்கல் இல்லே..."

பெருமையாய்ச் சிரித்தான். கேட்டவனுக்கும் சிலிர்த்திருக்க வேண்டும். வேகமாய்த் தலையசைத்தது புரிந்தது.

சிவராம் இருட்டிலேயே சிலையாய் நின்றான்.

(தொடரும்)

பொன்னியின் செல்வன்



நாற்பத்தாறாம் அத்தியாயம்

பொங்கிய உள்ளம்

இளவரசர் யானையின் காதில் மந்திரம் ஓதினார். யானை படுத்தது. இருவரும் அவசரமாக அதன் முதுகிலிருந்து இறங்கினார்கள். கரை தட்டி மணலில் புதைந்திருந்த மரக்கலத்தின் அருகில் சென்று பார்த்தார்கள். அந்தக் கப்பலின் கதி பார்க்கப் பரிதாபமாயிருந்தது. பாய் மரங்கள் தாறுமாறாக உடைந்து கிடந்தன. ஒருவேளை அந்த உடைந்த கப்பலுக்குள்ளேயோ அல்லது அக்கம் பக்கத்திலோ யாராவது இருக்கக் கூடும் என்று சந்தேகித்தார்கள். இளவரசர் கையைத் தட்டிச் சத்தம் செய்தார். பூங்குழலி வாயைக் குவித்துக் கொண்டு கூவிப் பார்த்தாள். ஒன்றுக்கும் பதில் இல்லை. இருவரும் தண்ணீரில் இறங்கிச் சென்று கப்பலின் விளிம்பைப் பிடித்துக் கொண்டு ஏறினார்கள். கப்பலின் அடிப்பலகைகள் பிளந்து தண்ணீரும் மணலும் ஏராளமாக உள்ளே வந்திருந்தன. ஒருவேளை அதை நீரிலே தள்ளிவிட்டுக் கடலில் செலுத்தலாமோ என்ற ஆசை நிராசையாயிற்று. அந்தக் கப்பலை அங்கிருந்து தண்ணீரில் நகர்த்துவது இயலாத காரியம். கரையில் இழுத்துப் போடுவதற்கு ஒரு யானை போதாது; பல யானைகளும் பல ஆட்களும் வேண்டும். அதைச் செப்பனிடப் பல

கல்கி கலெக்ஷன்

அமரர் கல்கி

மாதங்கள் மரக்கலத் தச்சர்கள் வேலை செய்தாக வேண்டும்.

சிதைந்து கிடந்த பாய் மரங்களிடையே சிக்கியிருந்த புலிக்கொடியை இளவரசர் எடுத்துப் பார்த்தார். அது அவருக்கு மிக்க மன வேதனையை அளித்தது என்று நன்றாய்த் தெரிந்தது.

"பூங்குழலி! நீ பார்த்த கப்பல்களில் ஒன்றுதானா இது?" என்று கேட்டார்.

"அப்படித்தான் தோன்றுகிறது. இன்னொரு கப்பல் அடியோடு முழுகித் தொலைந்து போய்விட்டது போலிருக்கிறது!" என்றாள் பூங்குழலி. அவளுடைய குரலில் குதூகலம் தொனித்தது.

"என்ன இவ்வளவு உற்சாகம்?" என்று இளவரசர் கேட்டார்.

"தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு போவதற்கு வந்த கப்பல்கள் முழுகித் தொலைந்து போனால் எனக்கு உற்சாகமாக இராதா?" என்றாள் பூங்குழலி.

"நீ உற்சாகப்படுவது தவறு, சமுத்திர குமாரி! ஏதோ விபரீதமாக நடந்து போயிருக்கிறது. புலிக்கொடி தாங்கிய மரக்கலத்துக்கு இந்தக் கதி நேர்ந்தது எனக்கு வேதனை அளிக்கிறது. இது எப்படி நேர்ந்தது என்றும் தெரியவில்லை. இதில் இருந்த வீரர்களும் மாலுமிகளும் என்ன ஆனார்கள்? அதை நினைத்தால் என் மனம் மேலும் குழம்புகிறது. இன்னொரு கப்பல் முழுகிப் போய் இருக்க வேண்டும் என்றா சொல்லுகிறாய்?"

"முழுகிப் போயிருக்கலாம் என்று சொல்லுகிறேன். முழுகிப் போயிருந்தால் ரொம்ப நல்லது."

"நல்லதில்லவேயில்லை. அப்படி ஒரு நாளும் இராது. இந்தக் கப்பலின் கதியைப் பார்த்து விட்டு, இன்னொரு கப்பல் அப்பால் நிறையத் தண்ணீர் உள்ள இடத்துக்குப் போயிருக்கலாம். இந்தக் கப்பல் ஏன் இவ்வளவு கரையருகில் வந்திருக்க வேண்டும் என்றும் தெரியவில்லை. சோழ நாட்டு மாலுமிகள் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கப்பல் விட்டுப் பழக்கமுள்ள பரம்பரையில் வந்தவர்கள். அவர்கள் இத்தகைய தவறு ஏன் செய்தார்கள்? எப்படியும் இதிலிருந்தவர்கள் தப்பிப் பிழைத்திருக்க வேண்டும். ஒன்று மற்றக் கப்பலில் ஏறிப் போயிருக்க வேண்டும். அல்லது அக்கம் பக்கத்தில் எங்கேயாவது இருக்க வேண்டும்! வா! போய்ப் பார்க்கலாம்!"

"எங்கே போய்ப் பார்ப்பது, இளவரசே! சூரியன் அஸ்தமித்து நாலாபுறமும் இருள் சூழ்ந்து வருகிறதே!" என்றாள் பூங்குழலி.

"சமுத்திரகுமாரி! உன் படகை எங்கே விட்டு வந்தாய்?"

"என் படகு ஏறக்குறைய இந்த ஆற்றின் நடு மத்தியில் அல்லவா இருக்கிறது? யானை மீது வந்தபடியால், அதுவும் நீங்கள் யானையைச் செலுத்திய படியால், இவ்வளவு சீக்கிரம் வந்து விட்டோம். படகில் ஏறியிருந்தால் நள்ளிரவுக்குத்தான் இங்கு வந்திருப்போம்."

"சரி! நன்றாக இருட்டுவதற்குள் இந்த நதிக்கரையோரமாகப் போய்ப் பார்க்கலாம் வா! இங்குள்ள மரங்கள் கடல் நன்றாய்த் தெரியாமல் மறைக்கின்றன. ஒருவேளை இன்னொரு கப்பலைக் கடலில் சற்றுத் தூரத்தில் கொண்டு போய் நிறுத்தியிருக்கலாம் அல்லவா?"

யானையை அங்கேயே விட்டு விட்டு இருவரும் நதிக் கரையோரமாகக் கடலை நோக்கிப் போனார்கள். சீக்கிரத்திலேயே கடற்கரை வந்துவிட்டது. கடலில் அமைதி குடி கொண்டிருந்தது. அலை என்பதற்கு அறிகுறியும் இல்லை. கண்ணுக்கெட்டிய தூரம் ஒரே பச்சை வர்ணத் தகடாகத் தோன்றியது. கடலின் பச்சை நிறமும் வானத்தின் மங்கிய நீல நிறமும் வெகு தூரத்திற்கு அப்பால் ஒன்றாய்க் கலந்தன.

மரக்கலமோ, படகோ ஒன்றும் தென்படவில்லை. ஒன்றிரண்டு பறவைகள் கடலிலிருந்து கரையை நோக்கிப் பறந்து வந்தன. அவ்வளவுதான்!

சிறிது நேரம் அங்கே நின்று நாலாபுறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்துவிட்டு, "சரி! புதைந்த மரக்கலத்துக்குப் போகலாம்!" என்றார் இளவரசர்.

இருவரும் வந்த வழியே திரும்பி நடக்கத் தொடங்கினார்கள்.

"பூங்குழலி! நீ எனக்குச் செய்த உதவியை என்றும் மறக்க மாட்டேன். ஆனால் இங்கே நாம் பிரிந்து விட வேண்டியதுதான்" என்றார் இளவரசர்.

பூங்குழலி மௌனமாயிருந்தாள்.

"நான் சொல்கிறது காதில் விழுந்ததா? அந்தப் புதைந்த கப்பலிலேயே நான் காத்திருக்கத் தீர்மானித்து விட்டேன். சேநாதிபதி முதலியவர்கள் எப்படியும் இந்த இடத்தைத் தேடிக் கொண்டு வந்து சேர்வார்கள். அவர்களுடன் கலந்தாலோசித்து மேலே செய்ய வேண்டியதைப் பற்றி முடிவு செய்வேன். ஆனால் உனக்கு இனி இங்கே வேலை இல்லை. உன் படகைத் தேடிப் பிடித்துப் போய் விடு. என் தந்



தையைப் பற்றி நான் கூறியதை நினைவில் வைத்துக் கொள்..."

பூங்குழலி தயங்கி நின்றாள். அங்கிருந்த மரம் ஒன்றின் மீது சாய்ந்தாள். அதன் தாழ்ந்த கிளை ஒன்றை அவள் பிடித்துக்கொண்டாள்.

"என்ன, சமுத்திரகுமாரி? என்ன?"

"ஒன்றுமில்லை, இளவரசரே! இங்கேயே தங்களிடம் விடைபெற்றுக் கொள்கிறேன். போய் வாருங்கள்!"

"கோபமா, பூங்குழலி!"

"கோபமா? தங்களிடம் கோபங் கொள்ள இந்தப் பேதைக்கு என்ன அதிகாரம்? அவ்வளவு அகம்பாவம் நான் அடைந்து விடவில்லை."

"பின்னர், ஏன் திடீரென்று இங்கே நின்று விட்டாய்?"

"கோபம் இல்லை, ஐயா! களைப்புத்தான். நான் உறங்கி இரண்டு நாள் ஆகிறது. இங்கேயே சற்றுப் படுத்திருந்து விட்டு என் படகைத் தேடிக் கொண்டு போகிறேன்."

அது பௌர்ணமிக்கு மறுநாள். ஆகையால் அச்சமயம் கீழைக்கடலில் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தது. இரண்டொரு மங்கிய கிரணங்கள் பூங்குழலியின் முகத்திலும் விழுந்தன.

இளவரசர் அந்த முகத்தைப் பார்த்தார். அதில் குடி கொண்டிருந்த சோர்வையும் களைப்பையும் பார்த்தார். கண்கள் பஞ்சடைந்து இமைகள் தாமாக மூடிக்கொள்வதையும் பார்த்தார்.

சந்திரன் உதயமாகும்போது செந்தாமரை குவிதல் இயற்கைதான். ஆனால் பூங்குழலியின் முகத்தாமரை அப்போது குவிந்தது என்று மட்டும் சொல்வதற்கில்லை. அது வாடி வதங்கிச் சோர்ந்து போயிருந்தது.

"பெண்ணே! தூங்கி இரண்டு நாளாயிற்று என்றாயே? சாப்பிட்டு எத்தனை நாள் ஆயிற்று?" என்றார்.

"சாப்பிட்டும் இரண்டு நாளைக்கு மேல் ஆயிற்று. தங்களுடன் இருந்தவரையில் பசியே தெரியவில்லை."

"என் மூடத்தனத்தை என்னவென்று சொல்வது? இன்று பகல் நாங்கள் எல்லாரும் வயிறு புடைக்க விருந்துண்டோம். 'நீ சாப்பிட்டாயா?' என்று கூடக் கேட்கத் தவறி விட்டேன்! வா பூங்குழலி! என்னுடன் அந்தப் புதைந்த கப்பலுக்கு வா! அதில் தானியங்கள் சிதறிக் கிடந்ததைப் பார்த்த ஞாபகம் இருக்கிறது. அந்தத் தானியங்களைத் திரட்டி இன்று இரவு கூட்டாஞ்சோறு சமைத்து உண்போம். சாப்பிட்ட பிறகு நீ உன் வழியே போகலாம்..."

"ஐயா! சாப்பிட்டால் உடனே அங்கேயே படுத்துத் தூங்கி விடுவேன். இப்போதே கண்ணைச் சுற்றுகிறது."

"அதனால் என்ன? நீ அந்தப் புதைந்த கப்பலில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கு! நானும் யானையும் கரையிலிருந்து காவல் காக்கிறோம். பொழுது விடிந்ததும் நீ உன் படகைத் தேடிப் போ!"

இவ்விதம் சொல்லி இளவரசர் பூங்குழலியின் கரத்தைப் பற்றி அவளைத் தாங்குவார் போல நடத்தி அழைத்துக் கொண்டு சென்றார். உண்மையிலேயே அவளுடைய கால்கள் தள்ளாடின என்பதைக் கண்டார். அந்தப் பெண்ணின் அன்புக்கு ஈரேழு உலகிலும் இணை ஏது என்று எண்ணியபோது அவருடைய கண்களில் கண்ணீர் துளித்தது.

புதைந்திருந்த கப்பலுக்கு அவர்கள் திரும்பி வந்து சேர்ந்தபோது அக்கப்பலுக்குப் பின்னால் புகை கிளம்புவதைக் கண்டு திடுக்கிட்டார்கள். ஒருவேளை அந்தக் கப்பலைச் சேர்ந்தவர்கள் எங்கேயோவது போயிருந்து திரும்பி வந்திருக்கலாம் அல்லவா? திடீரென்று அவர்கள் முன்னால் தோன்றினால் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்று நேரிடக்கூடும். ஆகையால் மெள்ள மெள்ளச் சத்தமிடாமல் சென்றார்கள். வெகு சமீபத்தில் அவர்கள் போன பிறகும் பேச்சுக்குரல் ஒன்றும் கேட்கவில்லை. மறைவில் இருப்பவர்கள் யார், அவர்கள் எத்தனை பேர் என்றும் தெரியவில்லை. வள்ளிக்கிழங்கு சுடும் மணம் மட்டும் கம்மென்று வந்தது. பூங்குழலியின் நிலையை இப்போது இளவரசர் நன்கு அறிந்திருந்தபடியால் அவளுடைய பசியைத் தீர்ப்பது முதல் காரியம் என்று கருதினார். ஆகையால் வந்தது வரட்டும் என்று கப்பலைச் சுற்றிக்கொண்டு அப்பால் சென்று பார்த்

தார். அங்கே அடுப்பு மூட்டிச் சமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது ஒரு பெண்மணி என்று தெரிந்தது. யார் அந்தப் பெண்மணி என்பதும் அடுத்தகணத்திலேயே தெரிந்து போயிற்று. அந்த மூதாட்டி இவர்களைக் கண்டு ஆச்சரியப்பட்டதாகத் தெரியவில்லை. இவர்களை எதிர்பார்த்தவளாகவே தோன்றியது. வாய்ப் பேச்சின் உதவியின்றி இவர்களை அம்மூதாட்டி வரவேற்றாள். சற்று நேரத்துக்கெல்லாம் அமுதும் படைத்தாள். பழையாறை அரண்மனையில் அருந்திய இராஜ போகமான விருந்துகளையெல்லாம் காட்டிலும் இம்மூதாட்டி அளித்த வரகரிசிச் சோறும், வள்ளிக் கிழங்கும் சுவை மிகுந்ததாக இளவரசருக்குத் தோன்றியது.

சாப்பிட்ட பிறகு மூன்று பேரும் கப்பலின் தளத்துக்குப் போய்ச் சேர்ந்தார்கள். சந்திரன் இப்போது நன்றாக மேலே வந்திருந்தான். கப்பலின் தளத்திலிருந்து பார்த்தபோது, கடலும் தொண்டைமானாறும் ஒன்றாகக் கலக்கும் இடமும் அதற்கு அப்பால் பரந்த கடலும் தெரிந்தன. முன்மாலை இருள்வேளையில் பச்சைத் தாமிரத் தகட்டைப் போல் தோன்றிய கடல் இப்போது பொன் வண்ண நிலாவின் கிரணங்களினால் ஒளி பெற்றுத் தங்கத் தகடாகத் திகழ்ந்தது.

அவர்கள் இரவில் திறந்த வெளியில் சுற்றிலும் நீர் சூழ்ந்த இடத்தில் இருந்த போதிலும் புழுக்கத்தினால் உடம்பு வியர்த்தது. காற்று என்பது லவலேசமும் இல்லை. இதைப் பற்றி இளவரசர் பூங்குழலியிடம் கூறியதை அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்துகொண்டாள். வானத்தில் சந்திரனைச் சுற்றி ஒரு சாம்பல் நிற வட்டம் ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினாள். "சந்திரனைச் சுற்றி வட்டமிட்டிருந்தால் புயலும் மழையும் வரும் என்பதற்கு அடையாளம்" என்று பூங்குழலி விளக்கிக் கூறினாள். "புயல் வருகிறபோது வரட்டும்; இப்போது கொஞ்சம் காற்று வந்தால் போதும்!" என்றார் இளவரசர். பிறகு அந்த மூதாட்டி எப்படி அவ்வளவு சீக்கிரத்தில் அங்கு வந்து சேர்ந்திருக்க முடியும் என்று தமது வியப்பைத் தெரிவித்தார். "என் அத்தைக்கு இது ஒரு பெரிய காரியம் அல்ல; இதைவிட அதிசயமான காரியங்களை அவர் செய்திருக்கிறார்!" என்றாள் பூங்குழலி. "மேலும் தங்களிடம் அவருக்கு இருக்கும் அன்புக்கு அளவே கிடையாது. அன்பின் சக்தியினால் எதைத்தான் சாதிக்க முடியாது?" என்றாள்.

இந்தப் பேச்சையும் அந்த மூதாட்டி எப்படியோ தெரிந்துகொண்டு பூங்குழலியின் முகத்தைத் திருப்பி ஒரு திக்கைச் சுட்டிக் காட்டினாள். அங்கே அவர்கள் ஏறி வந்த யானை நின்று கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் கம்பீரமான உயர்ந்த சாதிக் குதிரை ஒன்று நின்றதைக் கண்டு இருவரும் அதிசயித்தார்கள்.

"இந்தக் குதிரையின் மீது ஏறி இவர் வந்தாரா என்ன? இவருக்குக் குதிரை ஏறத் தெரியுமா?" என்று இளவரசர் வியப்புடன் கேட்டார்.

"அத்தைக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. குதிரை ஏற்றம், யானை ஏற்றம் எல்லாம் தெரியும். படகு வலிக்கத் தெரியும். சிலசமயம் காற்றில் ஏறிப் பிரயாணம் செய்வாரோ என்று நினைக்கத் தோன்றும். அவ்வளவு சீக்கிரம் ஓரிடத்திலிருந்து இன்னோரிடம் வந்து விடுவார். எப்படி வந்திருக்க முடியும் என்று நமக்கு ஆச்சரியமாயிருக்கும்.

இளவரசர் அப்போது வேறோர் ஆச்சரியத்தில் மூழ்கியிருந்தார். கரையில் மேய்ந்து கொண்டிருந்த குதிரையின் கம்பீரத் தோற்றந்தான் அவருக்கு அத்தகைய வியப்பை உண்டாக்கியது.

"அரபு நாட்டில் வளரும் உயர்ந்த சாதிக் குதிரைகளில் மிக உயர்ந்த குதிரையல்லவா இது? எப்படி இங்கே வந்தது? எப்படி இந்த மூதாட்டிக்குக் கிடைத்தது?" என்று தமக்குத் தாமே சொல்லிக்கொண்டார்.

பூங்குழலி சமிக்ஞை பாஷையினால் இதைப் பற்றி ஊமை ராணியிடம் கேட்டாள். (ஆம்: 'ஊமை ராணி' என்று இனி நாம் அந்த மூதாட்டியை அழைக்கலாம் அல்லவா?) 'யானை இறவு'த் துறைக்குப்

பக்கத்தில் இந்தக் குதிரை கடலிலிருந்து கரையேறியது என்றும், கரை ஏறியதும் தெறி கெட்டுப் பிரமித்து நின்று கொண்டிருந்ததென்றும், ஊமை ராணி அதை அன்புடன் தட்டிக் கொடுத்து வசப்படுத்தி அதன் மேல் ஏறிக்கொண்டு வந்ததாகவும் தெரியப்படுத்தினாள். இதைக் கேட்ட இளவரசரின் வியப்பு மேலும் அதிகமாயிற்று.

பேசிக் கொண்டிருக்கும்போதே பூங்குழலியின் கண்ணிமைகள் மூடிக் கொள்வதை இளவரசர் கவனித்தார். "முன்னமே தூக்கம் வருகிறது என்று சொன்னாய். நீ படுத்துக் கொள்!" என்றார். அப்படிச் சொன்னதுதான் தாமதம்; பூங்குழலி அவ்விடமிருந்து சற்று விலகிச் சென்று படுத்துப் பக்கத்தில் கிடந்த கப்பல் பாய் ஒன்றை எடுத்துப் போர்த்திக்கொண்டாள். படுத்த சிறிது நேரத்துக்கெல்லாம் தூங்கிப் போனாள். அவள் மூச்சுவிட்ட தோரணையிலிருந்து அவள் தூங்கி விட்டாள் என்று தெரிந்தது.

ஆனால் தூக்கத்திலேயே அவளுடைய வாய் மெல்லிய குரலில் பாட்டு ஒன்றை முணுமுணுத்தது.

"அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக் கடல்தான் பொங்குவதேன்?"

ஆகா! இதே பாட்டை வந்தியத்தேவன் நேற்று அடிக்கடி முனகிக் கொண்டிருந்தான்! இவளிடந்தான் கற்றுக் கொண்டான் போலும். மற்றொரு சமயம் சமுத்திர குமாரி விழித்துக் கொண்டிருக்கும் போது பாட்டு முழுவதையும் பாடச் சொல்லிக் கேட்க வேண்டும் என்று இளவரசர் எண்ணினார். உடனே ஊமை ராணியிடம் அவர் கவனம் சென்றது. ஆகா! எல்லாருக்குந்தான் சிலசமயம் அகக் கடல் பொங்குகிறது; நெஞ்சகம் விம்முகிறது! ஆனாலும் வாய் திறந்து தன் உணர்ச்சிகளை என்றும் வெளியிட முடியாத இந்த மூதாட்டியின் உள்ளக் கொந்தளிப்புக்கு உவமானம் ஏது? எத்தனை ஆசாபாசங்கள், எத்தனை மகிழ்ச்சிகள், எத்தனை துயரங்கள், எவ்வளவு கோபதாப ஆத்திரங்கள் எல்லாவற்றையும் இவள் தன் உள்ளத்திலேயே அடக்கி வைத்திருக்கிறாள்? எத்தனை காலமாக அடக்கி வைத்திருக்கிறாள்...?

ஊமை ராணி இடம் பெயர்ந்து இளவரசரின் அருகில் வந்து அமர்ந்தாள். அவருடைய தலைமயிரை அன்புடன் கோதி விட்டாள். அவருடைய இரண்டு கன்னங்






களையும் பூவைத் தொடுவதைப் போல் தன் வலிய வைரமேறிய கரங்களினால் மிருதுவாகத் தொட்டுப் பார்த்தான். இளவரசருக்குச் சற்று நேரம் என்ன செய்வது என்றே தெரியவில்லை. பிறகு அந்த மூதாட்டியின் பாதங்களைத்தொட்டுத் தம் கண்ணில் ஒற்றிக்கொண்டார். அவள் அந்தக் கரங்களைப் பிடித்துத் தன் முகத்தில் வைத்துக் கொண்டாள். இளவரசருடைய கரங்கள் விரைவில் அந்தப் பெண்ணரசியின் கண்ணில் பெருகிய நீரால் நனைந்து ஈரமாயின.

ஊமை ராணி சமிக்ஞையினால் இளவரசரையும் படுத்து உறங்கச் சொன்னாள். தான் காவல் இருப்பதாகவும் கவலையின்றித் தூங்கும்படியும் சொன்னாள். இளவரசருக்குத் தூக்கம் வரும் என்று தோன்றவில்லை. ஆயினும் அவளைத் திருப்தி செய்வதற்காகப் படுத்தார். படுத்து வெகு நேரம் வரையில் அவர் உள்ளக் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. பிறகு வெளியில் சிறிது குளிர்ந்த காற்று வந்தது. உடல் குளிரவே உள்ளம் குவிந்தது; இலேசாக உறக்கமும் வந்தது.

ஆனால் உறக்கத்திலும் இளவரசரின் மனம் அமைதியுறவில்லை. பற்பல விசித்திரமான கனவுகள் கண்டார். அரபு நாட்டுச் சிறந்த குதிரை



ஒன்றின்மீது ஏறி வானவெளியில் பிர யாணம் செய்தார். மேக மண்டலங் களைக் கடந்து வானுலகில் புகுந்தார். அங்கே தேவேந்திரன் அவரை ஐராவதத் தில் ஏற்றி அழைத்துச் சென்றான். தன்னுடைய இரத்தினச் சிங்காதனத்தில், அவரை உட்காரச் சொன்னான். "ஓ! இது எனக்கு வேண்டாம். இந்தச் சிங்காதனத் தில் என் பெரிய தாயார் ஊமை ராணியை ஏற்றி வைக்க விரும்புகிறேன்" என்று இளவரசர் சொன்னார். தேவேந் திரன் சிரித்து, "அவள் இங்கே வரட்டும், பிறகு பார்க்கலாம்" என்றான். தேவேந் திரன் இளவரசருக்குத் தேவாமிர்தத்தைக் கொடுத்துப் பருகச் சொன்னான். இளவர சர் அருந்திப் பார்த்துவிட்டு, "ஓ! இது காவேரித் தண்ணீர் போல் அவ்வளவு நன்றாயில்லையே?" என்றார். தேவேந் திரன் இளவரசரை அந்தப் புரத்துக்கு அழைத்துப் போனான். அங்கே தேவ மகளிர் பலர் இருந்தார் கள். இந்திராணி இளவர சரைப் பார்த்து "இந்தப் பெண்களுக்குள்ளே



அழகில் சிறந்தவள் யாரோ அவளை நீர் மணந்து கொள்ளலாம்" என்றாள். இளவரசர் பார்த்துவிட்டு, "இவர்களில் யாவரும் பூங்குழலியின் அழகுக்கு அருகிலும் வர மாட்டார்கள்" என்றார். திடீரென்று இந்திராணி இளையபிராட்டியாக மாறினாள். "அருள்மொழி! என் வானதியை மறந்து விட்டாயா?" என்று கேட்டாள். இளவரசர் "அக்கா! அக்கா! எத்தனை நாளைக்கு என்னை நீ அடிமையாக வைத்திருக்கப் போகிறாய்? உன்னுடைய அன்பின் சிறையைக் காட்டிலும் பழுவேட்டரையரின் பாதாளச் சிறை மேல்! என்னை விடுதலை செய்! இல்லாவிட்டால் விராடராஜனுடைய புதல்வன் உத்தரகுமாரனைப் போல் என்னை அரண்மனையிலேயே இருக்கச் செய்து விடு. ஆடல் பாடல்களில் காலங்கழித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார். இளையபிராட்டி குந்தவை தன் பவழச் செவ்விதழ்களில் காந்தள் மலரையொத்த விரலை வைத்து அவரை வியப்புடன் நோக்கினாள். "அருள்மொழி! நீ ஏன் இப்படி மாறிப் போய் விட்டாய்? யார் உன் மனத்தைக் கெடுத்தார்கள்? ஆம், தம்பி! அன்பு என்பது ஓர் அடிமைத்தனம்தான். அதற்கு நீ கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும்" என்றாள். "இல்லை, அக்கா! இல்லை! நீ சொல்வது தவறு. அடிமைத்தனம் இல்லாத அன்பு உண்டு. உனக்கு அதைக் காட்டட்டுமா? இதோ கூப்பிடுகிறேன், பார்...! பூங்குழலி! பூங்குழலி! இங்கே வா!" என்று கூவினார்.

பலபலவென்று பொழுது விடியும் சமயத்தில் பூங்குழலி குதிரையின் காலடிச் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டாள். ஊமைராணி குதிரைமேல் ஏறிப் புறப்படுவதைப் பார்த்தாள். அவளைத் தடுப்பதற்காக எழுந்து ஓடினாள். அவள் கப்பலிலிருந்து இறங்கிக் கரைக்குச் செல்வதற்கு முன்னால் குதிரை பறந்து சென்று விட்டது.

உதய நேரம் மிக்க மனோகரமாயிருந்தது. பூங்குழலியின் உள்ளத்தில் என்றுமில்லாத உற்சாகம் ததும்பியது. அங்கிருந்தபடியே கப்பலின் மேல்தளத்தைப் பார்த்தாள். இளவரசர் தூங்கிக் கொண்டிருந்தார். பூங்குழலி நதிக்கரையோரமாகப் பறவைகளின் இனிய கானத்தைக் கேட்டுக் கொண்டு நடந்தாள். ஒரு மரத்தின் வளைந்த கிளையில் ஒரு பெரிய ராட்சதக் கிளி உட்கார்ந்திருந்தது. பூங்குழலியைக் கண்டு அது அஞ்சவில்லை. "எங்கே வந்தாய்?" என்று கேட்பதுபோல் அவளை உற்றுப் பார்த்தது.

"கிளித் தோழி! இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் இளவரசர் இங்கிருந்து போய் விடுவார். பிறகு எனக்கு நீதான் துணை. என்னோடு பேசுவாய் அல்லவா?" என்று பூங்குழலி கேட்டாள்.

அச்சமயம் "பூங்குழலி! பூங்குழலி!" என்ற குரல் கேட்டது. முதலில் கிளிதான் பேசுகிறது என்று நினைத்தாள். இல்லை; குரல் கப்பலிலிருந்து வருகிறது என்று உணர்ந்தாள். இளவரசர் அழைக்கிறார் என்று அறிந்து குதித்தோடினாள். ஆனால் கப்பல் மேல் ஏறிப் பார்த்தபோது இளவரசர் இன்னமும் தூங்கிக்கொண்டிருந்தார். பூங்குழலி அவர் அருகில் சென்றபோது அவருடைய வாய் மீண்டும், "பூங்குழலி! பூங்குழலி!" என்று முணுமுணுத்தது. உடல் புளகாங்கிதம் கொண்ட அப்பெண், இளவரசரின் அருகில் சென்று அவருடைய நெற்றியைத் தொட்டு எழுப்பினாள்.

இளவரசர் உறக்கமும் கனவும் கலைந்து எழுந்தார். கீழ்த்திசையில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். பூங்குழலியின் முகம் மலர்ந்த செந்தாமரையைப் போல் பிரகாசித்தது. "என்னை அழைத்தீர்களே, எதற்கு?" என்று கேட்டாள். "உன் பெயரைச் சொல்லி அழைத்தேனா, என்ன? தூக்கத்தில் ஏதோ பேசியிருப்பேன். நீ நேற்றிரவு தூங்கிக் கொண்டே பாடினாயே! நான் தூக்கத்தில் பேசக் கூடாதா?" என்றார்.

இளவரசர் குதித்து எழுந்தார். "ஓகோ! இத்தனை நேரமா தூங்கி விட்டேன்! பெரியம்மா எங்கே?" என்று கேட்டுச் சுற்று முற்றும் பார்த்தார். அந்த மூதாட்டி அதிகாலையில் குதிரை ஏறிப் போய் விட்டதைச் சமுத்திரகுமாரி கூறினாள்.

"நல்ல காரியம் செய்தாள் சமுத்திரகுமாரி! உன் களைப்புத் தீர்ந்து விட்டதாகக் காண்கிறது. நீயும் இனி விடை பெற்றுக் கொள்ளலாம். என் இனிய நண்பர்கள்

வரும் வரையில் நான் இங்கேயே இருக்க வேண்டும். அதுவரை இந்தக் கப்பலைச் சோதித்துப் பார்க்கப் போகிறேன்!" என்றார்.

பூங்குழலி, "அதோ! அதோ!" என்று சுட்டிக் காட்டினாள். அவள் காட்டிய திசையை இளவரசர் நோக்கினார். கடலில் வெகு தூரத்தில் ஒரு பெரிய மரக்கலம் தெரிந்தது. கடற்கரையோரமாக ஒரு சிறிய படகு வருவதும் தெரிந்தது. படகிலே ஐந்தாறு பேர் இருந்தார்கள்.

"ஆகா! இப்போது எல்லா விவரங்களும் தெரிந்து போய் விடும்!" என்றார் இளவரசர்.

தாம் அங்கிருப்பது தெரியாமல் ஒரு வேளை படகு கடற்கரையோடு போய் விடலாம் என்று இளவரசர் அஞ்சினார். ஆகையால் உடனே புதைந்த கப்பலிலிருந்து கீழிறங்கி நதிக்கரையோரமாகக் கடற்கரையை நோக்கிச் சென்றார். பூங்குழலி அவரைத் தொடர்ந்து சென்றாள். யானையும் அவர்களைப் பின் தொடர்ந்து அசைந்தாடிக் கொண்டு சென்றது.

கடற்கரையிலே போய் நின்றார்கள். மரக்கலம் அவர்களை விட்டு தூரத் தூரப் போய்க் கொண்டிருந்தது. படகு அவர்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. முதலில் பின்னால் ஒதுங்கி நின்ற பூங்குழலி ஆர்வங் காரணமாகச் சிறிது நேரத்துக்குள் முன்னால் வந்து விட்டாள்.

இளவரசருடைய மனக்கவலைகளுக்கிடையே பூங்குழலியின் ஆர்வம் அவருக்குக் களிப்பை ஊட்டியது. அவர் முகத்தில் குறுநகை ததும்பியது. அவர் மனக் கவலை கொள்ளக் காரணங்களும் நிறைய இருந்தன. தூரத்திலே போய்க் கொண்டிருந்த கப்பலில் தாமும் போயிருக்க வேண்டும் என்றும் அது தன்னை விட்டு விட்டுத் தூர தூரப் போய்க் கொண்டிருந்ததாகவும் அவருக்குத் தோன்றியது. அது மட்டும் அன்று. கிட்ட நெருங்கி வந்து கொண்டிருந்த படகிலே ஓர் ஆள் குறைவாயிருந்ததாகக் காணப்பட்டது. இருக்க வேண்டிய ஒருவர் அதில் இல்லை. ஆம்; அதோ சேநாதிபதி இருக்கிறார்; உடன் வந்த வீரர்கள் இருக்கிறார்கள்; படகோட்டிகள் இருக்கிறார்கள். ஆனால் அந்த வாணர்குலத்து வாலிபனை மட்டும் காணோம். வல்லவரையன் எங்கே? அந்த உற்சாகபுருஷன், அஸகாயசூரன், அஞ்சா நெஞ்சம் படைத்த வீரன், இளைய பிராட்டி அனுப்பி வைத்த அந்தரங்கத் தூதன் எங்கே...? இரண்டு நாள்தான் பழகியிருந்தபோதிலும் இளவரசருக்கு நெடுநாள் பழக்கப்பட்ட நண்பன் போல் அவன் ஆகியிருந்தான். அவனுடைய குணாதிசயங்கள் அவ்வளவாக இளவரசருடைய மனத்தைக் கவர்ந்திருந்தன. அவனைப் படகில் காணாததும் அரிதில் கிடைத்த பாக்கியத்தை இழந்தது போல் இளவரசருக்கு வேதனை உண்டாயிற்று.

படகு இன்னும் நெருங்கிக் கரையோரம் வந்ததும் சேநாதிபதி முதலியவர்கள் தாவிக் கரையில் குதித்தார்கள். சேநாதிபதி பூதி விக்கிரமகேசரி ஓடிவந்து இளவரசரைக் கட்டிக் கொண்டார்.

"ஐயா! நல்ல காரியம் செய்தீர்கள்! எங்களை இப்படிக் கதிகலங்க அடிக்கலாமா...? யானையின் மதம் எப்படி அடங்கிற்று? இந்தப் பொல்லாத யானை இப்போது எவ்வளவு சாதுவாக நின்று கொண்டிருக்கிறது..! இளவரசே! எப்போது இங்கே வந்து சேர்ந்தீர்கள்? பழுவேட்டரையர்களின் கப்பல்களைப் பார்த்தீர்களா? அவை எங்கே?" என்று கொடும்பாளூர்ப் பெரிய வேளார் கேள்விமாரி பொழிந்தார்.

"சேநாதிபதி! எங்கள் கதையைப் பின்னால் சொல்கிறேன். வந்தியத்தேவர் எங்கே? சொல்லுங்கள்!" என்றார்.


"அந்தத் துடுக்குக்காரப் பிள்ளை அதோ போகிற கப்பலில் போகிறான்!" என்று சேநாதிபதி தூரத்தில் போய்க் கொண்டிருந்த கப்பலைக் காட்டினார்.

"ஏன்? ஏன்? அது யாருடைய கப்பல்? அதில் ஏன் வந்தியத்தேவர் போகிறார்?" என்று இளவரசர் கேட்டார்.

"ஐயா! எனக்குப் புத்தி ஒரே கலக்கமாயிருக்கிறது. இந்த வைஷ்ணவனைக் கேளுங்கள்! இவனுக்கு உங்கள் சமாசாரமும் அந்த வாலிபன் சுபாவமும் தெரிந்திருக்கிறது!" என்றார்.

இளவரசர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! வந்தியத்தேவர் ஏன் அக்கப்பலில் போகிறார்? தெரிந்தால் சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றார்.

(தொடரும்)



ஏந்தலன்றோ காந்தி மகான்



இத்தனை நாள் ஆன பின்னும்
ஏழை நெஞ்சே ஏன் துயரம்?
எத்தனை நீ அழுதாலும்
உத்தமர்தான் வருவாரோ?

தன்னுயிரை மன்னுயிர்க்கே
தந்தவர்தான் மாய்ந்தவரோ?
இன்னுயிரும் எமக்களித்த
ஏந்தலன்றோ காந்தி மகான்!

அன்பினிலே அவர் இருப்பார்
அருளினிலே விளங்கிடுவார்
துன்பமுற்ற பேதையர்தம்
துயரினிலே திகழ்ந்திடுவார்.

சின்னஞ்சிறு மதலையரின்
சிரிப்பினிலே மலர்ந்திடுவார்
கன்னியர்கள் அன்னையர்தம்
கண்ணீரில் கலந்திடுவார்

மாதவத்தோர் மாமுனிவர்
ஓதும் மறை தனிலிருப்பார்
பூதலத்தின் புன்னகை போல்
பூக்கும் மலர்க் கூட்டம் அவர்!

ஏழையர்க்கே இரங்கிடுவோர்
இதயங்களில் வீற்றிருப்பார்!
ஊழியர்கள் உழவோரின்
உழைப்பினிலே ஜொலித்திடுவார்!

இத்தனை நான் சொன்ன பின்னும்
ஏழை நெஞ்சே ஏன் துயரம்?

(கல்கி, அக்டோபர் 2, 1948)

கல்கி
கலெக்ஷன்

பரதநாட்டியம்

நமது செந்தமிழ் நாட்டில் இரண்டு அற்புதங்கள் உண்டு. அவை உலகில் வேறு எங்கும் காணமுடியாத அற்புதங்கள். ஒன்று, மாமல்ல புரத்து அழியாப் பாறைச் சிற்பங்கள். இன்னொன்று, பரத நாட்டியக் கலை.

பண்டைக் காலத்தில் பரத நாட்டியம் பாரத தேசம் முழுவதற்கும் உரிய கலையாக இருந்திருக்கக் கூடும். ஆயினும் தற்காலத்தில் அந்தக் கலையை அறிந்தவர்கள் தென்னாட்டிலேதான் உண்டு. அவர்களில் தலைசிறந்தவர் ஸ்ரீமதி பால சரஸ்வதி என்பதைப் பற்றி மாறுபட்ட அபிப்பிராயம் இருப்பதற்கே இடமில்லை.

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் புராதன பரத நாட்டியக்கலை தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி பெற்றது. அதற்கு முக்கிய காரணமாயிருந்தவர் ஸ்ரீமதி பாலசரஸ்வதி அவர்கள்.

சென்ற வாரத்தில் நடந்த பரதநாட்டியப் பள்ளிக் கூடத் திறப்பு விழாவில் நீதிபதி டி.எல். வெங்கட்ராமய்யர் அவர்கள் பேசும்போது, "பரத நாட்டியம் என்றால் காதைப் பொத்திக் கொள்ளும் அளவுக்கு ஒரு காலத்தில் அதைப் பற்றி எனக்குத் தவறான அபிப்பிராயம் இருந்தது. ஸ்ரீமதி பால சரஸ்வதியின் நாட்டியத்தைப் பார்த்த பிறகுதான் அக் கலையின் பெருமையைத் தெரிந்து கொண்டேன்" என்றார்.

இவரைப் போலவே படித்தவர்கள், அறிவாளிகள், கலா ரஸிகர்கள் பலரும் பரத நாட்டியத்தைப் பற்றித் தவறான அபிப்பிராயம் கொண்டிருந்து ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் நாட்டியத்தைப் பார்த்த பிறகு அது எப்படிப்பட்ட அற்புதமான கலை, நமது தென்னாட்டுக்கு எவ்வளவு பெருமையளிக்கும் கலை என்பதை உணர்ந்தார்கள்.

ஆம்; வீணை தனம்மாளின் குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீமதி பாலசரஸ்வதி பரதநாட்டியம் பயின்றது அந்தக் கலை செய்த பாக்கியம் ஆயிற்று. நாளுக்கு நாள் அதன் வியாபகம் வளர்ந்தோங்கியது. வடநாட்டிலும் அதன் பெருமை பிரபலமடைந்தது. டாக்டர் ரவீந்திர நாத டாகூரைப் போன்ற மகான்கள் "பரத நாட்டியத்துக்கு ஒப்பான கலை வேறில்லை" என்றார்கள். தமிழ் நாட்டிலும் வட நாட்டிலும் உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் நூற்றுக் கணக்கானவர்கள் பரதநாட்டியம் பயிலத் தொடங்கினார்கள்.

பரத நாட்டியக் கலை சென்ற பதினைந்து ஆண்டு காலத்தில் இவ்வளவு வியாபகம் அடைந்ததற்குக் காரணமாயிருந்த ஸ்ரீமதி பாலசரஸ்வதி சில காலமாகச் சொந்தக் காரணங்களினால் கச்சேரிகள் அதிகம் செய்வதில்லை.

இதைக் குறித்துப் பரத சாஸ்திரத்தை இயற்றியவரான பரத மாமுனிவரே வருத்தப்பட்டிருப்பார் என்றால், இந்தக் காலத்தில் புதிதாகப் பரத நாட்டியத்தில் பற்றுக் கொண்ட ரஸிகர்களின் ஏமாற்றத்துக்குக் கேட்க வேண்டுமா?

ஆனால் இப்போது ஸ்ரீமதி பாலசரஸ்வதி தாமே கச்சேரி

அமரர் கல்கி

செய்த பாக்கியம்

செய்வதைக் காட்டிலும் சிறந்த தொண்டைப் பரத நாட்டியத்துக்குச் செய்ய முன் வந்திருக்கிறார். சிறுமிகளுக்குப் பரத நாட்டியக் கலையைக் கற்பிப்பதற்கு ஒரு பள்ளிக் கூடத்தையே ஸ்தாபித்திருக்கிறார்.

சென்ற ஏப்ரல் மாதம் 23ம் தேதியன்று சங்கீத கலாநிதி காரைக்குடி சாம்பசிவய்யர், நீதிபதி கனம் டி.எல். வெங்கட்ராமய்யர் முதலியவர்களின் ஆசியுடன்* பள்ளிக்கூடம் ஆரம்பமாயிற்று. ராயப்பேட்டை மோப்ரேஸ் சாலையிலுள்ள சங்கீத வித்வத் சபைக் கட்டடத்தின் மேல் மாடியில் பள்ளிக்கூடம் நடந்து வருகிறது.



பரத நாட்டியக் கலையில் எத்தனையோ நுட்பமான அம்சங்கள் உண்டு. எவ்வளவோ பகுதிகளும் பிரிவுகளும் உண்டு.

தாண்டவம், லாஸ்யம் என்னும் வேறுபாடுகளையும்-நிருத்தம், நிருத்யம், அபிநயம் எனும் பகுதிகளையும், அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம், தில்லானா என்னும் கச்சேரி பாணி வரிசையையும் நன்கு அறிந்து அனுபவிப்பவர்கள் அக் கலையின் ஆனந்தத்தை நன்கு அனுபவிப்பார்கள். வெவ்வேறு அஸ்தங்கள்-முத்திரைகளின் பொருளை அறிந்து பார்க்கிறவர்கள் இன்னும் பூரணமாக அக் கலையின் அற்புதச் சிறப்பை உணர்ந்து அனுபவிப்பார்கள்.

இந்த நுட்பங்கள் எல்லாம் ஒன்றும் தெரியாவிடினும், சிறந்த பரதநாட்டியக் கச்சேரியைப் பார்ப்பவர்களுக்கே வேறு எந்தக் கலையிலும் ஏற்படாத உற்சாகம் உண்டாகத்தான் செய்கிறது.

முக்கியமாக, கேட்பவர்களுக்குத் தெரிந்த மொழியில் பதங்கள் பாடி அபிநயம் செய்யும் போது, யாரும் அதை அறிந்து அனுபவிக்க முடியும். அதிலும் ஸ்ரீமதி பால சரஸ்வதியின் அபிநயத்தின்போது, ரஸிகர் என்று சொல்லிக் கொள்ளும் எவரும் பரவசமடையாமலிருக்க முடியாது. "நித்திரையில் சொப்பனத்தில்" என்ற

பாடலுக்குப் பால சரஸ்வதி அபிநயம் பிடிக்கும்போது, சொப்பனத்தை அவர் எத்தனை விதமாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறார் என்பதைக் கண்டால், நாமும் ஒரு சொப்பன லோகத்துக்கே போய் விடுவோம். "வேலவரே, உமைத் தேடி ஒரு மடந்தை" என்று பாடி அபிநயம் பிடித்தால் வேலவரும் நம் மனக் கண் முன் நிற்பார்; அவரைத் தேடும் மடந்தையும் நம் கண் முன்னால் நிற்பார். வேலவரைப் பிடித்து அந்த மடந்தையின் வசத்தில் ஒப்புவிக்க முடியவில்லையே என்று தான் நாம் கவலையுறுவோம். அபிநயக் கலையில் இன்று ஸ்ரீமதி பால சரஸ்வதிக்கு இணையானவர் வேறு யாரும் இல்லை என்று சொன்னால், அது சிறிதும் மிகைப்படுத்துவது ஆகாது.

இலங்கையில் திரிகோண மலையிலிருந்து இமய மலை அடிவாரம் வரையில், தமிழர்கள் எத்தனையோ பேர் தங்கள் பெண்களுக்குப் பரத நாட்டியம் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளை எங்கே அனுப்புவது என்பது பற்றி இனிமேல் யோசிக்க வேண்டியதில்லை. மியூஸிக் அகாடமியின் ஆதரவில் ஸ்ரீமதி பால சரஸ்வதி நடத்தும் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவிட்டு அவர்கள் நிம்மதியாயிருக்கலாம்.

இந்த நாளில் பரத நாட்டியத்தின் பேரில் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் பிரேமை காரணமாக ஒரு விசித்திர நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. பரதநாட்டியம் கற்பிப்போர் பற்பலர் முன் வந்திருக்கிறார்கள். இவர்களில் சிலர் பிராயம் ஆகாத இளைஞர்கள். பரத நாட்டிய ஆசிரியர் ஒருவரிடம் சில நாள் இருந்து பாடம் கற்று வருகிறார்கள்; பிறகு தாங்களே கற்பிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆறு மாதத்திலும் மூன்று மாதத்திலும் பரதநாட்டியக் கலையைக் கற்பித்து விட்டதாகச் சொல்லி, அரங்கேற்றமும் நடத்தி விடுகிறார்கள். ஆறு மாதத்திலும் மூன்று மாதத்திலும் கற்றுக் கொள்ளக் கூடிய கலை அல்ல பரத நாட்டியம். அவ்விதம் கற்பிக்க முன்வருவோர் அதற்கு லாயக்கானவர்களும் அல்ல.

ஸ்ரீமதி பால சரஸ்வதியின் பரத நாட்டியப் பள்ளிக் கூடத்தில் சேரும் பெண் குழந்தைகள் பாக்கியசாலிகள். அவர்கள் கற்கும் பரதநாட்டியம் அவர்களுடைய வாழ்க்கையையே ஆனந்த மயமாக்குவதற்கு ஓர் அரிய சாதனமாயிருக்கும். அதுமட்டுமல்ல. வீணை தனம்மாளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தனம்மாளின் சங்கீத பொக்கிஷத்தையும் பகிர்ந்து பெற்றிருக்கிறார்கள். ஆதலின் ஸ்ரீமதி பால சரஸ்வதி மூலமாகவும் அவருடைய தாயார் ஸ்ரீமதி ஜயம்மாளின் மூலமாகவும் உண்மையான கர்நாடக சங்கீதத்தின் உருவங்களை அறிந்து பயன் அடையக் கூடும்.

நமது இந்த இதழ் அட்டையில் ஸ்ரீமதி பால சரஸ்வதியின் மலர்ந்த முகத் தோற்றத்தை மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கிறோம். அத்துடன் அவர் அபிநயத்தின்போது பிடித்த அஸ்த முத்திரைகள் சிலவற்றையும் வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொரு அஸ்த முத்திரைக்கும் விசேஷ பொருள் உண்டு. அவற்றை அறிய விரும்புவோர் "நித்திரையில் சொப்பனத்தில்" என்னும் பாடலுக்கு ஸ்ரீமதி பால சரஸ்வதி அபிநயம் பிடிக்கும்போது கவனமாகப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

பரத நாட்டியக் கலையைப் பிறருக்குக் கற்பித்து அக்கலையை வளர்ப்பதற்காக ஸ்ரீமதி பால சரஸ்வதி தொடங்கியிருக்கும் பள்ளிக்கூடம் சிறந்து வளர்ந்து நீடூழி நீடித்திருக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்! ●

(கல்கி, மே 10, 1953)

அப்புறம் என்ன ஆச்சு?



காமராஜரின் கார்

சென்னை, தேனாம்பேட்டை காமராஜர் அரங்கிற்குப் போயிருக்கிறீர்களா? நேரே அரங்கத்துக்குப் போய் சொற்பொழிவையோ, பாட்டுக் கச்சேரியோ கேட்டுவிட்டு வருவதோடு, அரங்கத்துக்கு வெளியில் இடது பக்கம் போனால், அங்கே கண்ணாடி பதிக்கப்பட்ட, ஷெட் ஒன்று இருப்பதையும், அதற்குள்ளே MDT 2727 என்ற பதிவு எண்ணுடன் கறுப்பு நிறத்தில் ஒரு செவர்லே கார் வைக்கப்பட்டிருப்பதையும் பார்க்கலாம். அந்தக் கார்தான், பெருந்தலைவர் காமராஜ் பயன்படுத்திய கார். அதன் வரலாறு சுவாரசியமானது. சொல்கிறார் காமராஜரின் உதவியாளராகப் பல்லாண்டுகள் இருந்த வைரவன்.

1952 ஆம் வருடத்து மாடல் காரான அது, டி.வி.எஸ். குடும்பத்தினரால் குற்றாலத்தில் வைத்து, பயன்படுத்தப்பட்டது. அப்போது, தலைவரிடம் வேறு ஒரு செவர்லே கார் இருந்தது. அது ரொம்பப் பழசாகிப் போய் விடவே, டி.வி.எஸ். காரர்கள், 54ம் வருடத்தில், குற்றாலத்தில் வைத்திருந்த காரை தலைவருக்குக் கொடுத்து விட்டார்கள். தலைவர் மீது அவர்கள் கொண்டிருந்த ஆழமான அன்பின் அடையாளம்தான் இந்த கார்.

மாதத்தில் ஒரு நாள் டி.வி.எஸ்ஸுக்கு சர்வீசுக்குப் போய் வந்து விடும். காரில் வேறு ஏதாவது கோளாறு என்றால் டி.வி.எஸ். நிறுவனத்தின் கிருஷ்ணா தாமே ஒரு ரவுண்டு ஓட்டிப் பார்த்து, என்ன ரிப்பேர், என்று கரெக்டாய்க் கண்டு பிடித்துச் சொல்லி சரி செய்யச் சொல்லுவார்.

1946 முதல் தலைவரிடம் டிரைவராக இருந்து வந்த சுந்தரம்தான் இந்தக் காரை ஓட்டுவார். முதலமைச்சராக இருந்த சமயம், சுந்தரம் வேலையிலிருந்து போய்விட, அரசாங்க டிரைவர் ஒருவர் மூன்று வருட காலம் தலைவரிடம் பணியாற்றினார். அதன் பின் சீனிவாசன் என்பவர் டிரைவராக இருந்தார். அதன் பின் டிரைவரானவர் சிவசாமி. அவர்தாம் கடைசி வரை இருந்தார்.

ஐம்பதுகள் வரை தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்வதற்குக் காரைத்தான் தலைவர் பயன்படுத்தினார். பின்னாட்களில், நீண்ட தூரப் பயணம் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத சூழ்நிலையில், சென்னையிலிருந்து, வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்கள் வரை என்றால் காரிலும், அதைத் தாண்டிய பயணம் என்றால் ரயிலிலும் போவார்.

காரின் பின் சீட்டில், டிரைவருக்குப் பின்னால் அமர்ந்து கொள்ளுவதுதான் தலைவர் வழக்கம். ஜன்னல் கண்ணாடியை மூட மாட்டார்; வெளியூர்ப் பயணங்களின் போது, இரண்டு மணி நேரத்தில் போகக் கூடிய ஊருக்குக் கூடப் போய்ச் சேர ஐந்து மணி நேரமாகி விடும். காரணம், இடையில், இவரை அடையாளம் கண்டு கொண்டு, பொதுமக்கள் கும்பிடு போட்டால், காரை நிறுத்தச் சொல்லி, இறங்கி விடுவார்.

மக்களின் பிரச்னைகள், நாட்டு நடப்பு போன்றவை பற்றி, அக்கறையுடன் விசாரிப்பார்.

வீட்டை விட்டுப்



புறப்படுகிறபோது, தம்மைச் சந்திக்க வந்திருப்பவர்களிடம், "எங்கே போகணும்?" என்று கேட்டு, தம்முடன் காரில் ஏற்றிக் கொண்டு, வழியில் எங்காவது இறக்கி விடுவார்.

காரில் போகிறபோது வழியில் ஏதாவது ஆக்சிடென்ட் என்றால், உடனே காரை நிறுத்தச் சொல்லி விடுவார். இறங்கிப் போய்ப் பார்த்து, அடிபட்டவரைத் தம் காரில் ஏற்றிக் கொண்டு, ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ற சம்பவங்கள் பல. சில சமயங்களில், தம் காரில் அவர்களை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துவிட்டு, டாக்ஸி பிடித்து இவர் போனதும் உண்டு.

ஒரு முறை பீச் ரோடில் போய்க் கொண்டிருந்தபோது, தலைவரின் கார், வேறு ஒரு கார் மீது இலேசாக இடித்து விட்டது. இரண்டு கார்களுக்கும் சேதம். காரை விட்டு இறங்கிய தலைவர், செக்யூரிடி அதிகாரியிடம், "முதலமைச்சர் காரில் மோதிவிட்டதாக, அந்தக் காருடைய டிரைவர் பேரில் கேஸ் எழுதி விடாதீர்கள். தப்பு நம்ம டிரைவர் பேரில்தான்" என்று சொல்லி விட்டு, அந்தக் காரில் இருந்த அரசாங்க அதிகாரியிடம் வருத்தம் தெரிவித்துவிட்டு டி.வி.எஸ். சர்வீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பி, தமது செலவில் ரிப்பேர் செய்து கொடுக்கச் சொன்னார்.

கடைசியாகத் தலைவர், காரைப் பயன்படுத்தியது 1975 அக்டோபர் முதல் தேதி. காலையில் சிவாஜி வீட்டுக்குப் போய் பிறந்த நாள் வாழ்த்துச் சொல்லிவிட்டு வந்தார். மாலை பீச். இரவு எட்டரை மணி வாக்கில் திரும்பியதுதான் தலைவரது கடைசி கார் பயணம். அடுத்த நாள், வழக்கப்படி, கார் போய் டாக்டர் ஜெயராமனை அழைத்து வந்தது. அவர் ஊசி போட்ட பின், அவரைக் கொண்டு போய் விட்டு விட்டு வந்தது. பிற்பகல் மூன்று மணிக்குத் தலைவர் மறைந்தார்.

அதன் பிறகு, அந்தக் கார், தலைவரின் சகோதரி நாகம்மையிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர், அதைத் தம்மால் பராமரிக்க முடியாது என்று சொல்லிவிட, கடம்பூரைச் சேர்ந்த காப்பி சோமசுந்தரம் என்பவர் அதை வாங்கிக் கொண்டார். (முப்பதாயிரம் ரூபாய்க்கு வாங்கி, முப்பதாயிரம் செலவு செய்ததாக நினைவு) கன்னியாகுமரி வரை குடும்பத்துடன் அவர் இந்தக் காரில் செல்ல, தலைவரின் காரை யாரோ ஒருவர் பயன்படுத்துவதா என்று பொது மக்களின் கோபத்துக்கு ஆளானார்! காங்கிரஸ் கட்சிக்காரர்கள் மத்தியில் கூட இது குறித்து, காரசாரமான அறிக்கைப் போர் நடந்தது! கடைசியில் பா. ராமசந்திரன், அந்தக் காரை வாங்கிக் கொண்டார்.

ஒரு கட்டத்தில், அதை காங்கிரஸ் கட்சி டிரஸ்ட் வசமே ஒப்படைத்து விட்டார். அதன் பின், அது வெகு காலம், தேனாம்பேட்டை, காங்கிரஸ் மைதானத்தில், சாதாரண ஷெட்டில் கிடந்தது. மழை, காற்றில் பாதுகாப்பில்லாமல் இருந்த அதற்கு, சில மாதங்கள் முன்புதான் பக்கவாட்டில் கண்ணாடி பதித்து, பக்காவாக ஷெட் அமைக்கப்பட்டது.


பண்டிட் நேரு தவிர, ஏறத்தாழ அனைத்து தேசியத் தலைவர்களையும், பெருந்தலைவர் காமராஜருடன் சுமந்து வலம் வந்த கார், இப்போது அவரைப் போலவே எளிமையாய்க் காட்சியளிக்கிறது.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **ஸ்ரீஹரி**

ஜெயித்த கதை!

— சொல்கிறார்
ஓவியர் பத்மவாசன்





சிலோனில் நான் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பள்ளி நேரம் என்பது காலை எட்டு மணி முதல் மதியம் ஒரு மணி வரைதான்.

ஒரு மணிக்குப் பள்ளி விட்டதும் வீடு வந்து சாப்பிட்டுவிட்டு உடனே உட்கார்ந்து வரையத் தொடங்கி விடுவேன். கட்டாயம் ஏதுமில்லை. ஆனால் என்னால் வரையாமல் இருக்க முடியாது. அதனால் ஏதாவது வரைந்து கொண்டே இருப்பேன். வரைவது என்றால் ஒரு மணி நேரம், இரண்டு மணி நேரம் அல்ல. மதியம் ஒரு மணிக்கு வரைய ஆரம்பித்தால் நள்ளிரவு பன்னிரண்டு, ஒரு மணிவரை இடத்தை விட்டு நகராமல் வரைந்து கொண்டிருப்பேன். நான் வரையும் போது என் தந்தையும் என் அருகிலேயே அமர்ந்து கவனித்துக் கொண்டிருப்பார். புறத் தொந்தரவுகளிலிருந்து என்னைப் பாதுகாப்பது போலிருக்கும் அவரது இருப்பு.

அப்போதெல்லாம் ஆனந்த விகடன் தீபாவளி மலரில் பல அற்புதமான ஓவியங்கள் இடம்பெறும். அமரர் சில்பியின் ஓவியங்களை நான் முதலில் பார்த்தது அவற்றில் தான்.

வாங்கும் தீபாவளி மலர்களை பைண்டு செய்து மிக பத்திரமாக வைத்திருப்பார் என் தாத்தா.

அந்த மலர்களைப் புரட்டும் போது கண்ணில் படும் சில்பியின் ஓவியங்கள் என்னை அடுத்த பக்கத்துக்குப் போக விடாமல் இழுத்து நிறுத்தும்.

'இது என்ன, ஓவியம்தானா? புகைப் படம் போலல்லவா தத்ரூபமாக இருக்கிறது! இப்படிக் கூட வரைய முடியுமா? மனிதப் பிறவியால் செய்யக்கூடிய சாதனைதானா இது!' என்று எண்ணி எண்ணி உள்ளுக்குள் வியந்து போவேன்.

'நானும் வரைவதில்தான் ஆர்வம் கொண்டிருக்கிறேன். சில்பியால் செய்ய முடிகிற காரியத்தைக் கட்டாயம் என்னாலும் செய்ய முடியும்' என்று உள்ளத்தில் ஓர் உறுதி பிறக்கும். அவரது படங்களையே முன் மாதிரியாக வைத்துக் கொண்டு வரைந்து பழகுவேன்.

அப்படி சில்பியின் படங்களைப் பார்த்துப் பார்த்து வரைந்து பழகத் தொடங்கிய போதுதான் 'மற்றெந்தப் பாணி ஓவியங்களை விடவும் இது மிகவும் சிரமமானது; அதிக உழைப்பும் வலியும் தரத்தக்கது;

'உங்கள் வெற்றிக் கதையைக் கூறுங்கள்' என்று எந்த சாதனையாளரிடமும் கேட்டுப் பாருங்கள். அவர்கள் சொல்வது உழைப்பின் கதையாகத்தான் இருக்கும். அந்தக் கதையின் கடைசி அத்தியாயத்தில் வெற்றி எட்டிப் பார்த்திருக்கும்!

கடும் உழைப்பு. நேர்மையான, சீரிய நோக்கமுடன் கூடிய உழைப்பு. ஓய்வறியாத, சலியாத உழைப்பு. எந்தத் துறையானாலும் வெற்றி தேடித் தர இதைத் தவிர வேறு வழி கிடையாது! என் குருநாதர், அமரர் சில்பியிடமிருந்து நான் கற்ற விஷயம் இது.

எங்கள் பூர்வீகம் காஞ்சிபுரம் என்றாலும் நான் பிறந்து, வளர்ந்து, படித்ததெல்லாம் இலங்கையில்தான். என் அப்பா அங்கே வானொலியில் பணியாற்றிக் கொண்டிருந்தார். என் தாய் வழிப் பாட்டனாரும் தந்தையின் சகோதரர் ஒருவரும் ஓவியத்தில் நாட்டமுள்ளவர்களாக இருந்தது, ஒருவேளை என்னையும் அத்துறையிலேயே இழுத்து வந்திருக்கக் காரணமாயிருந்திருக்கலாம்.

"ரெண்டு வயசுலேயே வரைய ஆரம்பிச்சுட்டான்!" என்று என் தந்தை என்னைப் பற்றி எல்லோரிடமும் சொல்லுவார். அது சற்று மிகையாகக் கூட இருக்கலாம். ஆனால் எனக்கு நினைவு தெரியத் தொடங்கிய நாளாக வரைந்து கொண்டுதான் இருக்கிறேன்.

மிகச் சிறிய வயதில் எனக்கேற்பட்ட இந்த ஓவிய ஆர்வத்தை உரமிட்டு வளர்த்தவர் என் தந்தை. 'சும்மா கிறுக்கறான்' என்று நினைக்காமல் அப்போதே நான் வரைவதற்கு விலை உயர்ந்த தாள்கள், பேனாக்கள் வாங்கி வந்து தருவார்.



"சார், உங்க படத்தோட கதை நம்பற மாதிரியா இல்லியே."
"ஆனாலும் படம் நூறு நாள் ஓடிடும்."
"நீங்க முதல்ல சொன்ன கதையையே நம்பிடறேன். இதை நம்பமாட்டேன் சார்..."
- பா. ஜெயக்குமார்

எல்லாவற்றுக்கும் மேலாக குருவருளும் தெய்வ அனுக்கிரகமும் இல்லாமல் இப்படி வரைவது சாத்தியமில்லை' என்பது புரிந்தது. அந்தக் கணமே என் மானசிக குருவான சில்பியிடம் சென்று, அவருடனே இருந்து ஓவியம் பயிலும் வேட்கை உருவானது. ஆனால், நான் இருப்பதோ இலங்கையில். அவரோ, சென்னையில். 'எப்படி இது சாத்தியம்?' என்று எப்போதும் யோசித்துக் கொண்டிருப்பேன்.

ஓவியப் பயிற்சியை இடைவிடாமல் செய்து கொண்டிருந்ததில் ஓரளவு தேர்ச்சி கைகூடி வந்தது. என் தாத்தா மூலம் கோயில் கொடி மரங்களுக்கான கொடிகளில் படங்கள் எழுதும் வாய்ப்புக் கிடைத்தது. ஆர்வமுடன் பல கொடிகளில் வரைந்து தந்தேன். கோயில்களில் அவை ஓங்கி உயர்ந்து பறப்பதைக் காண்பதில்தான் என்ன ஒரு சந்தோஷம்!

1980-ம் வருஷம். ஒரு முக்கியமான பணியில் என்னை ஈடுபடுத்திக் கொண்டேன். ஈழத்தில் தமிழ் வளர்த்த பெரியோர்களை ஓவியங்களாகத் தீட்டும் பணி அது! விரைவில் மதுரையில் நடைபெறவிருந்த உலகத் தமிழ் மாநாட்டில் அவற்றை ஒரு கண்காட்சியாக அமைத்து நடத்த எனக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது. மிகப் பெரிய வாய்ப்புதான். ஆனாலும் அதை விட மிகப் பெரிய வாய்ப்பாக 'மதுரையிலிருந்து சென்னைக்குச் செல்ல முடியும்; என் மானசிக குருவை நேரில் சந்திக்க முடியும்' என்பதைத்தான் நான் நினைத்தேன்.

அந்த தினத்தை என்னால் மறக்க முடியாது. மதுரையில் வெற்றிகரமாகக் கண்காட்சியை நடத்தி முடித்து விட்டு, என் தந்தையுடன் சென்னைக்கு வந்தேன். சில்பி சென்னையில் இருக்கிறார் என்பதைத் தவிர, அவர் எங்கே இருக்கிறார், விலாசம் என்ன என்கிற எந்த விவரமும் என்னிடம் அப்போது இல்லை. அவரை எப்படியாவது சந்தித்து விட வேண்டும் என்கிற ஒரே நோக்கமுடன் பலரிடம் வழி விசாரித்துக் கொண்டு சென்னை நகரை சுற்றிச் சுற்றி வந்தேன். ஆனால் அவரது இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க முடியவில்லை. தெருத் தெருவாக விசாரித்தோம். தெரிந்த நபர்கள், தெரியாத நபர்கள் என்று எல்லோரிடமும் விசாரித்தோம். யாருக்குமே அவரது முகவரி தெரியவில்லை!

மிகவும் களைப்புற்று இறுதியாக ஒரு வீட்டை அடைந்து, படியேறி விசாரித்தேன்: 'ஓவியர் சில்பியின் முகவரி தெரியுமா?'

"நீங்கள் யார்?" என்றார் அந்தப் பெரியவர்.

"என் பெயர் ஸ்ரீதரன். இவர் என் தந்தை. இலங்கையிலிருந்து வருகிறோம். ஓவியர் சில்பியைப் பார்க்க வேண்டும்!"

தளராத முயற்சிக்குப் பலன் உண்டு என்பது அப்போது எனக்கு நிரூபணமாயிற்று. நான் சந்தித்த அந்தப் பெரியவர் ஒரு பத்திரிகையாளர்; எழுத்தாளர், தினமணி திரு. கே. ஆர். வாசுதேவன்!

என்னைப் பற்றி விசாரித்து அறிந்து கொண்ட திரு. வாசுதேவன், சில்பியின் முகவரியைத் தந்ததோடு, தாமே ஒரு ரிக்ஷாவை ஏற்பாடு செய்து எங்களை ஏற்றி அனுப்பி வைத்தார்.

கிளம்பும் போது சொன்னார் : "ஜாக்கிரதை தம்பி! அவர் ரொம்பக் கோபக்காரர்."

ஆழ்வார்ப்பேட்டையில் ஒரு சிறு குடில் போல இருந்தது, சில்பியின் வீடு. வெளிக் கதவைத் திறந்ததும் பூச்செடிகள் வரவேற்றன. அருகில் ஒரு போர்டு. 'கை கால் அலம்பி வரவும்.'

அலம்பிக் கொண்டோம். சிறு பாதையில் நடந்து வீட்டின் படிகளை அடைந்த

போது அங்கே ஒரு போர்டு. "இது பூஜை நேரம். அரைமணி காத்திருக்கவும்."

காத்திருந்தோம். அரைமணிக்கு மேலே நேரம் ஆகியும் யாரும் வெளியே எட்டிப் பார்க்காததால் 'அழைக்கலாம்; ஒருவேளை வைத்த போர்டை எடுக்க மறந்திருக்கக் கூடும்' என்று நினைத்து, உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தேன்.

சட்டென்று அவர் வெளிப்பட்டார். வணங்கி, விவரம் சொன்னார் என் தந்தை. "கொஞ்சம் பொறுங்கள். பூஜை நடந்து கொண்டிருக்கிறது. முடித்து விட்டு வருகிறேன்" என்று சொல்லி, மீண்டும் உள்ளே போய் விட்டார். காத்திருந்தோம்.

சற்று நேரம் கழித்து மீண்டும் வெளிப்பட்டவர், எங்களை உள்ளே அழைத்தார்.

என்ன பேசுவது? எங்கிருந்து ஆரம்பிப்பது? எனக்கு அவரைப் பார்த்ததிலேயே பரவசம் பற்றிக் கொண்டிருந்தது. அமைதியான முகமும் கூர்ந்து நோக்கும் விழிகளும் ஒரு ரிஷி போன்ற தோற்றம் தந்த தாடியும் கனிவும் கண்டிப்பும் மிக்க பேச்சுமாக என்னைப் புரட்டிப் போட்டுக் கொண்டிருந்தது அவரது அண்மை.

என் தந்தை, நான் வரைந்திருந்த சில படங்களை எடுத்து அவரிடம் காட்டினார். சற்று நேரம் அவற்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவர், சட்டென்று "அசப்பில் நான் வரைஞ்சது போலவே இருக்கே?" என்றார் வியப்புடன்.

அவ்வளவுதான். என் தந்தை அழவே ஆரம்பித்து விட்டார்.

மிகவும் நம்பிக்கையும் உற்சாகமும் கொண்டவனாக, அவரிடம் சிஷ்யனாகச் சேர விரும்புவதைச் சொன்னேன். சற்று தயக்கம் இருக்கவே செய்தது.

என் குடும்பம், ஊர், பிறந்த தேதி, படிப்பு எனப் பல விவரங்கள் கேட்டுத் தெரிந்து கொண்டவர், அவருடன் என்னைச் சேர்த்துக் கொள்வதற்கு மட்டும் பிடி கொடுக்காமல், "பார்க்கலாம்" என்று சொல்லி விட்டார்.

இப்போது இல்லாவிட்டாலும் எப்படியும் இவரிடம் சேர்ந்து விடுவது என்று உறுதிசெய்து கொண்டேன்.



"நம்ம தலைவர் தினமும் கோயிலுக்குப் போகிறாரே சாமிகிட்ட அப்படி என்னதான் வேண்டிக்கிறார்?"

"தேவலோகத்தில் இருக்கிற மும்மூர்த்திகளில் யாருக்காவது ஒருவருக்கு ரிட்டயர்மென்ட் கொடுத்திட்டு அந்தப் பதவியை அவருக்குக் கொடுக்கணுமாம்!"

– ஆர். சித்ரா

"உங்கள் போட்டோ ஒன்றையாவது எனக்குத் தாருங்கள்" என்று கேட்டு வாங்கிக் கொண்டு ஊர் திரும்பினேன்.

இலங்கை சென்று சேர்ந்ததும் அவருக்கொரு கடிதம் எழுதினேன். ஓவியத்தில் என் நாட்டம் குறித்தும் அவர் மீது எனக்குள்ள பக்தியையும் வெளிப்படுத்தும் கடிதம் அது. கூடவே படங்கள் வரைவதற்கென எனக்கொரு 'புனைபெயர்' சூட்டவும் அவரிடம் கேட்டிருந்தேன்.

பதில் வந்தது, என் குருவிடமிருந்து!

வெறும் கடிதமா அது? உயிரோடு உயிர் கலக்கும் விந்தை அது! தன் சொந்த மகனாகவே என்னை மானசீகமாக ஏற்று, சீடனாகவும் வரித்து, குருவாகவும் தெய்வமாகவும் இருந்து எனக்கு ஆசியளித்து, 'பத்மவாசன்' என்கிற பெயரையும் எனக்குச் சூட்டியிருந்தார்!

தொடர்ந்து பல கடிதங்கள் எழுதினேன். நான் வரையும் படங்களைப் புகைப்படமெடுத்து கடிதத்துடன் இணைத்து அவருக்கு அனுப்பினேன்.

என்னைப் பாராட்டியும் உற்சாகப்படுத்தியும் பதில் கடிதம் உடனே வரும். கடிதத்தின் கடைசி பத்தியில்தான் என் ஓவியத்தில் ஏதாவது குறை இருந்தால் அதை மென்மையாகச் சுட்டிக்காட்டியிருப்பார். சிறுவன், மனம் சோர்ந்து விடக் கூடாதே என்கிற அவரது அக்கறை அந்தக் 'கடைசிப் பத்தி'யில் தெரியும். கண் கலங்கி விடுவேன்.

'பார்க்கலாம்' என்று சொல்லியிருந்தாலும் என்னைச் சீடனாக – மனத்தளவில் – அவர் ஏற்றுக் கொண்டே விட்டார் என்பது எனக்குப் புரிந்து விட்டது. இலங்



ஹவுஸ்ஃபுல்

'ஸ்பீட்' ஆங்கிலப் பட ஸ்டைலில் தமிழில் ஒரு முயற்சி செய்து பார்த்திருக்கிறார் பார்த்திபன். 'பாரத்' டாக்கீசில் ஹவுஸ் ஃபுல்லான மேட்னி காட்சி. தியேட்டரில் வெடிகுண்டு வைத்திருப்பதாக அனாமதேய டெலிபோன்கால் வருகிறது. சாதாரண போலீசும், பாம் ஸ்குவாடும் தியேட்டரை முற்றுகையிடுகிறார்கள். வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்துச் செயலிழக்க வைப்பது, உள்ளேயிருப்பவர்களைப் பதற்றத்துக்கு ஆளாகாமல் தந்திரமாய் வெளியே கொண்டு வருவது என்று இரு கட்ட முயற்சி நடக்கிறது.

கையில் இருந்தாலும் என் மனம் சதா அவருடனேயே சுற்றிச் சுற்றி வருகிறது என்பது அவருக்கும் புரிந்து விட்டது. அதற்கு மேல் எப்படிப் பிரிந்திருப்பது?

'81 டிசம்பரில் மறுபடி சென்னை வந்தேன். நன்றாக நினைவிருக்கிறது. அன்று பத்தாம் தேதி. எனக்காக வாசலிலேயே காத்திருந்தவர், என்னைக் கண்டதும் 'வா வா' என்று ஒரு குழந்தையின் குதூகலத்துடன் அழைத்துப் போய் ஒரு பெரிய தம்ளரில் – தானே தயாரித்திருந்த – பால் பாயசத்தைத் தந்து, "சாப்பிடு" என்றார்.

எனக்குப் புரியவில்லை. எதற்குப் பாயசம்?

"இன்னிக்கு டிசம்பர் பத்து ஆச்சே? போன தரம் வந்த போது, பத்தாம் தேதி தானே உன் பிறந்த நாள்னு சொன்னாய்? அதான் நானே பாயசம் தயாரிச்சுட்டேன். நல்லாயிருக்கா?"

என் கண்கள் கலங்கி விட்டன.

நல்ல குரு அமைவது தெய்வ அனுக்கிரகம். நான் ஒரு நல்ல சிஷ்யனாக இருப்பேன் என்று உறுதிசெய்து கொண்டேன்.

நான் அவருடன் இருந்தது ஒரே ஒரு மாதம்தான். அவர் வரையும்போது மிக அருகில் இருந்து அதைப் பார்க்கிற ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்ததே தவிர, தனியாக கற்றுக் கொடுத்ததாகவெல்லாம் சொல்ல முடியாது. ஆனால் அவருடன் இருந்து நெருங்கி கவனிக்கக் கிடைத்த வாய்ப்பே பெரிய வரப்பிரசாதம் என்று நினைத்தேன்.

சில்பி அவர்கள் படம் வரைவதை ஒரு தவமாக வைத்திருந்தவர். கடுமையான ஆசார அனுஷ்டானங்கள், நியம நிஷ்டைகள் அவருக்கு உண்டு. பயங்கரமான கோபக்காரர் வேறு! படங்கள் சிறப்பாக வர

தமிழில் இது போன்ற சினிமா புதிது என்பதற்காகவே பார்த்திபனைப் பாராட்டலாம்.

படம் முழுக்க வரும் பார்த்திபனுக்கு, பெரியவர் கெட் அப் பொருத்தமாக இருக்கிறது. யதார்த்தமாகவே நடிக்கிறார். மற்றவர்கள் எல்லாம் ஊறுகாய்தான். (கவலட்சுமி விதிவிலக்கு)

இந்து கவலட்சுமியும், முஸ்லிம் விக்ரமும் சர்ச்சில் திருமணம் செய்து கொள்ளுவது; படம் முடிகிறபோது, 'The End' என்று போட்டுவிட்டு, எங்கேயோ வெடிகுண்டு வைத்து, அப்பாவிகள் பலியான செய்தி கேட்டு அதை 'Endless' என்று ஆக்குவது... இப்படி ஆங்காங்கே பார்த்திபனின் 'டச்'களைக் காண முடிகிறது. 'நான் இந்து' என்றவுடன் 'அப்ப நான் என்ன இண்டியன் எக்ஸ்பிரஸா?' என்பது போல கடிச்சுவைக்கும் குறைவில்லை. அவ்வப்போது, வரும் வடிவேலுவின் காமெடி படத்தின் டெம்போவுக்கு ஸ்பீடு பிரேக்கர் போடுகிறது.

பாடல்கள் இல்லை என்றாலும், காட்சியறிந்து பின்னணி இசையமைத்திருக்கிறார் இளையராஜா. சில கேமரா கோணங்கள் பாராட்டும்படி உள்ளன.

தலைப்புதான் ஆங்கிலம் என்றால், வசனங்களில் கூடவா ஆங்கில ஆதிக்கத்தை அனுமதிப்பது! போதாக்குறைக்கு மத இணக்க வசனங்களில் ஹிந்து, முஸ்லிம், கிறிஸ்துவ பிரதிநிதித்துவம் அளிக்கிறேன் பேர்வழியென்று மும்மடங்கு உபதேசம். என்னதான் மனித நேயம் என்றாலும் அளவுக்கு மிஞ்சினால்...

தியேட்டரில் எதற்காக, யாரால் குண்டு வைக்கப்படுகிறது என்பதையே சொல்லாமல், 'யார் வெச்சாங்க, ஏன் வெச்சாங்கங்கறதெல்லாம் நமக்கு வேணாம், இனிமே யாரும் வைக்காம இருக்கணும்' என்று தப்பித்தல் சுலபமான யுக்தி. ஆனால் கதையின் நம்பகத் தன்மையைக் குறைக்கிறது.

பிரசார நெடியடிக்கும் பிரச்னைப் படம். காதல் மருந்துக்குக்கூட இல்லை. இந்தத் துணிச்சலுடன் பார்த்திபனின் கலைக் கண்ணோட்டமும் இணையுமானால் அடுத்த படம் தரமாக அமையக் கூடும். ○

வேண்டும் என்பதற்காக எந்த எல்லைக்கும் சென்று தன்னை வருத்திக் கொள்ளலாம் என்பது அவரது கருத்தாக இருந்தது.

அவர் வீட்டில் பல நோட்டுப் புத்தகங்களில் விதவிதமான முகங்கள் வரையப்பட்டிருந்ததை ஒரு சமயம் கண்டு, 'இவை என்ன?' என்று கேட்டேன்.

அது, அவரது பயிற்சி முறை என்று சொன்னார்.

தினம் பொழுது விடிந்ததும் ஒரு நோட்டுப் புத்தகம், பென்சிலுடன் டிராமில் ஏறி உட்கார்ந்து கொள்வாராம். (ஆரம்ப காலங்களில்.) 'இன்று ஐம்பது முகங்களை வரையாமல் சாப்பிட மாட்டேன்' என்று சபதம் செய்து விட்டு, டிராமில் தமக்கு எதிரே அமருகிறவர்களைப் பார்த்துப் பார்த்து சளைக்காமல் வரைந்து கொண்டே இருப்பாராம். ஐம்பது முகங்களைச் சரியாக வரைந்தபின்னரே உணவு! படங்கள் சரியாக அமையாவிட்டாலோ, அத்தனை பேர் அகப்படாவிட்டாலோ, அன்று பட்டினிதானாம்!

சிலிர்த்து விட்டது எனக்கு! எப்படிப்பட்ட ஒரு தீவிரம் இருந்தால் இத்தனை 'நெஞ்சுரம்' வந்திருக்க முடியும் என்று நினைத்துப் பார்த்தேன். தொழிலில் வெறித்தனமான ஈடுபாடும் வெற்றி பெறும் உத்வேகமும் உள்ள யாருமே இப்படித்தான் - உழைப்பதற்கு அஞ்சுவதில்லை.

சில்பியுடன் வசித்த அந்த ஒரு மாத கால வாழ்க்கை 'என் இலக்கு என்ன? பயணம் எப்படி இருக்க வேண்டும்? எதிர்ப்புகள் - சமாளிக்க வேண்டிய பிரச்னைகள் என்னவாக இருக்கும்' என்பன போன்ற பல விஷயங்களில் நான் தெளிவு பெற உதவுவதாக இருந்தது. எக்காரணம் கொண்டும் என் கலை கொச்சைப்பட்டு விடக் கூடாது என்கிற உறுதியை மேற்கொண்டேன். புனிதமான ஓவியக் கலையை, அதற்குரிய கௌரவத்துடனே கையாள வேண்டும்; என் குருவின் பெயரை நான் கெடுக்கக் கூடாது என்று சபதம் பூண்டேன்.

ஊருக்குச் சென்று வருவதாகச் சொல்லி விட்டு அவரிடம் விடைபெற்று இலங்கை சென்றேன். விரைவில் நிரந்தரமாகச் சென்னையிலேயே தங்கி விட ஏற்பாடு செய்வதுதான் என் முதல் பணியாக இருந்தது.

தினமும் வரைந்து பழகினேன். காலை எட்டு மணிக்கு வேலை தொடங்கினால் நள்ளிரவு ஒரு மணி வரை வரைந்து கொண்டே இருப்பேன்.

வரைபவனுக்குச் சாப்பாட்டு ருசி கூடாது என்பது என் குருநாதரிடமிருந்து நான் கற்ற விஷயம். உணவில் ருசி வந்து விட்டால் வேளைக்குச் சாப்பிட மனம் ஏங்கும். அதே போல உறக்கம். மணிக்

கணக்கில் உறங்குவதே விரசம் என்பது என் எண்ணம். இயற்கை உபாதைகள் கூட நம் தொழிலுக்குத் தடையாக இருக்க அனுமதிக்கக் கூடாது என்பார் திரு. சில்பி.

ஆகவே குறைவாக உண்பது, தூக்கத்தைத் துரத்துவது, உலகம் மறந்து, கலையுடனேயே கரைந்து போவது!

பிளஸ் டூ முடிந்ததும் சென்னைக்கு வந்து விட்டேன், குடும்பத்துடன். நான் வந்த நேரம், சில்பி கொல்லூர் செல்வதற்கிருந்தார். இளையராஜாவின் வேண்டுகோளுக்கிணங்க, கொல்லூர் மூகாம்பிகையை வரையும் பொறுப்பை அவர் ஏற்றிருந்தார்.

துரதிருஷ்டவசமாக அதுவே அவரது கடைசிப் படமாக அமைந்து விட்டது.

நான் சென்னை வந்ததன் நோக்கமே என் குருவுடன் இருக்கலாம் என்பதுதான். ஆனால் அவர் திடீரென்று காலமாகி விடவே, திசை புரியாமல் தத்தளித்த தோணி போல் ஆனேன்!

துக்கம் நெஞ்சைக் கவ்வ, இனி என்ன செய்வேன்? எப்படிப் பிழைப்பேன்? என்று தவித்தேன். என் அம்மாவின் விருப்பத்துக்காக ஏ.எம்.ஐ.ஈ. படிக்கச் சேர்ந்தேன். படித்ததுதான் லாபம். ஓர் ஓவியனாக அன்றி வேறெதுவாகவும் என்னை நினைத்துப் பார்க்கக் கூட என்னால் முடியவில்லை.

''ஓவியத்தை 'சைடி'ல் வெச்சுக்கோ'' என்று பலர் எனக்கு அறிவுரை சொன்னார்கள். வளமான வாழ்க்கைக்குக் கலை எத்தனை தூரம் உதவும்? அதுவும் அமரர் சில்பியின் பாணியில் தெய்வ உருவங்களை – அவற்றின் புனிதம் கெடாமல் வரைவதன் மூலம் என்ன சம்பாதித்து விட முடியும் என்பது அவர்களின் கேள்வி.

கலையை ஒருபோதும் 'பகுதி நேர'த் தொழிலாகக் கொள்ளக் கூடாது என்பதில் நான் தீர்மானமாக இருந்தேன். அது துரோகம் என்று நினைத்தேன். என் தேவைகள் குறைவு. என் நிம்மதி, சந்தோஷம் எல்லாம் வரைவதில் மட்டும்தான். ஆகவே அபிப்பிராயங்களை நான் பொருட்படுத்தவில்லை.

இதே ஓவியத் திறனை வைத்து, ஏராளமாகச் சம்பாதிக்கவும் முடியும்தான். அது, நாம் என்ன வரைகிறோம், எப்படி வரைகிறோம் என்பதைப் பொறுத்தது! அப்படி வரைவதும் ஒன்றுதான்; கலையைக் கொன்று சமாதி எழுப்புவதும் ஒன்றுதான்! ஆகவே நான் எனக்குரிய பாதையில் கிடைக்கிற வாய்ப்புகளை மட்டுமே சரிவரப் பயன்படுத்திக் கொள்வது என்று முடிவு செய்தேன்.

ராமகிருஷ்ண மடத்தில் புத்தகங்களுக்கு வரைய வாய்ப்புத் தந்தார்கள். திருப்தியுடன் நிறையவே வரைந்தேன். "யார் இது? யார் இது?" என்று அந்தப் படங்களைப் பார்த்து விட்டுப் பலர் வந்து மடத்தில் விசாரிப்பார்கள். அங்கிருந்த சுவாமி கமலாத்மானந்தா தந்த ஊக்கமும் உற்சாகமும் என்னை உத்வேகம் கொண்டு வரையச் செய்தன.

பத்திரிகைகளில் வரையலாமே என்றார்கள். ஆனால், தமிழ்ப் பத்திரிகைகளின் மேல் எனக்குக் கொஞ்சம் வருத்தமும் கோபமும் உண்டு. தவறான பாதையில் அவை மக்களை இட்டுச் செல்வது பற்றிய வருத்தம் அது! அதனாலேயே நான் பல வாய்ப்புகள் வந்த போதும் பத்திரிகைகளுக்கு வரைவதைத் தவிர்த்து வந்தேன்.

அதே சமயம் கல்கியில் பொன்னியின் செல்வனுக்கு வரையச் சொன்னபோது சந்தோஷமாக ஒப்புக் கொண்டேன். காரணம், நான் வெட்கப்படும்படியான எழுத்து எதுவும் கல்கியில் வருவதில்லை.

வருமானக் குறைவு என்பதோ, நாளெல்லாம் வேறு நினைப்பின்றிப் பணியாற்ற வேண்டியதென்பதோ, குடும்பம் – மனைவி மக்களைக் கூடக் கவனிக்க இயலாது என்பதோ என்னளவில் ஒரு பிரச்னையாக ஒருபோதும் இருந்ததில்லை.

நமக்கொரு அடையாளம் தந்த இக்கலைக்கு நாம் துரோகம் இழைக்கக் கூடாது என்பதுதான் என் ஒரே எண்ணம்.


தெய்வங்களுடன் கூட மனித தெய்வங்களின் உருவங்களையும் ஓவியமாக வரையலாம் என்று திட்டம் வைத்திருக்கிறேன். குறிப்பாக, பாரதி – வ.உ.சி. இருவரது வாழ்வையும் அங்குலம் அங்குலமாகச் சித்திரமாக்கும் கனவு ஒன்று வைத்திருக்கிறேன்.

எல்லோருக்குமே கனவுகள் உண்டுதான். கனவுகள் நிச்சயம் நனவாகக்கூடியவையே. வெற்றி என்பது யாருக்குமே எட்டாக்கனி அல்ல. தேவை – செய்வன திருந்தச் செய்யும் மனோபாவம் ஒன்றுதான்.

சந்திப்பு : **ஔரங்கசீப்**

படங்கள் : **ரவிசங்கரன்**

'சிரி'க்கெட்!



''சிவசேனாக்காரங்க இந்த பிட்ச்சில் தோண்டிய குழியை சரியா மூடலையோன்னு நான் அப்பவே சந்தேகப்பட்டேன்...!''



''உன்னை 'சில்லி பாயிண்டி'ல் நானே ஃபீல்ட் செய்ய நிற்க வைத்தேன். நீ எப்படி 'ஸ்கொயர் லெக்கில் வந்து முளைச்சே?''

''சில்லி பாயிண்டிலிருந்து ஸ்கொயர் லெக்கிற்கு சிவசேனாக்காரங்க ஒரு சுரங்கப் பாதையையே தோண்டியிருக்காங்க!''



''ஏன் இந்தியா பேட் செய்யறப்ப மட்டும் கிரௌண்டில் இருபத்தி இரண்டு வீரர்கள் ஃபீல்ட் பண்றாங்க?'

''உண்மையில் பதினொரு ஃபீல்டர்கள்தான். பாக்கி பதினொரு பேரும் பாதுகாப்பு அதிகாரிங்க. பாகிஸ்தான் ஃபீல்டர் ஒவ்வொருத்தருக்கும் தனித்தனியா பாதுகாப்பு தர்றாங்க!''



''இந்த மாதிரி ஸ்பிரிங் ஆக்ஷன் வசதி கொண்ட 'பேட்'டையெல்லாம் வெச்சுக்கிட்டு கிரிக்கெட் ஆட நீங்க அனுமதி தந்தா, நாங்க எப்படித்தான் பாட்ஸ்மனை ரன் அவுட் ஆக்கறது?''

கருத்து: பாஸு

நீங்கள் கேட்டவை – தராசு

● முகவை முத்துசாமி, நாரேந்தல்.

? 'இந்த ஆண்டு பட்ஜெட் சாதாரண மக்களின் பட்ஜெட்' என்கிறாரே மத்திய நிதியமைச்சர்...?

! சாதாரண மக்கள் பாதிக்கப்படாமல் எந்த பட்ஜெட் போடப்பட்டிருக்கிறது! அதை மனத்தில் கொண்டுதான் இப்படிச் சொல்லியிருப்பார்.

● த. குணசேகரன், ஈரோடு – 2.

? 'டெல்லி – லாகூர் இடையில் பஸ் போக்குவரத்து நடத்த அனுமதிக்க மாட்டோம்' என்று சிவசேனை மிரட்டியிருப்பது பற்றி...?

! பஸ் வெற்றிகரமாக ஓடி விட்டது. சேனைக்குக் கோபம் கொப்பளித்ததன் விளைவுதான் மும்பையில் கிரிக்கெட் கட்டுப்பாடு அலுவலகச் சூறையாடல்! வெளிப்படையாகவே தங்களை ஒரு வன்முறை இயக்கமாகக் காட்டிக் கொள்கிற சிவசேனாவைத் தடைசெய்தால் தப்பில்லை.

● க. சந்தானம், திருவாரூர்.

? வயலின் இசையில் தங்களுக்கு யாரைப் பிடிக்கும்?

! அவர் பெயரே பிரும்மானந்தம்.

● ஸ்ரீவித்யா காளிதாஸ், சிதம்பரம் – 1.

? கையில் எது கிடைக்கிறதோ – அது முறமாக இருந்தாலும் துடைப்பமாக இருந்தாலும் எடுத்துக் கொண்டு சாராயக் கடையை அடித்து நொறுக்குங்கள் என திருவண்ணாமலை ஆட்சியர் கண்ணகி ஆவேசமாகக் கூறியுள்ளாரே?

! ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரி அல்லது போலீஸ் அதிகாரி இவ்வாறு பேசியிருந்தால் சட்டப்படி தவறுதான். ஆனாலும் கள்ளச் சாராயக் கடைகளைச் சட்டங்களால் ஒழிக்க முடியவில்லை என்கிற யதார்த்தத்தில்தான் அவர் அப்படிப் பேசியிருக்கக்கூடும். ஆக, மக்கள் திரண்டெழாதவரையில் ஒரு நல்லதும் நடக்காது.

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? ஒரிசா முதல்வரின் பதவி பிழைக்குமா?

! சோனியா அழைத்துப் பேசி 'காப்பாற்றி' விட்டாரே! பட்னாயக்கின் ஆட்களால் மானபங்கம் செய்யப்பட்டதாக வழக்குத் தொடுத்துள்ள பெண்ணுக்கு நியாயம் கிடைத்தாக வேண்டும். அரசியல் தலையீடற்ற ஆய்வுக்கு முதல்வர் வழி செய்ய வேண்டும்.

● ச. தங்கமணி, சத்திரப்பட்டி.

? அரசியலில் வெற்றி பெற பணம், பலம், செல்வாக்கு, வாய்ச்சவடால் – இவற்றில் எது முக்கியம்?

! வோட்டுதான் மிக முக்கியம். முதலில் அதைப் பெற வாய்ச்சவடாலும் திரைப்படச் செல்வாக்கும் உதவுகிறது. மற்ற இரண்டையும் பிறகு எளிதாக சம்பாதிக்க முடிகிறது.

● என். பாலகிருஷ்ணன், மதுரை.

? மிரட்சியான அனுபவம் ஏதாவது உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறதா?

! ஒரு நாற்சந்தியில் வலப்புறம் திரும்புவதற்காக சிக்னலில் காத்திருக்கிறேன். பச்சை விழுந்ததும், சாலையைப் பிரிக்கும் மீடியனுக்கு மறுபக்கத்திலிருந்து சீறிக் கொண்டு மாநகரப் பேருந்து நேர்த் திசையில் பறக்கிறது! ஒருகணம் தப்பினால் மரணம்தான் – மிரளாமல் என்ன செய்ய...! சென்ற ஆண்டு சென்னை விபத்துகளுள் பெரும்பாலானவை மாநகரப் பேருந்துகள் சம்பந்தப்பட்டவை என்று புள்ளி விவரம் வந்துள்ளது.

● டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு.

? மந்திரிசபை விரிவாக்கம் செய்து கொண்டே இருக்கிறார்களே... அடிக்கடி இப்படிச் செய்து என்னதான் சாதிக்கப்

தனி நீதிமன்றச் சிக்கல்



• 'சாதாரண' அறிவிப்பு!



• 'பிரச்னை' பாலிடிக்ஸ்!



• காப்பாற்றப் பட்டார்!

போகிறார்கள்?

! சரியாப் போச்சு! மந்திரி சபை விரிவாக்கமே மத்திய அரசின் 'சாதனை' என்று சொல்லிக் கொள்கிற பரிதாப நிலைமை அல்லவா நிலவுகிறது!

● **'ஸ்ரீவி' நாயகன், ஸ்ரீவில்லிபுத்தூர்.** ❑

? ***'ஜெயலலிதாவின் வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைத்தது பற்றி எழுந்துள்ள பிரச்னை சட்ட சம்பந்தமான பிரச்னை; அரசியல் பிரச்னை அல்ல' என்று இலகணேசன் கூறியிருப்பது பற்றி...?***

! சட்டப் பிரச்னையாவது அரசியல் பிரச்னையாவது... எல்லாம் சால்ஜாப்பு. நீதி பரிபாலனம்தானே இரு அரசுகளுக்கும் நோக்கமாக இருக்க வேண்டும்? அதை விடுத்து நோண்டி நோண்டி குறைகண்டு பிடிப்பதன் நோக்கம் மக்களுக்குத் தெரியாதா? ஜெயலலிதாதான் மக்களை முட்டாள்களாக்க நினைக்கிறார் என்று பார்த்தால் மத்திய அரசு அதற்கு மேலிருக்கிறது.

சட்டப் பிரச்னைதானே...?

● **ஆர். லட்சுமி, மதுரை - 16.**

? ***மத்திய மந்திரி சபையில் குறிப்பிட்ட இலாகாவை சில தலைவர்கள் கேட்டுப் பெறுவதற்கு என்ன காரணம்...?***

! அதைத்தான் மமதா பானர்ஜி வெளிப்படையாகச் சொல்லி விட்டாரே - 'பெட்ரோலியம் அமைச்சகத்தில் பணம் நிறைய பண்ணலாம்; ஆனால் வங்கத்துக்கு அதனால் என்ன லாபம்...?' என்று! ரயில்வே அமைச்சர் பதவியைத் தமது கட்சிக்காரருக்குக் கேட்டபோது சொன்னது இது!


● **கே. ஆர். வெங்கடேஷ், சீர்காழி.**

? ***கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பனை செய்ததாகக் கடந்த ஆறு மாதங்களில் கைது செய்யப்பட்டவர்களுள் நாற்பத்தேழாயிரம் பேர் பெண்களாம். இது குறித்துத் தாங்கள் கூற விரும்புவது...?***

! அந்த அளவுக்கு வறுமை அவர்களை ஆட்டிப் படைக்கிறது என்று அர்த்தம். நம் நாட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுள் பாதிக்கு மேல் பெண்கள் என்னும் போது, இந்தப் புள்ளி விவரம் ஆச்சர்யம் தரவில்லை. ஐம்பத்திரண்டு ஆண்டுகளில் அரசு எதற்கு முன்னுரிமை தந்திருக்க வேண்டுமோ அதற்குத் தரவில்லை என்பது மறுபடி நிரூபணமாகிறது. - அது தொழில் கல்வி.



• 'புனித' புராணம்!



• நட்பா, சகிப்பா?

● **ராஜி, கரூர்.**

? ***வாஜ்பாய் 'அம்மா'வுடன் நட்பாகப் பழகுகிறாரா? அல்லது ஆட்சி நடத்துவதற்காக சகித்துக் கொண்டு போகிறாரா...?***

! குற்றங் குறைகளை எடுத்துக் காட்டுவதை நட்பாகக் கருதலாம்; பிளாக் மெயில் செய்வது நட்பாகுமா...? இந்தத் தலை(வலி)வியை சகித்துக் கொண்டு போகச் செய்வது பதவி ஆசை. அது யாரை விட்டது!?



• வெளிப்படை விளக்கம்!

● **ஆர். பிரகாசம், மருதாடு.**

? ***மாறும் உலகில் மாறாமல் இருப்பது எது...?***

! உண்மை.

● **எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.**

? ***தீபாவளி மலர் போட்டிக்குத் தடை விதித்துள்ளதே உயர்நீதி மன்றம்?***

! கேஎம். விஜயனின் வெற்றி; வாழ்த்துகள்!

● **எம். ரேவதி, மன்னார்குடி.**

? ***'காங்கிரஸ் கட்சி புனிதமான கங்கை நதியைப் போன்றது; அதில் யார் வேண்டுமானாலும் சேரலாம்; யார் வேண்டுமானாலும் வெளியேறலாம்' என்று குலாம் நபி ஆசாத் கூறியுள்ளாரே?***

! கங்கையைத் தூய்மைப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம், தெரியுமா!


❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
'ஸ்ரீவி' நாயகன்
ஜெயகர் மேச் ஒர்க்ஸ்,
ரயில்வே பீடர் ரோடு,
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.

நடக்குமென்பார், நடக்கும்!




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

ஊட்டி பஸ் ரூட் மாதிரி இந்த வாரம் நிறைய திருப்பங்களைச் சந்திக்கப் போறீங்க. ஸோ, கவனம் ரொம்ப முக்கியம். முக்கியமா, புதிய தொழில் தொடங்கறதோ, புது பார்ட்னர் ஏற்படுத்திக்கறதோ – இது மாதிரி விஷயங்களில் நாலு பேரை கலந்து பேசிச் செய்யுங்க. உத்தியோகஸ்தர்களுக்குப் பழைய பாக்கிகள் வசூலாகற வாரம் இது. சிலபேருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வரலாம். குறைஞ்சது வெளிநாட்டிலேருந்து வேற ஏதாவது நல்ல செய்தியாவது வரும். பணப் பிரச்னை இருக்காது. கொஞ்சம் மருத்துவ செலவுகள் வரலாம். வீட்டுல எல்லாரையும் அனுசரிச்சி நடந்துக்கிட்டீங்கன்னா அல்ப மனஸ்தாபங்களைத் தவிர்க்கலாம்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க கஷ்டகாலம் அநேகமா தீர்ந்துடற நேரம் வந்துடுச்சிங்க. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள் எல்லாருக்குமே புதிய வாய்ப்புகள் பளிச்சுனு வந்து சேரும். எதிலும் வெற்றிதான்! சிலருக்கு உத்யோக ரீதில ப்ரமோஷன் கிடைக்கலாம். வராத கடன்கள் வந்து சேரும். பெண்களால் ஆண்களுக்கு ஆதாயம் இருக்கும். பயணம் ஒண்ணு இருக்கு. கவனமா போயிட்டு வாங்க. பிக்பாக்கெட்காரங்க கிட்ட உஷாரா இருங்க. மத்தபடி நீங்க எங்க போனாலும் காரியம் சக்ஸஸ்தான். பெரிய ப்ளான் ஏதாவது வெச்சிருந்தீங்கன்னா இப்பவே தொடங்கிடுங்க. நல்ல நேரம் கூடி வருது.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

கிரகங்கள் அத்தனை சாதகமா இல்லீங்க. எதையும் ரெண்டு தடவை யோசிச்சி செய்யுங்க. குறிப்பா சொத்து ஏதாவது வங்கற யோசனை இருந்தா, நல்லா நாலு பேர் கிட்ட கலந்து பேசிட்டு காரியத்துல இறங்கறது பெட்டர். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கப் பாருங்க. யார் கிட்டேயும் வாயைக் குடுக்காதீங்க. குறிப்பா பெண்கள், வீண் வம்புகள்ல சிக்கிக்கற அபாயம் இப்ப இருக்கு. மருத்துவர்கள் ரொம்ப எச்சரிக்கையா இருக்கணும். கெட்ட பெயர் ஏற்படற சான்ஸ் இருக்கு. இந்த வாரம் புதிய முயற்சிகள் எதுவும் வேணாம்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

குருவும் புதனும் ரொம்ப சாதகமா இருக்காங்க. ஸோ, உங்களோட எல்லா பிரச்னையையும் 'ப்பூ'ன்னு ஊதித் தள்ளிடலாம். இந்த வாரம் உங்களுக்குச் சில இன்ப அதிர்ச்சிகள் கிடைக்கலாம். காதல் கை கூடும். திருமண ஏற்பாடுகள் நடக்கலாம். விருப்பப்பட்டபடி டிரான்ஸ்ஃபர் கிடைக்கலாம். பெண்களுக்குத் தாய் வீட்டுலேருந்து ஏதாவது பரிசு வரலாம். நீண்ட நாள் ஆசை ஒண்ணு இப்ப நிறைவேறும் சூழ்நிலை கூடி வருது. சிலருக்குப் புண்ணிய காரியங்கள் செய்யும் வாய்ப்பு வரும். சமூகப் பணியாளர்களுக்குப் புகழ் சேரும் வாரம் இது.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*


உங்க ஆற்றல் வெளிப்படும் வாரம் இது. துணிஞ்சி செய்யற எந்தக் காரியமும் சக்ஸஸ்தான். எதிரிகள் பணாலாயிடுவாங்க. குறிப்பா கலைத் துறையினருக்கு வெற்றி மேல் வெற்றிதான்! அரசாங்கத்துலேருந்து ஏதாவது முக்கியத் தகவல் எதிர் பார்க்கறீங்களா? இப்ப வந்துடும். வீடு, நிலம் வாங்க சாதகமான சூழ்நிலை. பயன்படுத்திக்கங்க. பெண்களுக்கு உல்லாசப் பயண யோகம் இருக்கு. வயதான பெற்றோர் இருந்தா அவங்க உடல் நலத்துல அக்கறை செலுத்துங்க. சிறு மருத்துவச் செலவு இருக்கலாம். அரசியல்வாதிகளுக்கு ஆதாயமான நேரம் இது.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


ஒரு பக்கம் பதவி உயர்வு, வெளியூர்ப் பயணம், உல்லாசம்னு ஜாலி சமாசாரங்கள் நிறையவே வரும்னாலும் மறுபக்கம் வீட்டுல பிரச்னைகள் வரலாம். சின்ன சண்டைகள், கோபதாபங்கள் இப்படி. விட்டுக் குடுத்து நடந்துக்கங்க. பெண்களுக்கு இந்த வாரம் ஓஹோ! புதிய பொருள் வேட்டையே நடத்துவாங்க. விஞ்ஞானிகள், விவசாயிகளுக்கு லாபம் கூடும் வாரம். வெளிநாட்டுத் தொடர்பு ஏதும் இருக்கா? அது மூலம் ஒரு லாபகரமான சம்பவம் நடக்கும். படிக்கற பையன்களுக்குப் பாராட்டு கூடும். ஆன்மிகவாதிகளுக்கு புகழ் சேரும் வாரம் இது.

ஜனவரி 27 முதல் பிப்ரவரி 2 வரை




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

கொஞ்சம் கஷ்டமான வாரம். பஸ் லேட்டாகி ஆபீஸ்ல டோஸ் வாங்க வேண்டியது தொடர்ந்து நாய்க்கடி வரைக்கும் என்ன வேணா நடக்கலாம். எச்சரிக்கையா இருங்க. புதிய முயற்சிகள் எதுவும் இப்ப வேணாம். பெரியவர்களை மதிப்போட நடத்துங்க. எடுத்தெறிஞ்சி பேசி கெட்ட பேர் வாங்கிக்காதீங்க. உத்தியோகஸ்தர்களுக்கு சில சிக்கல்கள், வேலையில் வரலாம். யாரையும் நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைக்காதீங்க. கடன் குடுக்காதீங்க, வாங்காதீங்க. பழைய நண்பர் ஒருத்தர் இப்ப உங்களை நாடி வந்து உதவி கேட்கலாம். யோசிச்சிச் செயல்படுங்க.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்களுக்கென்னங்க? சுகவாசி. உங்க வேலைகளை எடுத்துச் செய்ய எத்தனையோ பேர் இருக்காங்க. ஹாயா இருக்க வேண்டியதுதானே? இந்த வாரம் உங்க மூத்த மகன்/மகளால ஏதாவது புகழ் கூடும் சம்பவம் நடக்கலாம். வீட்டுல ஏதோ விசேஷம் நடக்கப் போவுது. சுப செலவுகள் இருக்கும். வியாபாரிகளுக்கு லாபம் கூடும். மருத்துவர்கள், ஆசிரியர்களுக்குப் புகழ் கூடும். சிலருக்கு உல்லாசப் பயண யோகம் கூட இருக்கும். உடம்பைப் பார்த்துக்கங்க. வயிறு சம்பந்தமான பிரச்னை ஏதாவது வரலாம்.



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

சுமாரான வாரம். பிரச்னைன்னு பெரிசா ஏதும் இருக்காது. மாமூலான வாழ்க்கை தொடரும். ராத்தூக்கம் குறையும். வேலை கொஞ்சம் அதிகமா இருக்கும். வீட்டுல அம்மணிங்க எங்காவது வெளில கூட்டிட்டுப் போகச் சொல்லி நச்சரிக்கலாம். வயசான பெற்றோர் இருந்தாங்கன்னா, அவங்க உடல் நலத்துல கொஞ்சம் கவனம் அவசியம். இந்த வாரம் உங்களுக்குப் புதிய நண்பர்கள் சிலர் கிடைப்பாங்க. கோர்ட் கேஸ் ஏதாவது இருந்தா சுமுகமா பைசல் ஆயிடும். செலவு கொஞ்சம் அதிகமா கூடும். ஆனா வருமானமும் போதுமான அளவுக்கு இருக்கவே செய்யும்.



மகரம் : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

கல்யாண வயசுப் பொண்ணு, பையன்களுக்கு டும்டும் ஏற்பாடு ஜோரா நடக்க ஆரம்பிக்கும். இயந்திரப் பணியாளர்கள், உழைப்பாளிகள், எழுத்தாளர்களுக்குப் புகழும் பெயரும் கூடும் வாரம். நீங்க நினைச்சது நினைச்சபடி நடக்கும். வீட்டுல ஒரு விசேஷம் வரப் போகுதில்லையா? செலவு கொஞ்சம் அதிகமாவே இருக்கும். ஷேர், லாட்டரில கூட லாபம் கிடைக்க வாய்ப்பு இருக்கு. மாமியார் - மருமகள் உறவு சுமுகமா இருக்கும். உலக யுத்தம் ஏதும் வராது. வெளியூர்ப் பயணம் குறிப்பா இரவுப் பயணத்தைத் தவிர்க்கறது எல்லாருக்குமே நல்லது.


சிம்மராசிக்காரரான ஓவியர் மருதுவுக்கு அரசாங்கத்திலேர்ந்து முக்கிய சேதி வருமாம்!





கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

வசீகரமான தோற்றமே உங்களுக்குப் பாதி வெற்றி வாங்கித் தந்துடும். போதாக்குறைக்கு நல்ல பேச்சாற்றல்! போதாதா? நீங்க தாங்க கவலையே இல்லாத மனுஷர்! இந்த வாரம் உங்க மனசு குளிரும்படியான காரியங்கள் பல நடக்கும். நண்பர்களால நல்லது நடக்கும். வீட்டுல மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் குறைவே இருக்காது. சிலருக்கு கோவில் குளம்னு சுத்தற வாய்ப்பு இருக்குது. வெளியூர் அல்லது வெளிநாட்டுலேருந்து ஏதாவது நல்ல செய்தி வரும். எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்குப் பரிசோ, விருதோ, பாராட்டுக் கூட்டமோ கட்டாயம் இருக்கும்.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

தடைகள் நிறைய இருந்தாலும் உங்க சாதுர்யத்தால எதையும் சாதிச்சிட்டு வெளில வந்துடுவீங்க. இந்த வாரம் நீங்க கொஞ்சம் கூடுதலா உழைக்க வேண்டி வரும். தூக்கம், சாப்பாடு ரெண்டும் நேரத்துக்குக் கிடைக்காது. போதாக்குறைக்கு கூடப்பிறந்தவங்களால ஏதாவது பிரச்னை வரலாம். வீட்டுல வீண் விவகாரங்களை ஒரு 'டாபிக்'கா எடுத்துப் பேச வேண்டாம். ஆபீஸ் நிலவரம் திருப்திகரமாவே இருக்கும். மேலதிகாரிகள் பத்தி கமெண்ட் அடிச்சி மாட்டிக்காம இருக்க வேண்டியது உங்க பொறுப்பு. பெண்களுக்கு சினிமா, டிராமான்னு ஜாலி பண்ண வாய்ப்பு இருக்கு. ●

ஹிந்தியில் வழியனுப்பப்பட்டு டெல்லியிலிருந்து புறப்பட்ட தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ஆந்திர மாநிலத்தில் தெலுங்கில் விசில் அடித்தபடி சென்று கொண்டிருந்தது.

இடது கையில் முன் பதிவுப் பட்டியலைப் பிடித்துக்கொண்டு, வலது கையில் டார்ச் லைட்டைப் பிடித்தபடி, முதல் வகுப்பு டிக்கெட் பரிசோதகர் படுக்கை எண் – 24ஐ தேடி வேகமாக வந்து கொண்டிருந்தார். டார்ச் வெளிச்சத்தில் 24–ஐ உறுதிப் படுத்திக் கொண்ட பின்னர், விளக்கைப் போட தொங்கிக் கொண்டிருந்த தண்ணீர்ப் பையைத் தள்ளிவிட்டு சுவிட்சைக் கீழே தட்டினார்.

விளக்கு வெளிச்சம் பட்டதும் கீழ்ப் படுக்கை எண் 23–ல் படுத்திருந்த இளம் பெண், கம்பளிப் போர்வையை கழுத்து வரை நன்றாக இழுத்துப் பிடித்துக் கொண்டு, "யாரு?" என்றாள் திகிலுடன்.

டிக்கெட் பரிசோதகர், "டாக்டர் ராம் குமார்...?" என்று கேட்கும்போதே, மேல் படுக்கையில் படுத்திருந்த சுமார் இருபத்தெட்டு வயது இளைஞன் தலையைக் கீழே தொங்கவிட்டபடி தூக்கக் கலக்கத்துடன், "யெஸ், நான்தான்!" என்றான்.

டிக்கெட் பரிசோதகர், ''ஐ ஆம் வெரி ஸாரி டு டிஸ்டர்ப் யு சார்! எஸ்–ஃபைவ் கோச்சிலே ஒரு குழந்தை ரொம்ப சீரியஸா இருக்கு! ப்ளீஸ் ஹெல்ப்!'' என்றார் பதற்றத்துடன்.

நீண்ட முகம், கூர்மையான மூக்கு, ஒட்ட வெட்டப்பட்டு பின்னோக்கி ஏற்றிச் சீவப்பட்ட கிராப், அளவான மீசை, நல்ல உயரம் என இந்திய கிரிக்கெட் வீரர் அனில் கும்ப்ளே போல இருந்த டாக்டர் ராம்குமார் எண்–23ல் படுத்திருந்த பெண்ணிடம், ''திவ்யா! இப்ப டைம் என்ன?" என்று கேட்டான்.

"ஒண்ணு பத்துங்க!''

போர்வையை இழுத்துச் சுருட்டி காற்றுத் தலையணை மீது வைத்த பின்னர், குப்புறப் படுத்து, பின்னோக்கி ஊர்ந்து, இரண்டு கால்களையும் கீழே இறக்கி, வலதுகாலை ஏணிப் படியில் வைத்து, இடதுகையை கீழ்ப்படியில் வைக்கும்போது இடறினான்.

"பார்த்துங்க! கால் பத்திரம்!" என்று பதறினாள் திவ்யா.

கீழே விழாமல் சமாளித்துக் கொண்டு, மெதுவாக இறங்கிய பின் ராம்குமார் டிக்கெட் பரிசோதகரின் நீலநிற கோட், யூனிஃபார்ம், 'நேம் பிளேட்'டில் ஜி. கணேசன் ஆகியவற்றைக் கவனித்தபடியே "குழந்தைக்கு என்ன?" என்று வினவினான்.

டிக்கெட் பரிசோதகரின் பின்னால், அவருடன் கூட வந்திருந்த ஒரு அய்யப்ப பக்தர், "தூங்கிக்கிட்டிருந்த குழந்தைக்குத் திடீர்னு வலிப்பு மாதிரி வெட்டி வெட்டி இழுத்துக்கிட்டிருக்கு!" என்றார்.

திவ்யா, 'ஊர்லேதான் எமர்ஜென்சி கேஸ் வந்து ராத்திரி தூங்க விட மாட்டாங்க, ரயில்லே கூடவா?' என்று மனத்தில் நினைத்துக் கொண்டாள். ''கொஞ்சம் இருங்க! - ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்துக்கிறேன்!''

நாயைக் கட்டிப் போடுவதைப் போல,



பேசும் ஊமைகள்

சுப்ரியா சாந்திலால்

சங்கிலியால் பிணைத்துக் கட்டப்பட்டிருந்த சூட்கேஸ் பூட்டைத் திறக்க, காலணிகளை வலதுகாலால் தள்ளிவிட்டு, தரையில் மெதுவாகக் குத்த வைத்து உட்கார்ந்தான். முதலுதவிப் பெட்டியை எடுத்துக் கொண்டு இடது முழங்கால் மூட்டில் இடது கையை வைத்து தாங்கிப் பிடித்து எழுந்து நின்றான்.

''எங்கிட்டே குடுங்க சாமி, நான் கொண்டு வர்றேன்!'' என்று சொல்லிக் கொண்டே அந்த அய்யப்ப பக்தர் வாங்கிக் கொண்டார்.


பாதங்களை 'கட் ஷு'வில் திணித்துக் கொண்டு, பைஜாமா நாடாவை இறுக்கிக் கட்டிக் கொண்டு, ஜிப்பாவை சரிசெய்து, கீழே இழுத்துவிட்டபடி டிக்கெட் பரிசோதகரிடம், ''போவோம்!'' என்றான்.

தனியாக இருக்கப் பயந்த திவ்யா, ''சீக்கிரம் வந்திடுங்க!'' என்றாள் மிரட்சியுடன்.

அய்யப்ப பக்தர் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடக்க, அவருக்கு ஈடுகொடுத்து டிக்கெட் பரிசோதகர் நடக்க, ராம்குமார் இடதுகாலை விந்தியபடி சற்று மெதுவாகப் பின்தொடர்ந்தான். ஒரு 'கோச்'சுக்கும் அடுத்த 'கோச்'சுக்கும் இடையே உள்ள இணைப்புத் தகட்டைக் கடக்கும்போது நின்று, நிதானித்து, பக்கவாட்டுக் கம்பியைப் பிடித்துக்கொண்டு கடந்தான்.

இரண்டாம் வகுப்புப் பெட்டியில் நுழைந்ததுமே 'டாய்லெட்' அறையிலிருந்து சிறுநீர் நாற்றம் வீசி அடித்தது. மூச்சை உள்ளே இழுக்காமல் 'தம்'பிடித்து அடக்கிக் கொண்டு சிறிது தூரம் சென்றபின், சுவாசித்தான். அவ்வளவு 'வீசி'யும் அந்த கழிப்பறைகளுக்கு அருகிலேயே, முன்பதிவு பெறாத பயணிகள் சிலர் கூனிக்குறுகிப் படுத்திருந்தார்கள்.

வழிநெடுக ஆரஞ்சுப் பழத் தோல்கள், சுளைகளை மென்று துப்பிய சக்கைகள், கொட்டைகள், உடைந்த முறுக்குத் துண்டுகள், கடலைப் பருப்புகள் ஆங்காங்கே இறைந்து கிடந்தன.



ஆறடி உயரம் இருந்த பயணிகளின் இரு கால்களும் படுக்கைக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்தன.

ஏற்கெனவே மூன்று சுற்று முடித்து, 'மப்'பில் இருந்த இரண்டு குடிமகன்கள் டிக்கெட் பரிசோதகரைக் கண்டதும், 'வின்டேஜ்' மீது துண்டைப் போட்டு அவசரமாக மூடினார்கள்.

ஒரு முதிய ஆஸ்த்மா நோயாளி உட்கார்ந்தபடியே தூங்கிக் கொண்டிருந்தார்.

320 'பாய்ண்ட்'டுக்கு 'நாக்-அவுட்' ஆடிக் கொண்டிருந்த நான்கு பேர்களில் ஒருவன் ஒரிஜினல் ரம்மிக்காக, தன் குல தெய்வத்தைப் பிரார்த்தித்தபடியே ஒரு சீட்டை உருவிக் கொண்

டிருந்தான்.

எஸ்-5 பெட்டி வந்ததும் மூவரும் மேலும் வேகமாக நடந்தார்கள். ஏறக்குறைய எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்தன.

கும்பலாக நின்று 'வேடிக்கை' பார்த்துக் கொண்டிருந்தவர்கள் டாக்டரையும் டிக்கெட் பரிசோதகரையும் பார்த்து, ஒதுங்கி வழி விட்டு நின்று கொண்டார்கள்.

அந்தக் குழந்தையின் தந்தை, 'வெட்டி'க் கொண்டிருந்த தன் குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டு, 'என்ன செய்வது?' என்று புரியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

அந்த இளம் தாய், குழந்தையின் வாயிலிருந்து வழிந்து வந்து கொண்டிருந்த எச்சிலையும் சளியையும் அழுதபடியே தன் சேலைத் தலைப்பால் துடைத்துக் கொண்டிருந்தாள்.



"என்னது...? நீ தெய்வீகப் பணியில ஈடுபட்டிருந்தபோது போலீஸ் உன்னை கைது பண்ணிட்டாங்களா?"

"ஆமா! வெளிநாட்டுக்குச் சாமி சிலையை கடத்த முயற்சித்தபோது ஏர்போர்ட்ல மடக்கிட்டாங்க!"

- சூரம்பட்டி சத்யா முருகவேல்

ராம்குமார் குழந்தையின் அருகில் அமர்ந்து கொண்டு, "குழந்தையோட ஸ்வெட்டர், சட்டை, டவுசர் எல்லாத்தையும் கழட்டுங்க! குப்புறப் படுக்க வையுங்க! எச்சில் வெளியே வழியற மாதிரி தலையை ஒரு பக்கமா திருப்பிப் பிடிச்சிக்குங்க!" என்றான்.

மார்பு, முதுகு மீது ஸ்டெதாஸ்கோப் வைத்துச் சோதித்தான். நாடியைப் பார்த்தான்.

எல்லோரும் ராம்குமாரின் முகத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

"பயப்பட வேண்டாம்! குழந்தைக்குக் காய்ச்சல் ரொம்ப அதிகமா இருக்கு! துண்டு, கர்சீப் இருந்தா உடனே தண்ணியிலே நனைச்சு, பிழிஞ்சி கொண்டாங்க!" என்று சொல்லிக் கொண்டே, 'டிஸ்போசபிள் சிரிஞ்'ஜில் மருந்தை ஏற்றி இரண்டு 'பிட்டி'யிலும் மாறி மாறி ஊசி போட்டான்.

அய்யப்ப பக்தர் ஓடிப்போய் ஈரத் துணியைக் கொண்டு வந்தார். அதைக் குழந்தையின் மார்பு, வயிறு, நெற்றி மீது விரித்தான். சிறிது நேரத்தில் வலிப்பு நின்று விட்டது.

குழந்தையின் பெற்றோர் சற்று அமைதி அடைந்தனர்.

"குழந்தை கொஞ்ச நேரம் ஆழ்ந்து தூங்கும்! பிறகு நார்மல் ஆயிடும்!" என்றான்.

அய்யப்ப பக்தர் கண்களை மூடிக் கொண்டு, பிரார்த்தனை செய்தபடியே தமது கறுப்புத் துண்டை எடுத்து, குழந்தையின் தலையிலிருந்து கால் வரை மூன்றுமுறை தடவி விட்டார். பின்னர், இடுப்பிலிருந்த சுருக்குப் பையிலிருந்து திருநீறு எடுத்துக் குழந்தையின் நெற்றியில் பூசினார்.

"குழந்தைக்கு எத்தனை நாளா காய்ச்சல்?" என்று தாயிடம் கேட்டான் ராம்குமார்.

"நேத்து காலையிலே லேசா இருந்திச்சி! ரயில்லே ஏறின பிறகுதான் அதிகமாயிடிச்சி!" என்றாள்.

"காய்ச்சல் இருக்கும்போது, அதுவும் இந்தக் குளிர்லே, பிரயாணம் போறது ரொம்பத் தப்பு! ஊருக்குப் போக அப்படி என்ன அவசரம்?" என்று தந்தையிடம் கடிந்து கொண்டான்.

அவன் கண்களில் நீர் நிரம்பி விட்டது. துக்கம் தொண்டையை அடைக்க, "எங்கப்பா... இறந்திட்டாரு!" என்று மெதுவாகச் சொன்னான்.

"ஐ ஆம் வெரி ஸாரி!" என்று வருத்தம் தெரிவித்தான் ராம்குமார்.

சிறிது நேரம் மௌனமாகக் கழிந்தது.

குழந்தை அழுதபடியே கண் விழித்தது. அதைத் தூக்கிக் கன்னத்தில் மாறி மாறி முத்தமிட்டாள் குழந்தையின் தாய். ராம்குமார் "வெந்நீர், இல்லேன்னா பால், ஏதாவது குடுங்க!" என்றான்.

டிக்கெட் பரிசோதகர், ராம்குமாரிடம் மெதுவாக, "சார்! கொஞ்ச நேரத்திலே வாராங்கல் ஸ்டேஷன் வருது! 'குழந்தையை இறக்கி விடணும்'ன்னா சொல்லுங்க! 'பிரேக்கேஜ் ஜர்னி' போட்டுக் குடுத்திடலாம்! ஏதாவது ஹாஸ்பிடல்லே சேர்த்து, நல்ல குணமான பின், இதே டிக்கெட்லே

வந்திடலாம்!'' என்றார்.

''அந்த அளவுக்கு சீரியஸ் இல்லே! மெட்ராஸ் போறவரை நானே பார்த்துக்கிறேன்! இவரோட அப்பா இறந்திட்டதாலே இவங்க அவசரமா போயாகணுமே!''

அப்போது குழந்தை சிறுநீர் கழித்தது. ஆண் குழந்தையாக இருந்ததால், அது நீருற்று போலப் பாய்ந்து வந்து ராம்குமாரின் இடது முழங்கால் பகுதியை ஈரமாக்கியது.

குழந்தையின் தாய் பதறினாள். தன் கணவனிடம் ''துண்டு எடுத்து சீக்கிரம் துடைச்சி விடுங்க!'' என்றாள்.

''பரவாயில்லேம்மா! என்கிட்டே டிரீட்மெண்ட்டுக்கு வர்ற எத்தனையோ குழந்தைங்க என் சட்டை, பாண்ட் மேலேயே வாந்தி எடுத்திருக்காங்க! மலம்கூட கழிச்சிருக்காங்க!'' என்று புன்னகையுடன் கூறி, கர்சீப் எடுத்துத் தானே துடைத்துக் கொண்டான்.

''அப்போ நீங்க குழந்தைகள் ஸ்பெஷலிஸ்டா?'' என்று டிக்கெட் பரிசோதகர் கேட்டார்.

''ஆமா! எம்.டி. பீடியாட்ரிக்ஸ்!''

''எங்கே பிராக்டீஸ் செய்றீங்க?''

''கோயம்புத்தூர்லே!''

''டெல்லிக்கு என்ன வேலையா போயிட்டு வர்றீங்க?''

''ஜெய்ப்பூருக்குப் போயிட்டு வர்றேன்!''

''உங்க டாக்டர்கள் கான்ஃபரன்ஸா? இல்லே, சும்மா சுற்றுலா மாதிரியா?''

ராம்குமாரின் மனத்திரையில், அவனது மருத்துவமனையை ஒட்டி இருந்த கட்டடம் தீவிரவாதிகள் வைத்த வெடிகுண்டால் தகர்ந்து தரைமட்டமானது; அதன் பாதிப்பாக அவனது மருத்துவமனையின் ஒரு பக்கச் சுவர் இடிந்து விழுந்தது. அந்த இடிபாடுகளுக்கிடையே அவனது இடதுகால் சிக்கி, சின்னாபின்னமாகிச் சிதைந்து போனது; அவனது உயிரைக் காப்பாற்ற இடது காலை முழங்காலுக்குக் கீழே ஆபரேஷன் செய்து வெட்டி எடுத்தது; செயற்கைக்கால் பொருத்துவதற்காக ஜெய்ப்பூருக்குச் சென்றது; தற்போது செயற்கைக் காலுடன் திரும்பி வருவது... எல்லாமே ஒன்றன் பின் ஒன்றாக வேகவேகமாக வந்து போயின. இருந்தும் முகத்தில் எவ்விதச் சலனமும் காட்டிக் கொள்ளாமல், ''சும்மா சுற்றுலா தான்!'' என்று சொன்னான்.

டிக்கெட் பரிசோதகர், குழந்தையின் தந்தையிடம், ''நீங்க எந்த ஊருக்குப் போறீங்க?'' என்று கேட்டார்.

''கீழக்கரை, ராமநாதபுரம் பக்கம்!''

''டெல்லியிலே என்ன செய்றீங்க?''

'' 'சாந்தினி சௌ'க்கிலே டீ.வி. ஸ்பேர் பார்ட்ஸ் ஹோல்சேல்ஸ் கடை வச்சிருக்கேன்!''

ராம்குமார், ''உங்க அப்பா உடம்புக்கு என்ன ஆச்சு?'' என்று பரிவுடன் விசாரித்தான்.

'ஆர்.டி.எக்ஸ். வெடிமருந்துகளை பார்சல் செய்து அனுப்பும்போது எதிர்பாராதவிதமா வெடிச்சி இறந்திட்டாரு' என்ற உண்மையை மறைத்து, ''மாரடைப்பு!'' என்றான். ⭘


படையப்பா அறக்கட்டளை!



● இலக்கிய சம்பந்தமான எந்தப் புத்தகம் வந்தாலும் உடனே வாங்கிப் படித்து விடுகிறார் ஆர்.எம்.வீ. நெருங்கிய நண்பர்கள் வந்தால் படித்ததில் பிடித்ததைப் படித்தும் காட்டுகிறார். கடைசியாகப் படித்த புத்தகம்: கலைஞர் முதல் கவாப்ரியா வரை. இது சுப மங்களா பேட்டிகளின் தொகுப்பு.

● ஜெயலலிதாவின் அறிக்கைகள் 'நமது எம்.ஜி.ஆர்' ஆசிரியர் குழுவினரால்தான் தயார் செய்யப்படுகின்றன. போயஸ் கார்டனில் ஃபாக்ஸில் அதைப் பெற்றதும், வரி விடாமல் படித்து, திருத்தங்களும் மாற்றங்களும் செய்வார் ஜெ.

● ரஜினி ரசிகர் மன்றத் தலைவரும், ரஜினியின் உற்ற நண்பருமான சத்திய நாராயணாவின் கோபாலபுரம் இல்லத்தில் காலையிலிருந்தே கோரிக்கைகளுடன் மக்கள் படையெடுக்கிறார்கள். திருமண உதவி, படிப்புதவி என்று பலவித உதவிகள். 'ஸார் (ரஜினி) கிட்ட சொல்றேன்' என்று எல்லா மனுக்களையும் பொறுமையுடன் வாங்கிக் கொள்கிறார் சத்தி. படையப்பா வசூலில் தகுதி வாய்ந்த ஏழை மாணவர்களின் படிப்புக்கென்று அறக்கட்டளை ஏற்படுத்தப் போகிறாராம் ரஜினி.



— கௌசி

சிறையில் அடைபட்டதும் திருப்தி!

அம்புஜம்மாளின் நூற்றாண்டு விழா சமீபத்தில் கொண்டாடப்பட்டது. அவருடன் நெருங்கிப் பழகிய சரோஜினி வரதப்பன் சொல்கிறார் :

ஒத்துழையாமை இயக்கம் பற்றி எரிந்த காலகட்டம். ருக்மணி லக்ஷ்மிபதி, ராதாபாய்



சுப்பராயன், மஞ்சுபாஷிணி, கோதைநாயகி போன்றவர்கள் மறியலில் ஈடுபட்டபோது அம்புஜம்மாளும் தம்முடைய சித்தி ஜானம் மாளுடன் சேர்ந்து மறியல் செய்வார். எல்லோரையும் பிடித்துப் போன காவலர் கள் மாலையில் அம்புஜம்மாளை மட்டும் வெளியே விட்டு விடுவார்கள்!

தினமும் இப்படியே நடந்தது! யதேச்சை யாகக் காவலர்கள் பேசிக் கொண்டதும் அம்புஜம்மாள் காதில் விழுந்து தொலைத் தது. காவல் துறைக்கு அம்புஜம்மாளின் தந்தை சீனுவாசய்யங்கார் தொலைபேசியில் சொல்லியிருந்த விஷயம் – 'அந்தப் பெண் ணுக்கு மனநிலை சரியில்லை. விட்டு விடுங் கள்.' சீனுவாசய்யங்கார் புகழ்பெற்ற வழக் கறிஞர். (பக்தவத்சலம் கூட இவரிடம் சில காலம் ஜூனியராக இருந்ததுண்டு.)

'அப்பாவின் சதி'யைப் பற்றி அறிந்த அம்புஜம்மாள் அப்புறம் வீட்டுக்கே போக மறுத்து விட்டார். பிடிவாதமாக மறுபடியும் முயன்று கைதானார். ஆறு மாதம் கடுங் காவல் கிடைத்து வேலூர் பெண்கள் சிறை யில் அடைபட்டபோதுதான் திருப்தி கிடைத்தது!

பத்மஸ்ரீ விருது, தாமிரபத்ர விருது எல்லாம் பெற்ற சமூக சேவகி- சமூக சேவகி யாக மட்டும் வாழ்ந்தவர் அம்புஜம்மாள். பெருந்தலைவர் காமராஜர், பக்தவத்சலம் போன்றவர்கள் வற்புறுத்திச் சட்டமன்றத் துக்கு அனுப்ப முயன்றபோதும் 'வேண் டாமே அரசியல். சமூகப் பணி ஒன்று போதும்' என்று ஒதுங்கிக் கொண்டவர்.

வார்தாவில் பாபுஜியிடம் சேர்ந்து சில காலம் தொண்டாற்றியபோது நகைகள் எல்லாவற்றையும் நிர்மாணப் பணிக்கு வழங்கி விட்டு எளிமையைக் கைக் கொண் டார். கடைசி வரை தூய 'கதராடையே சோபிதம்' என்று வாழ்ந்தார்.

அம்புஜம்மாள் அதிகம் படித்தவர் இல்லை. ஆனால் ஹிந்தி கற்றுக் கொண் டார். துளசி ராமாயணத்தைத் தமிழில் எழுதினார். தந்தையாரைப் பற்றிய வரலாற் றையும் எழுதினார். சென்னைக்கு காந்திஜி, சரோஜினி நாயுடு போன்றவர்கள் வரும் போது அவர்கள் சொற்பொழிவைத் தமிழில் மொழிபெயர்த்ததும் உண்டு.

இந்திய மாதர் சங்கத்தின் சென்னைக்

கிளையின் செயலாளராக இருந்து ஹிந்தி தையல் பாட வகுப்புக்களை நடத்தினார். சுதந்தரம் பற்றிய விழிப்புணர்வை ஊட்டு வதற்காக மயிலையின் நான்கு மாட வீதிகளிலும் 'பிரபாத பெரி' என்கிற பெயரில் அதிகாலையில் பஜனை செய்து கொண்டு வருவார்கள். தேசிய கீதங்கள், பாரதி பாடல்கள்தான் பஜனைப் பாடல் கள்!

சமூகநல வாரியத்தில் முக்கியப் பொறுப்பில் இருந்தபோது சின்னஞ்சிறு கிராமங்கள் கூட விடாமல் தமிழகம் முழுவதும் பயணம் செய்து பெண்கள், குழந்தைகளின் நலனுக்காகவும் மேம் பாட்டுக்காகவும் பணியாற்றியவர் அம்புஜம் மாள்.

அந்தக் காலங்களில் டெல்லியில் சமூகநல வாரியம் ஆண்டுதோறும் ஒரு கலை நிகழ்ச்சி நடத்தும். பல மாநிலத்த வரும் பங்குகொள்வார்கள். ஒரு கலை நிகழ்ச்சியில் வில்லுப் பாட்டுக் கச்சேரிக்கு ஏற்பாடு செய்து தாமே வில்லடித்தார் அம்புஜம்மாள்! அந்த வில்லிசை நிகழ்ச்சியே மத்திய சமூகநல வாரியத்தின் பணிகளைப் பற்றியது. பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையின் மகள் சரோஜினி எழுதிய பாடல்களுக்கு, இசையமைத்தவர் டாக்டர் எஸ். ராமனாதன்.

அப்போதெல்லாம் ஜி.டி.யில் டெல்லிக்கு இரண்டு நாள் பயணம். ரெயில் பெட்டி யிலேயே வைத்து ஒத்திகை பார்த்துக் கொண்டு போனோம். அந்த நிகழ்ச்சியை ரசித்த பண்டித நேரு, அம்புஜம்மாளின் முயற்சியை வெகுவாய்ப் பாராட்டினார்.

இன்று சென்னையில் அம்புஜம்மாளை நினைவூட்டி நிற்கும் கட்டடம் சீனிவாச காந்தி நிலையம். பாபுஜி காலமான போது அவருடைய அஸ்தி கலசத்தை வைத்த இடம். மகளைச் சிறைக்கு அனுப்பத் தயங் கிய தந்தை சீனிவாசய்யங்காரே 'சமூகப் பணிக்காக வைத்துக் கொள்' என்று வழங்கிய அந்த மனையில்தான் தந்தை - பாபுஜி இருவரின் பெயரையும் இணைத்து 'சீனிவாச காந்தி நிலையம்' என்று உருவாக் கினார் அம்புஜம்மாள். ●

தொகுப்பு : **'சுப்ர.பாலன்'**



பால்தாக்கரே பரணி!

அண்டைநாடு ஆட வந்தால்
மண்டை உடைப்போம் – அட
எந்த ஊரில் ஆடினாலும்
வந்து உதைப்போம்!

பார்வையாளர் மத்தியிலே
பதுங்கி யிருப்போம் – நாங்க
பாம்பைக் கூட பிடிக்கவந்து
பய முறுத்துவோம்!

எல்லையிலே வாலையாட்டும்
புல்லர்கள் கூட்டம் – இங்கே
எங்க ரூட்டில் குறுக்கவந்தா
எகிறிப் பாயுவோம்.

ஆந்திரபாபு ஜெயலலிதா
பானர்ஜி யம்மா – இன்னும்
கம்யூனிஸ்டு, காங்கிரசு
குப்பன் சுப்பனும்....

பிரதமருக்கு போன்போட்டா
பதறி டுவோமா – நாங்க
பாகிஸ்தான் விரோதம்தான்
மறந்திடுவோமா...?

ஒழிஞ்சுபோறான் ஒரு வருஷம்
வாய்தா குடுப்போம் – மீண்டும்
மும்மடங்கு வெறுப்போடே
வீரங்காட்டுவோம்!

அப்போதும் பிஜேபி ஆட்சியிருந்தா,
தப்பாம ஆக்ஷன்ரீப்ளே காட்டுவோமுங்க – நீங்க
இன்னுமொரு பரணிபாட
உதவுவோமுங்க!

— அலமு

வட்டமேஜை

திருமண ஸ்பெஷல் ஜோடி கல்கி!

✉ மூன்று புதிய பகுதிகள் மட்டுமல்லாமல், 'திருமண ஸ்பெஷலு'க்குப் பொருத்தமாக ஒரு "ஜோடி கல்கி'யையும் வழங்கி, எங்களை ஆனந்தப்படுத்தி விட்டீர்கள்!
நெய்வேலி – 3, ப. உத்தண்டராமன்.

✉ 'தனிக்குடித்தனம் போறீகளா' என வினாவெழுப்பி இளந்தம்பதிகளுக்கு அவசியமான அறிவுரை கூறிய விதம் அருமை. மிகப் பயனுள்ள கட்டுரை.
சென்னை-86, புதுவை ச. புகழேந்தி.

✉ பிரபஞ்சனின் 'ஜெயித்த கதை' மிக மிக அற்புதம்! பலமுறை படித்தேன். பத்து நெப்போலியன் ஹில், பத்து உதயமூர்த்தி புத்தகம் படித்த உற்சாகம்!
நாகர்கோவில், என். இராமச்சந்திரன்.

✉ புதிய பகுதி வாண்டு சைகாலஜி நன்றாக இருக்கிறது. குழந்தைகளின் கேள்விகளுக்கு உளவியல் ரீதியாக, அர்த்தமுள்ள பதில்களாகத் தருவது பாராட்டுக்குரிய விஷயம்.
பொழிச்சலூர், லலிதா செல்லப்பா

✉ சில திருமண மந்திரங்களின் அர்த்தங்களை, எல்லோருக்கும் புரியும்படி தெளிவாகவும், மிக அழகாகவும் எடுத்துரைத்த கடலங்குடி சரஸ்வதி பாராட்டுக்குரியவர்.
சென்னை – 73, கேவி. ராமன்.

✉ 'வியாசர்பாடி தீ விபத்து' பற்றிய தலையங்கம் அருமை...! 'அரசியல்வாதிகளின் வோட்டு வங்கிகளாகவும், தொண்டர் படை முகாம்களாகவும் குடிசைப்பகுதிகள் அமைந்து விடுவதால், அவற்றைப் பாதுகாத்து வைத்துக் கொள்வது அரசியல்வாதிகளுக்கு அவசியமாகிறது' என்று கூறியிருப்பது மறுக்கவோ.. மறைக்கவோ முடியாத உண்மை...!
திருச்சி–20, எஸ். காளிதாஸ்.

✉ 'வியாசர்பாடி தீ விபத்து' தலையங்கத்தில் கூறியபடி அரசின் கவனம் கிராமப்புறங்களுக்குத் திரும்ப வேண்டும். குறைந்தபட்சம், இணைப்பிதழில் வெளியான 'விடிவெள்ளி'யான வள்ளி'யின்பால் அரசின் கவனம் ஈர்க்கப்பட்டு, நகர்ப்புற குடிசைப் பகுதிகளுக்காவது விடிமோட்சம் கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
விஜித்திரராஜபுரம், ஜி. ராமதாஸ்.

✉ கல்யாணத்திற்குப் புடைவைகள் வாங்குவதிலிருந்து, தனிக்குடித்தனம் போவதுவரை அத்தனை அம்சங்களுக்கும் அசத்தலாக யோசனை கூறி அமர்க்களப்படுத்தி விட்டீர்கள். உண்மையிலேயே முதல்முறையாகக் கல்யாணம் செய்யப் போகும் பெற்றோர்களுக்கு இது ஒரு அரிய பொக்கிஷமாகும்.
திருப்பரங்குன்றம், டி.கே. சுப்பிரமணியன்.

✉ அரசு வாகனங்களில் பீச், பார்க், தியேட்டர் என்று கூச்சநாச்சம் பார்க்காமல் குடும்பத்தினருடன் ஊர் சுற்றும் அரசு அதிகாரிகள் மலிந்து கிடக்கும் இந்நாளில், தம் குடும்பத்தினரை அரசுக் காரில் ஏற அனுமதி மறுத்த லால்பகதூர் சாஸ்திரி, மனத்தில் இமயமாய் உயர்ந்து நிற்கிறார்.
மதுரை–14, எஸ். வைத்தியநாதன்.

✉ 'ஊருக்கு ஒரு கஸ்தூரிபா மகளிர் அமைப்பு இருக்கக் கூடாதா?' என்ற ஆதங்கத்தை ஏற்படுத்தியது 'விடிவெள்ளியான வடவள்ளி' கட்டுரை!
நெய்வேலி, சு. சுந்தர்.

✉ பா. ராகவனின் காணாமல் போனவர் பற்றிய அறிவிப்பு – கதையல்ல; காவியம். 'பீடம் இப்போதும் இருக்கிறது. அரசர்கள்தான் மாறிக் கொள்கிறார்கள்' – சாதாரண வரி அல்ல; வைர வரி!
சென்னை-33, ஈரோடு எஸ். ராஜன்.

✉ 'திட்டம் போட்டால் கஷ்டம் இல்லை' என்று திருமண வீட்டாருக்கு நிறைய டிப்ஸ் அள்ளிக் கொடுத்து விட்டீர்கள். இதன் மூலம் நீங்கள் திருமண காண்டிராக்டர்களிடம் வாங்கிக் கட்டிக் கொள்வது உறுதி!
ஆலங்குளம், ஆர். சாலமோன்.

மூன்றாம் பாகம்

விச்வம் என்கிற திருநாமத்தைப் பலநாள் அனுபவித்தோம். விஷ்ணு : என்கிற சப்தத்தை அனுபவித்தோம். அதே சப்தத்தின் விளக்கத்தைத்தான் தொடர்ந்து சொல்லப் போகிறேன்.

விஷ்ணு சப்தமானது விச்வ சப்தத்தை விளக்க வந்த சப்தம். விச்வம் என்றாலும் விஷ்ணு என்றாலும் ஒன்றுதான். பின்னால் வஷட்கார: என்று ஒரு சப்தம் வருகிறது. அதுவும் விஷ்ணுவையே குறிக்கும்.

விச்வமும் விஷ்ணு, வஷட்கார: வும் விஷ்ணு. நடுவிலே இருப்பது விஷ்ணு சப்தம்!

த்ரிமூர்த்திகளிலேயும் பார்த்தால், பிரும்மா, விஷ்ணு, மஹேச்வரர்கள் என்று விஷ்ணுவே நடுவில் வருகிறான்.

பிரும்மாவைப் போய் எல்லா தேவதைகளும் கேட்கிறார்கள் – 'இந்தக் கலியுகத்திலேயும் நரசிம்ஹனை நாம் பிரத்யக்ஷமாகப் பார்க்க வேண்டுமானால், என்ன செய்ய வேண்டும்? என்ன தியானம் பண்ண வேண்டும்? எப்படி தியானம் பண்ண வேண்டும்?...' என்று கேட்கிறார்கள். அதற்கு பிரும்மா பதில் சொல்கிறார் :

32 அக்ஷரம் கொண்ட நரசிம்ஹ மந்திரத்தை எடுத்து, வரிசையாக முப்பத்திரண்டு வாக்கியம் சொல்கிறார். "இந்த முப்பத்திரண்டையும் யார் நித்தியம் அனுசந்தானம் பண்ணுகிறார்களோ, அவர்கள் இந்தக் கலியுகத்திலேயும் நரசிம்ஹனை நேரே பார்க்கலாம். அந்த நரசிம்ஹ தரிசனம் எல்லோருக்கும் கிடைக்கும் – அந்த மந்திரத்தை நல்ல முறையிலே சொல்லக்கூடியவர்கள் எல்லோருக்கும் கிடைக்கும்..." என்று எடுத்துச் சொல்லும்போது பிரும்மா, விஷ்ணு மஹேச்வராள் என்கிற வரிசையில் விஷ்ணு நடுநாயகமாக இருப்பதைச் சொல்கிறார்.

அதே போல் சஹஸ்ரநாமத்தின் முதல் மூன்று நாமாக்களிலும் நடுவிலே இருப்பது விஷ்ணு :

விஷ்ணுசப்தரூபனாய் இருக்கக்கூடிய ஸ்ரீமன் நாராயணன் சஹஸ்ரநாமத்துக்குப் பொருளாக இருக்கக்கூடியவனானதாலே, எதிரேயே கிருஷ்ணனாக உட்கார்ந்து கொண்டு அந்த சஹஸ்ரநாமத்தைக் கேட்கிறான். அவனே ஆனந்தமாய்க் கேட்கக்கூடியது அந்த சஹஸ்ரநாமம்; அதிலே வருகிற விஷ்ணு சப்தம் சர்வ விதத்திலேயும் ஏற்றமுடைய சப்தம்.

மந்த்ர ராஜபத ஸ்தோத்திரத்திலே வருகிறது...

விச்வம் என்று சொல்கிறோமே, அது யார்? விஷ்ணு என்று சொல்கிறோமே, அது யார்? வஷட்கார: என்று சொல்கிறோமே, அது யார்... என்று கேட்டுக் கொண்டே போனால், மூன்றாவது அடியிலேயே அந்த ஸ்தோத்திரத்தில் பதில் வருகிறது. நரசிம்ஹ வடிவினனான ஸ்ரீமான் கேசவ: புருஷோத்தம:

நரம் கலந்த சிம்ஹ ரூபமாக அவதரித்தானே அவன்தான் விச்வம் என்கிற சப்தத்தால் சொல்லப்படுகிறான்; அவன்தான் விஷ்ணு: என்கிற சப்தத்தால் சொல்லப்படுகிறான். அவன்தான் வஷட்கார: என்கிற சப்தத்தால் சொல்லப்படுகிறான்.

ஆகையினால்தான் 'அறிந்தனரெல்லாம் அரியை வணங்கி, அறிந்தனர் நோய்கள் அறுக்கும் மருந்தே...' என்று


நம்மாழ்வார் திருமொழியில் வருகிறது.

நரசிம்ஹனை வணங்கி மஹரிஷிகள், தேவர்கள் மகான்களெல்லாம் அறிந்தனர் – என்னவென்று அறிந்தனர்...? பேராயிரம் கொண்டதோர் பீடுடையான் அவன் என்று.

பகவான் நரசிம்ஹனே விசேஷமான ஆயிரம் திருநாமங்கள் உடையவனாய் இருக்கிறான்.

ஆகையினால்தான் வேத விற்பன்னர்கள் கூட வேத பாராயணம் பண்ணுகிறபோது மந்த்ர ராஜபத ஸ்தோத் திரத்தைச் சொல்லி முடிப்பார்கள்.

வேத விற்பன்னர்கள் நிறைய வேதா க்ஷரங்களை உச்சரிக்கிறார்கள். அக்ஷர



முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

சமூகம் வேதம்.

வேத அத்யயனம் செய்வதென்றால் என்ன...? அக்ஷரக் கூட்டங்களை கிரஹித்தல்.

அக்ஷரக் கூட்டங்கள் என்று ஏன் சொல்ல வேண்டும்? பதக் கூட்டங்கள் என்றோ வாக்யக் கூட்டங்கள் என்றோ சொல்லலாமல்லவா..?

இங்கே வேதாக்ஷரத்துக்குத்தான் ஏற்றம் அதிகம் என்பதால் அப்படிச் சொல்லப்படுகிறது. அக்ஷரம் அக்ஷரமாகக் கோக்கப்படுவதே வேதம். எப்படி மணியை எடுத்து நூலில் கோத்தால் ஹாரமாக அது வருகிறதோ அப்படி அக்ஷரங்களால் கோக்கப்பட்டது வேதம்.

ஸ்வரத்தோடு அந்த அக்ஷரக் கூட்டம் அமைந்திருக்கிறது. அதை உச்சரிப்பதற்கான மாத்ரா காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட அக்ஷரங்களால் ஸ்வரம் மாறாமல், மாத்ரா காலம் மாறாமல் உச்சாரணம் பண்ணினால் அதிலே ஏற்படக் கூடிய பலனைச் சொல்லி முடியாது.

எத்தனை அக்ஷரங்களைச் சொன்னாலும் அத்தனை அக்ஷரங்களும் எம்பெருமான் விஷ்ணுவினுடைய திருநாமங்களே... அவனுடைய திருநாமத்தைச் சொல்லக்கூடியது. அக்ஷரங்களெல்லாம் அவனுடைய நாம வைபவம்தான்.

க்ஷரம் என்றால் அழியக்கூடியது. அக்ஷரம் – அழியாதது.

வேதாக்ஷரங்கள் அனைத்தும் அழியாத பரபிரும்மத்தை நமக்குக் காட்டுகின்றன என்று அர்த்தம். சாஸ்திர ரீதியாகப் பார்த்தோமானால் எல்லாவித சப்தங்களும் அழியும். மஹா பிரளயத்திலே சப்தங்களுக்கெல்லாம் அழிவு உண்டு. ஆனால் வேதாக்ஷரங்களுக்கு மட்டும் அழிவு கிடையாது என்பது சனாதன மத சித்தாந்தம்.

'பிரளய காலத்திலே எல்லாம் அழிகிறதே... அப்போது வேதம் எங்கே இருக்கிறது...?' என்ற கேள்வி வரும்.

வடபத்ர சாயி பகவான், ஆல இலை மேலே படுத்துக் கொண்டிருக்கிறானே... அவன் எல்லாவற்றையும் கிரஹித்துத் தன்னுள் அடக்கி வைத்துக் கொள்கிறான்.

ஆலிலை மேல் துயிலும் பகவான் எப்படியிருக்கிறான்?

ஆல மா மரத்தின் இலைமேல் ஒரு
பாலகனாய்
ஞால மேழும் உண்டான் அரங்கத்
தரவின் அணையான்
கோல மா மணியாரமும்முத்துந்தாமமும்
முடிவில்லதோர் எழில்
நீல மேனி ஐயோ! நிறை கொண்டது
என் நெஞ்சினையே!

– என்கிறார் ஆழ்வார்.

நீலமேனிக்குப் பிறகு பதமே வரவில்லை அவருக்கு! 'என் நெஞ்சைத் திருமேனியே நிறைகொண்டதே – மற்றொன்றை நினைப்பதற்கு இந்த இடத்திலே இடமிருந்தால் தானே!' என்று வியக்கிறார்.

எம்பெருமான் முகுந்தன் சின்னக் குழந்தை. எல்லாவற்றையும் விழுங்கியிருக்கிறது அது! அந்த ஆலமர இலைமேல் படுத்துக் கொண்டிருக்கிறான்.

தனக்குள் எல்லாவற்றையும் அடக்கிக் காக்கிறவன் சிருஷ்டி கிரமத்திலே எல்லாவற்றையும் வெளியே விடுகிறான்.

விசிஷ்டாத்வைதத்தில் இந்த உலகம் அநித்யம் என்று சொல்லப்படுகிறது. உலகப் பொருள் எல்லாம் சத்யம் – உண்மைப் பொருள் – ஆனால் நித்யை இல்லை – என்று சொல்லப்படுகிறது.

உண்மையான பொருள் நாளை இல்லை என்றால் என்ன அர்த்தம்? வேறுவிதமான ரூபத்திலே அது இருக்கிறது என்று அர்த்தம்!

பஞ்சு இருக்கிறது. அதனுடைய அழிவு நூல். நூலினுடைய அழிவு வஸ்திரம், வஸ்திரத்தினுடைய அழிவு நூல்...

அழிவு என்பதற்கு என்ன பொருள் என்றால், இருக்கிற



''என் வீட்டு வேலைக்காரிக்கு ரொம்பத் திமிர்...''

''ஏண்டி, என்ன செஞ்சா?''

''காலையில சீக்கிரம் வரச் சொன்னா, 'கார் அனுப்பு'ங்கறா!''

– இரா. திருமால்

நிலையிலிருந்து மாறுபட்ட நிலை என்பது தேறி நிற்கும்.

இப்போது வேதத்தைப் பாராயணம் பண்ணுகிறோம். பிரளய காலத்தில் அது அழிந்து போய்விடாமல் பகவானே தன்னுள் தரித்துக் கொண்டு மறுபடியும் சிருஷ்டியில் புகுத்துகிறான். நான்முகனைப் படைத்து, அந்த வேதங்களை உபதேசம் பண்ணுகிறான் பரமாத்மா. ஹயக்ரீவ மூர்த்தியாக உட்கார்ந்து வேதத்தை உபதேசம் பண்ணுகிறான். வேதத்தில் எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்கேற்ப சிருஷ்டி கர்மாதிகளை நடத்துகிறான் பிரும்மா.

ஆகையினால் பிரும்மாவுக்குப் பிரமாணம் வேதம்தான்; பரமாத்மாவுக்குப் பிரமாணம் வேதம்தான்; நமக்குப் பிரமாணம் வேதம்தான்.

இப்படி நம்மையும் பகவானையும் சேர்த்து வைக்கக்கூடிய பரம பிரமாணமாகிற தோஷமேயில்லாத, உத்தமமான விஷயம் வேதம். நமக்கு க்ஷேமத்தைக் கொடுக்கக்கூடிய ஒரே பிரமாணம் வேதம்தான்.

இந்த வேதத்தில் எத்தனை அக்ஷரங்களை நாம் சொன்னாலும் அத்தனை அக்ஷரங்களும் பகவானுடைய திருநாமங்களாக இருக்கிற காரணத்தினாலே, பகவானுடைய திருநாமத்துக்கு ஒரு எல்லையில்லை. ஒரு வரையறைக்கு உட்படுத்தி அதைச் சொல்கிறோம் நாம் – சஹஸ்ரநாமம் என்று. அவை பெரும்பாலும் நம் மஹரிஷிகள் வகுத்து, கானம் பண்ணிய திருநாமங்கள்.

இந்த ஆயிரம்தானா அவன் திருநாமங்கள் என்று கேட்டால், இல்லை! எல்லாமும் அவன் திருநாமங்கள். எங்கும் அவன் நிறைந்திருக்கிறான்.

பசுவினுடைய உடல் முழுவதிலும் பால் இருக்கிறது. ஆனால் மடியிலிருந்து தான் வெளிப்படுகிறது. அதைப் போல் அந்த ஆயிரம் திருநாமங்கள் மகான்களின் வாக்கில் வெளிப்பட்டவை.

அவற்றுள் நடுநாயகமானது விஷ்ணு.


(தொடரும்)

அருள்வாக்கு

ஒரு பணக்காரனுக்கும் தன்னைவிடப் பணம் படைத்த ஒருத்தனைப் போல் தானும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது; ஆடம்பரத்துக்கும், டாம்பீகத்துக்கும் ஊதாரித்தனமாகச் செலவழித்துக் கடன்படுகிறான். உலகத்தில் பணக்காரனுக்குத்தான் ஜாஸ்திக் கடன் இருக்கிறது. இது விசித்திரமாக, வேடிக்கையாகத் தோன்றினாலும் வாஸ்தவ நிலை இதுதான்– ஏழைகள் எத்தனையோ பேர் கடன் இல்லாமல் இருக்கிறார்கள். பணக்காரர்களில் கடன் இல்லாமலிருப்பவர்கள் துர்லபமாகத்தான் இருப்பார்கள். போலி அந்தஸ்தை விட்டால் அவனுக்கு இத்தனை செலவு, கடன் இருக்கவே இருக்காது. லோகத்தில் எத்தனையோ பேர் கஷ்டப்படுகிறபோது நாம் இத்தனை டாம்பீகங்கள் செய்வது நியாயமா என்று அவரவரும் கேட்டுக் கொண்டு, செலவை தர்ம நியாயமாகக் கட்டுப்படுத்திக் கொண்டால் எத்தனையோ தான தர்மம், பரோபகாரம் செய்யலாம். லோகத்தில் ஒருத்தருக்கும் சாப்பாடு இல்லை, துணி இல்லை என்கிற குறையில்லாமல் செய்து விடலாம். இப்போது செய்கிற டாம்பீகத்தால் ஒரு நாளும் பெற முடியாத ஈசுவரானுக்கிரகத்தையும் இந்தப் பரோபகாரத்தினால் பெற்றுவிட முடியும். ஏழைதான் என்றில்லை, பணக்காரனும்கூட, 'இந்த வஸ்து நமக்குத் தேவைதானா? இது இல்லாவிட்டால் பிராணன் போய் விடுமா? இது இல்லாமல் ஜீவிக்க முடியாதா? நம் அப்பாவும் தாத்தாவும் இது இல்லாமலே சௌக்கியமாக இல்லையா?' என்று அவ்வப்போது கேட்டுக் கொண்டு செலவழிப்பதில் கணக்காயிருக்கணும். இப்படிச் செய்தால் கொடுப்பதில் கணக்கில்லாமலிருக்க முடியும். எடுக்க எடுக்க ஊற்றில் ஜலம் வருகிறமாதிரி, கொடுக்கக் கொடுக்க மகாலக்ஷ்மியின் அனுக்கிரகம் மேலும் வளரும்.



— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.



இரண்டு நாளாகவே மருமகளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வேலை இருந்ததால் வித்யாவைப் பார்க்க முடியாமலே போய் விட்டது. இன்றுதான் போய்ப் பார்க்கக் கூடிய வாய்ப்பு அமைந்தது. இன்று விடுமுறை தினம். பெரிய வேலை என்று ஒன்றும் இல்லை... பார்வதியையும் அழைத்துக் கொண்டு போகலாமோ என்று யோசித்தேன். பிறகு அது சரியாய் இருக்காது என்று தோன்றியது.

மருமகள் வித்யாவை இன்னும்கூட கரித்துக் கொட்டிக்கொண்டு இருப்பதை பார்வதி விடவில்லை. 'அவ வந்த நேரம். எம் புள்ளையையே பறிகொடுத்துட்டு நா நிற்கிறேன். அவளைப் போய் வேற பார்க்கணுமா? ஜாதகம் எல்லாம் ஒழுங்காத் தானே பார்த்தீங்க. அம்சமான ஜாதகம்னு சொன்னீங்க, அந்த பீடை பிடிச்சவளோட ஜாதகத்தை' என்பாள். அதோடு என்னையும் போக விடாமல் தடுத்து விடுவாள். மனிதன் அறிந்தே செய்யும் தவறுகளுக்கு ஜாதகம் என்ன செய்யும்?





மருமகள்

யோகி

"வெளியே போறேன் – பார்வதி" என்று சொல்லி விட்டுக் கிளம்பினேன். மருமகள் வித்யாவை நினைத்தால் – மனசில் சோகம் பொங்கிப் பொங்கி வழிகிறது. அனாவசியமான பந்தத்தைக் கொடுத்து – இன்று அந்தப் பெண்ணின் வாழ்க்கையை நான் நிர்மூலமாக்கி விட்டேனோ என்று தோன்றியது.

எல்லாம் நடந்து இரண்டு மாதம் முடிந்து விட்டது. ஆனால் நேற்று நடந்தது போல் இருக்கிறது. மகன் ஏதோ கள்ளச் சாராயத்தைக் குடித்துவிட்டு, உயிருக்கு போராடிக் கொண்டிருந்ததும், வித்யா அழுது புலம்பிக் கொண்டிருந்ததும்… வித்யாவுக்கு வேண்டு மென்றே வஞ்சனை செய்து விட்டோமோ என்று தோன்றியது. அவள் நல்ல பெண். அவளுக்கு எந்தவிதத் திலாவது – என் மகன் சுந்தர் ஈடாவானா? கெட்டு குட்டிச்சுவராய் நின்றவனுக்கு அல்லவா வித்யாவை மணம் முடித்தது. எனக்கும் இரண்டு பெண்கள் இருந்தார்கள். கல்யாணம் என்று வந்தபோது, எத்தனை பேரிடம் விசாரித்து, எப்படியெல்லாம் பார்த்துப் பார்த்து பெண்களை கட்டிக் கொடுத்தேன். ஏன் இத்தனை அக்கறை? போகிற இடத்தில் பொண்ணுங்க நல்லா இருக்க வேண்டும் என்றுதானே… அதே மாதிரிதானே, எம் பையனுக்கு பொண்ணு கொடுக்கப் போகிறவரும் நினைப்பார். கல்யாணமானால் எல்லாம் சரியாகி விடும். சொன்ன பேச்சுக் கேட்டு, குடும்ப பாரத்தைச் சுமப்பான் என்று நினைத்துத்தானே வித்யாவைக் கட்டி வைத்தது. அது எவ்வளவு பெரிய அயோக்கியத்தனம்.

எதுவுமே நினைத்தபடி நடக்கவில்லை. எப்போதும் போலவே இருந்தான். முன்பு எங்களோடு சண்டை போட்டுக் கொண்டிருந்தான். பிறகு மனைவியிடம் சண்டை போடத் துவங்கினான். அவள் ரொம்ப அப்பிராணிப் பெண். வாயில்லாப் பூச்சி. அப்போதே தோன்றியது. 'இவள் இருக்க வேண்டிய இடம் இதுவல்ல… யாருடைய துரதிருஷ்டமோ இங்கு வாழ்க்கைப்பட்டு விட்டாள்' என்று. 'மாமா… மாமா' என்று அத்தனை பிரியத்துடன் பேசுவாள். அன்பைக் காட்டவே பிறவி எடுத்த மாதிரியான பெண். அப்படிப்பட்டவள், அன்பையெல்லாம் எங்கோ தொலைத்து விட்ட ஒரு குடிகாரனுக்கு வாழ்க்கைப் பட்டு…

ஒரு சமயம் கோபித்துக் கொண்டு போய்விட்டாள். அவள் வீட்டில் விரட்டியடிக்காத குறையாக இழுத்து வந்து விட்டார்கள். அங்குள்ள குடும்பச் சூழல் அப்படி. அவளுக்கு இங்கும் அன்பான கணவன் இல்லை. அதனாலேயே அவள் மீது அன்பும், அக்கறையும் பெருகுகிறது.

ஒருநாள் அவனது குடிப்பழக்கம் பற்றித் திட்டிவிட்டு படுக்கப் போனேன். விடியற் காலையில் வித்யாவின் அலறல் சப்தம். போய்ப் பார்த்தால், சுந்தர் பேச்சுமூச்சற்றுக் கிடந்தான். ஆஸ்பத்திரிக்கு அவசர அவசரமாய்க் கொண்டு போயும் பிரயோஜனமில்லை. கள்ளச் சாராய விஷம் அவனை பலிகொண்டு விட்டது. கல்யாணமான நாலாவது மாதமே, மருமகளுக்கு இப்படியொரு அலங்கோலமான வாழ்க்கை… இப்படியான வாழ்க்கை வாழத்தானா, அத்தனை கனவுகளுடன் கல்யாணம் செய்து வைத்தது?

இவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்காமல் இருந்திருக்கலாம். ஒரு பெண்ணின் வாழ்க்கையாவது நாசப்படாமல் போயிருக்கும். இங்கேயே இருக்கும்படி சொன்னோம். வித்யாவுக்கு விருப்பம் இருந்தது. ஆனால் அவள் பெற்றோருக்கு விருப்பம் இல்லை. கூட்டிக்கொண்டு போய் விட்டார்கள். வித்யாவின் பெற்றோருக்கு, என் மீது கடுமையான கோபம். கோபம் இருக்கத்தானே செய்யும்!

இரண்டு மாதத்துக்கு மேலாகி விட்டது. மருமகள் எப்படி இருக்கிறாளோ… பார்க்கத் தோன்றியது. இரண்டு பெண்களையும் உள்ளூரில்தான் கட்டிக் கொடுத்து இருக்கிறது. பெண்களை வாரத்திற்கொருமுறையாவது பார்க்க

வேண்டும் எனக்கு. இனி மகன்களோடு - மருமகளும். மருமகள் எப்படி இருக்கிறாளோ... அவள் சமீப நாட்களாய் ஒரு கார்மெண்ட்ஸில் வேலைக்குப் போவதாய்ச் சொன்னார்கள். கல்யாணத்துக்கு முந்தி, அங்குதான் வேலை பார்த்தாள். அவள் கல்யாணத்துக்கு வாங்கின கடனை இன்னும் அடைக்கவில்லையாம்... இப்போது வேலைக்குப் போய் வித்யாவே அடைப்பதாய்க் கேள்விப்பட்டேன். இருபத்தியொரு வயதேயான அவளது வாழ்க்கை நாளை எவ்விதம் இருக்கப் போகிறதோ?

அவர்கள் வீடு இருந்த ஸ்டாப்பில் இறங்கினேன். ஸ்டாப்பில் இருந்த பலகாரக் கடையில் ஸ்வீட்டும், காரமும் வாங்கிக் கொண்டேன். அவள் வீட்டில் குழந்தைகள் ஜாஸ்தி. வித்யாவுக்கு ஸ்வீட் என்றால் பிடிக்கும். இரண்டு மாதமாய் யாரையுமே பார்க்கவில்லை.

வீடு இருந்த அந்தத் தெருவுக்குள் நுழைந்தேன். முதன் முதலாய் நான், பார்வதி, மகன் - மூவருமாய்ப் பெண் பார்க்கச் சென்ற நாள் ஞாபகத்திற்கு வந்தது. இந்த அசிங்க வாழ்க்கைக்குத்தானா - அத்தனை ஆர்ப்பாட்டம்... அவர்களை எப்படிச் சந்திப்பது என்ற தயக்க மனதுடன்தான் நடந்தேன்.

வீடு வந்து விட்டது. ஒரு குழந்தை வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்தது. மருமகளின் கடைசித் தங்கை. எட்டு வயதிருக்கும். என்னை அடையாளம் தெரிந்திருக்க வேண்டும். 'தாத்தா வந்திருக்கு' என்று உள்ளே ஓடியது.

வாசலில் நின்றேன். பெரியவர் எட்டிப் பார்த்தார். வித்யாவின் அப்பாதான். எதுவும் பேசவில்லை. 'வாங்க...' என்றும் அழைக்கவில்லை. இது எதிர்பார்த்த ஒன்றுதான். இவர்களின் மரியாதையை எதிர்பார்த்து வரவில்லையே. மருமகளைப் பார்க்கத்தானே வந்தது. உட்காரவும் சொல்லவில்லை. அவர்களின் சோகம் அவர்களுக்கு.

''வித்யா வேலைக்குப் போயிருக்காளா? மருமகளை ஒரு எட்டு வந்து பார்த்துட்டுப் போலாம்னு வந்தேன்!'' என்றேன்.

''அங்க வைச்சு அவளை இம்சை பண்ணினது போதாதுன்னு, வீடு தேடி வந்து இம்சை பண்ணணுமா?'' என்றார் பெரியவர். சற்று கோபத்துடன், சப்தத்துடன்தான் பேசினார்.

வித்யா சப்தம் கேட்டு வந்தாள். லேசான மலர்ச்சி. ''வாங்க மாமா. எப்போ வந்தீங்க? சௌக்கியமா? அத்தை சௌக்கியமா? கலா, ஹேமா எல்லாரும் நல்லாயிருக்காங்களா?'' என்று எல்லோரையும் விசாரித்தாள், அவளது வாழ்க்கையைக் கொன்ற பாவியான என்னிடம்!

என்னவோ தெரியவில்லை. பெருக்கெடுத்து வந்த அழுகையை அந்தக் கணத்தில் அடக்க முடியவில்லை.




பச்சைத் தேயிலை மகிமை!

பச்சை டீ இலையைக் கொண்டு டீ போட்டுக் குடிப்பது புற்றுநோய்க்குச் சிறந்த மருந்து என, "Western Reserve University School of Medicine" ஆராய்ச்சிச் செய்தி கூறுகிறது.

தகவல்: The People Weekly

தொகுப்பு:
செ. ரமேஸ் நாயுடு



பரீட்சை எழுதிப் பரிசு பெறுவோர்!

20.12.98 இதழில் வாசகர்களுக்கு ஒரு பரீட்சை வைத்தோமல்லவா! அதை ஆசையுடன் எழுதிய ஆயிரக்கணக்கான வாசகர்கள் ஐம்பது பேர் கல்கி நூற்றாண்டு விழா முத்திரை பதித்த சங்கின் டைரி பரிசு பெற்றார்கள். சிறந்த ஒரு வரி விமர்சனத்துக்காக அமரர் கல்கியின் தியாகபூமி நாவலைப் பரிசாகப் பெறும் பத்துப் பேர் பட்டியல் இதோ :

1. மனித வள நிலம் உழுது, மொழிச் செழுமை உரமிட்டு, மனச் செழுமை வித்திட்டு வாரந்தோறும் மலரும் இதழ்.

– **கமலா வெங்கட்ராமன்**, 58/2, மதுரம் அபார்ட்மெண்ட்ஸ், மதுரம் காலனி, புத்தூர், திருச்சி - 17.

2. ஒரு பிரச்னையோடு கல்கியைக் கையிலெடுத்து உட்கார்ந்தால், ஏதேனும் ஒரு பக்கத்தில் யோசனை அல்லது தீர்வு இருக்கும்.

– **ச. நாகரத்தின்**, 47, அன்னை சத்யா காலனி, பூலுவப்பட்டி அஞ்சல், திருப்பூர் - 641 602.

3. ஆன்மிகம், கலை, இலக்கியம், தேச பக்தி, தமிழ் உணர்வு இவற்றுடன் பண்பாடு மறவாத ஒரே இதழ்.

– **கே. சுப்பிரமணியன்**, 272, விஜயா மெடிகல்ஸ், முத்துப்பேட்டை - 614 704.

4. எந்த வயதினரும் படிக்கக்கூடிய, தரமும் நடுநிலையும் நாடும் நல்லிதழ்.

– **திருமதி எஸ். ராஜம்**, இ.எல். 91, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம், காந்தி கிராமம், கரூர் - 639 004.

5. சமூகப் பொறுப்புடன் தரமான விஷயங்களை நிறைவாக வழங்கிடும் செய்தி இதழ்.

– **எல்.என். கிருஷ்ணன்**, 21, சத்திரம் தெரு, தர்மபுரி - 636 701.

6. சில முட்கள் குத்தினாலும் நான் விரும்பும் ரோஜா!

– **எஸ். கார்த்திகேயன்**, சிவா மெடிகல்ஸ், சேலம் மெயின் ரோடு, முசிறி - 621 211.

7. கட்சி சார்பின்றி உண்மையை வெகு துணிச்சலுடன் கூறும் இதழ்.

– **எஸ். பாலகிருஷ்ணன்**, ஸ்ரீ புவனேஸ்வரி டைப் சென்டர், 67, கோட்டை மெயின் ரோடு, நாமக்கல் - 637 001.

8. நட்சத்திரங்களின் நடுவே முழு நிலா!

– **சாமி சுப்ரமணியம்**, (ஆட்டோ ஓட்டுனர்), 59/4, புது ரோடு (C/o. மகாலட்சுமி அக்ரோ எலக்ட்ரிகல்ஸ்), பொள்ளாச்சி - 642 002.

9. அரசியல் செய்திகளில் காரம் அதிகம்; பொழுது போக்கு அம்சங்களில் சாரம் குறைவு!

– **ஆர். முரளிதரன்**, 1-77, வீர ஆஞ்சநேயர் கோயில் தெரு, அம்மையப்பன் - 613 701.

10. எழுத்தில் தரம், கருத்தில் தெளிவு!

– **பி. தர்மராஜ்**, 33, ரிசர்வ் பாங்க் காலனி, சாஸ்திரி நகர், எம்.ஜி. சாலை, சென்னை - 600 041.

புத்தகப் பரிசுகள் பதிவுத் தபாலில் அனுப்பப்படுகின்றன.

வென்றவர்களுக்கு வாழ்த்துகள்!

பங்கேற்றவர்களுக்கு நன்றி


— ஆர்.

படம் : **இதயா**

'நைஸ்'ஸிலிருந்து நிதானமாக ஒன்பது மணிக்குத்தான் கிளம்ப வேண்டும் என்றிருந்ததால், நாங்கள் நைஸாக நழுவி அக்கம் பக்கத்தை ஒரு ரவுண்டடித்தோம்.

முதன் முதலாகச் சில காய்கறிகள் கண்ணில் பட்டன; சிவப்பு நிற காலிஃப்ளவர்! முட்டைகோஸ், முள்ளங்கி எல்லாம் பூதாகரமாய் அழுக்கு நிறத்திலிருந்தன. மலை போல் பூசணிக் குவியல். ஏதோ உதவி நிதி சேர்க்க பூசணி ஏலமாம்!

வரிசையாகக் கடைகள் தாம்; ஒரு ஊதாப்பூ நிற ஸ்வெட்டர் கவர்ந்திழுத்தது. கடைக்காரர் ஓடி வந்து, "ஸேல் போட்டிருக்கிறது பாருங்கள்'' என ஃப்ரெஞ்சில் குழைந்து அழைத்துச் சென்றார். இங்கே தான் 50 ஃப்ராங்க்குகளுக்கு (300 ரூபாய்) நல்ல உடைகள் கிடைத்தன. இந்த விஷயத்தை நாங்கள் ஒலிபரப்ப, ஏனைய இந்தியர்கள், இந்தோனேஷியர்கள், ஜப்பானியர்கள் அனைவரும் கடையை முற்றுகையிட்டு, எக்கச்சக்கமான துணிகளை வாங்கிக் குவித்தனர்.



• நைஸ்

மரியா எல்லோரையும் தி(வி)ரட்டிக் கொண்டு, ஒரு வழியாக பஸ் கிளம்பும் தருவாயில், முதன் முதலாக ஒரு சிறு சச்சரவு. ஸ்பானிஷ் இளைஞன் தவறான இடத்தில் உட்கார்ந்து கொண்டு, புனா ஜோடியை அலைக்கழித்தான். கடைசியில் மரியா ஓர் அதட்டலில் (பிரிட்டிஷ் டிஸிப்ளின்) அவனைக் கிளப்பினார்!

ஃப்ரான்ஸின் தெற்கு எல்லையிலிருந்து வடக்கிற்கு, பாரீஸை நோக்கிய நீண்ட பயணம். அதுவரை, ஃப்ரான்ஸைப் பற்றிய அறிமுகத் தகவல்களை, வழக்கம் போல் மரியா இடைச் செருகினார்.

"25 மாநிலங்கள், 96 இலாகாக்களாக வகுக்கப்பட்டுள்ள ஃப்ரான்ஸின் ஒவ்வொரு பகுதியும் ஒரு மனோகரமான அற்புதம். கலை, கலாசாரம், விஞ்ஞானம், பொருளாதாரம் எனப் பல துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள நாடு இது. திராட்சை, பீச்சஸ், ஏப்ரிகாட்ஸ் என்ற விவசாயச் செழிப்பு-தரத்தில் உயர்ந்த 'ஒயின்' தயாரிப்பதில், உலக அரங்கில் முதலிடம் ஃப்ரான்ஸுக்குத்தான்.

போக்குவரத்திலும், உலகப் புகழ் பெற்ற, தன்னிகரற்ற வேகத்தில் பறக்கும் இதன் **TGV** ரயில்கள், மெடிட்டரேனியன் நாடுகளுக்கே ஒரு வரப்பிரசாதம். கார் தயாரிப்பிலும் மூன்று 'பெத்த' பெயர்கள் ஃப்ரான்ஸுக்குச் சொந்தம்.

வடமேற்கில்

• ட்ராஃபிக் ஜாமிலும் ஒழுங்கு...



16

'நைஸா'க ஒரு ட்ரிப்!

ஜெயஸ்ரீ ராஜ்

ஃப்ரான்ஸையும் பிரிட்டனையும் பிரிக்கும் 'இங்கிலீஷ் கால்வாய்' குறுகலானது போல், ஃப்ரெஞ்சுக்காரர்களுக்கு ஆங்கிலேயர்கள் மீது குறுகிய கண்ணோட்டம்தான்! ஒரு காலத்தில் ஆங்கிலத்தை அடியோடு வெறுத்தவர்கள், இப்போது டூரிஸம் வாயிலான வருமானத்தை ஒட்டி, ஆங்கிலமும் கற்று வருகின்றனர். ஆனாலும் மொழிப் பற்று சற்றும் குறைந்தபாடில்லை!

குளுகுளு சூழலுக்கு மேற்கில் அட்லாண்டிக் மகாசமுத்திரம், தெற்கில் மெடிட்டரேனியன் கடல்; சமயத்தில் 'மிஸ்ட்ரா' என்ற வினோதக் காற்று வீசுமாம்! ஆல்ப்ஸ் மலைத் தொடர், நாட்டின் கிழக்குப் பகுதியில் காணப்படுகிறது.

கொஞ்சம் சோம்பேறித்தனம், நிறைய கலையார்வம் கொண்ட மக்கள். தங்கள் காரின் 'சைஸை'க் காட்டிலும் சிறிதான இடத்தில் 'பார்க்' செய்து, போக்குவரத்து நெரிசலை உண்டாக்குவது, இந்நாட்டின் 55 மில்லியன் மக்களுக்கும் அல்வா சாப்பிடுவது போலாம்!



1799ல் தம்மைச் சக்கரவர்த்தியாக அறிவித்துக் கொண்ட நெப்போலியன் போனபார்ட்டை பிரிட்டன், ஆஸ்ட்ரியா, ரஷியா மூன்றுமாக சமாதி கட்டி விட்டாலும், இன்றளவும் ஃப்ரெஞ்சுக்காரர்களின் 'பாப்புலர் ஹீரோ' அவர்தான்! நான்கில் ஒரு தெருவுக்கு அவர் பெயர்!

ஃப்ரான்ஸின் சரித்திரத்தைப் பெரும்பாலும் தங்கள் பெயரின் பின் விதவிதமான எண்களைக் கொண்ட ஹென்றிகளும், லூயிகளும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். ஊதாரித்தனத்துக்கு ஒரு லூயி 14 என்றால், மனைவிப் பட்டாளத்துக்கு லூயி 15; மேரி அன்டாயினட்டை மணம் புரிந்து, மக்களை அலட்சியப்படுத்திய மன்னன் லூயி 16; அவர் காலத்தில்தான் ஃப்ரெஞ்சுப் புரட்சி வெடித்தது. கிலடின், முடியாட்சிக்கு ஒரு முடிவு கட்டியது. கிட்டத்தட்ட 20,000 தலைகள் உருண்ட இடமான 'ரெவல்யூஷன் ஸ்கொயர்' இன்றளவும் அந்த நினைவுகளைப் பிரதிபலிக்கிறது! "Liberty, Equality and Fraternity" என்ற தாரக மந்திரம் பிறந்த மண்ணும் இதுதான்.

இன்று ஏழு வருடங்களுக்கொரு முறை ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் பிரதமரை நியமிக்கிறார். பொருளாதார ரீதியில் ஏழாவது இடத்தை வகிக்குமளவுக்கு உலக அரங்கில் வளர்ச்சி பெற்றுள்ளது ஃப்ரான்ஸ்!

ஃப்ரான்ஸைப் பற்றி அசை போட்ட



"'ஐயாவை வீட்டுக்குள்ள போகச் சொல்லுங்க, அப்புறம் காய்கறி விலை சொல்றேன்'னியே, ஏன்?"

"ஐயாவுக்கு ஹார்ட் வீக்னு கேள்விப்பட்டேன்... அதான்!"

– வி.எஸ். கணேசன்

வாறே, மதிய உணவுக்கு ஓரிடத்தில் நிறுத்தினார்கள்; ஐரோப்பா முழுதும் முழங்கும் 'வேஃபர்ஸ்' (நம் உருளைக் கிழங்கு வறுவல்தான்), ஒரே சைஸில், நடுவே சற்றே குழி விழுந்த வட்ட வடிவத்தில் எப்படித் தயாரிக்கிறார்கள் என்று இங்கே பார்க்க முடிந்தது. மெஷின்தான் சீவித் தள்ளுகிறது; அதை 'அவன்' போன்ற ஒன்றில் சூடாக்கி, பிறகு பெரிய கடாய்களில் பொரித்து விடுகிறார்கள் நொடிப் பொழுதில். பத்து நிமிடங்களுக்கு எண்ணெய்யை நன்றாக வடிகட்டி உலர வைப்பதில், சுட்ட அப்பளம் போல் உலர்ந்து விடுகிறது; சுவையோ அபாரம்!

ஃப்ரான்ஸில் எல்லா இடத்திலும் அரிசிச் சோறும், ஃபெரஞ்சு ஃப்ரைஸூம் (நம்மூர் ஃபிங்கர் சிப்ஸ்தான்), வெங்காய ஸூப்பும் தங்கு தடையின்றிக் கிடைக்கின்றன. பொதுவாகவே, ஐரோப்பாவில் எல்லா இடங்களிலும் முதலில் 'பில்'லைப் போட்டு வாங்கிக் கொண்டு, அதன் பிறகு நமக்கு வேண்டியதை நாமே எடுத்து வந்து சாப்பிடுவது உசிதம்; டேபிளில் உட்கார்ந்து ஆர்டர் செய்தால், இரண்டு மடங்கு தண்டம் அழ வேண்டி வரும்!

ஒரு வழியாக மாலை "லையான்ஸை" (Lyons) அடைந்தோம். அந்தக் காலத்து மாளிகை போன்ற பிரிஸ்டல் ஹோட்டல். பெரிய பியானோவும் பூதாகர சாண்டிலியர்களும் வரவேற்றன.

மறுநாள் காலைதான் தீபாவளி; (ஷவரில் கொட்டிய) 'ரைன்' ஸ்நானத்தையே கங்கா ஸ்நானமாக பாவித்துக் கொண்டோம்; சுற்றுலாவில், முதன் முதலாக புடைவை உடுத்திக் கொண்டேன்; தாய் வீட்டிலிருந்து வந்திருந்த இளம் பச்சை 'நல்லதங்காள்' ஸ்பெஷல்!

"க்ரேஸ் ஃபுல்", "எலிகண்ட்" என்று மேற்கத்தியர்கள் ஒவ்வொருவரும் அதைச் சுற்றி வந்ததைப் பார்த்த பிறகு, 'அடடா! முதல் நாளிலிருந்தே புடைவை கட்டிக் கொண்டிருக்கலாமே என்று தோன்றி விட்டது! (எல்லாம் கொஞ்ச நேரத்துக்குத்தான்; குளிரில் கால்கள் குச்சுப்புடியைத் துவங்கிய பின் தானே ஜீன்ஸ் அருமை புரிகிறது?)

ஒரு அமெரிக்கப் பெண்மணி மட்டும் என்னருகில் வந்து, புடைவைத் தலைப்பை எடுத்து, சுற்றிப் போர்த்திவிட்டாள். இதென்னடா இவள், ஸ்லீவ்லெஸ்ஸையும், ஸ்கர்ட்டையும் போட்டுக் கொண்டு, நமக்குச் சுற்றுகிறாளோ என்று ஒரே ஆச்சர்யமாயிருந்தது. காதருகே கிசுகிசுப்பாக, "பெண்கள் இடுப்பைக் காட்டுவதை நளினமாக நாங்கள் கருதுவதில்லை; இந்த அருமையான ட்ரெஸ்ஸின் அழகை ஏன் கெடுக்க வேண்டும் என்றுதான்..." என்றாளே பார்க்க வேண்டும்! அதன் பிறகு போர்த்திய போர்வைதான். ('என்ன இது? நம்மூர்ல கூட இவ்ளோ அடக்க ஒடுக்கமாயிருந்ததில்லையே? குளிர் தாங்கலையோ?"

"சீச்சி...இந்தியப் பண்பாட்டை சரியா பிரதிபலிக்க வேண்டாமா?")

காலையில் "Veaune" என்ற புராதன நகரில் ஒரு 'ஹால்ட்'! அங்கிருந்த பழைமையான 'சர்ச்'சில்தான் அன்று எங்களுக்குக் கோயில் தரிசனம்! பக்கத்திலிருந்த கடையில், சர்க்கரை தோய்த்த பெரிய ஆரஞ்சு மிட்டாய்களை வாங்கி, எல்லோருக்கும் வழங்கி, "இன்று தீபாவளி" என்றபோது, எல்லோருமே சந்தோஷத்துடன் கையைக் குலுக்கோ குலுக்கென்று குலுக்கித் தீர்த்தார்கள்.

அமெரிக்காவிலிருந்து வந்திருந்த வேறொரு சுற்றுலாக் குழுவில், இரண்டு பெங்களூர்க்காரர்கள், புடைவையைக் கண்டு, ஓடோடி வந்து, "ஹாப்பி தீபாவளி" சொன்னது நெகிழ்ச்சியாயிருந்தது.

மதிய உணவுக்கு ஒரு ஆப்பிள், சில வகை பிஸ்கட்கள், லோ கலோரி ஐஸ்க்ரீம் – இதுதான் தீபாவளி விருந்து!

மாலைப் பொழுதின் மயக்கத்தில், பாரீஸைத் தொட்டோம்! வரவேற்றது ஒரு மாபெரும் டிராஃபிக் ஜாம்!

(தொடரும்)

வெளியூர்க் காசோலை விரைந்து பணமாகாதது?



சென்னையில் சேமிப்பு வங்கிக் கணக்கு இருந்தாலும், வேறு நகரங்களிலிருந்து அந்தக் கணக்கில் பணம் போட, எடுக்க முடியும்; இருபத்தி நான்கு மணி நேர வங்கிச் சேவை, காசோலையை செலுத்தினால் அதிகபட்சம் மூன்றாம் நாள் கணக்கில் பணம் - இப்படிப் பல சேவைகளைச் செய்து வாடிக்கையாளர்களைக் கவர்கின்றன சில தனியார் வங்கிகள்.

ஆனால் நமது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளோ நவீன தகவல் தொடர்புகளைப் பயன்படுத்தாமல், இன்னமும் அதே புராதன முறைகளில் சேவைகளைத் தொடர்கின்றன. உதாரணமாக வெளியூர்க் காசோலையை வங்கியில் போட்டால் அது பணமாகப் பதினைந்து, இருபது நாட்கள் ஆகின்றன. இதனால் வியாபாரிகளும், சிறு தொழில் அதிபர்களும் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. வெளியூர் செக் காசாக ஏன் இவ்வளவு தாமதம்? அதைத் தவிர்த்து மிகக் குறுகிய காலத்தில் வெளியூர் செக் பணமாக மாற வங்கிகள் ஏற்பாடு செய்யுமா? இந்தக் கேள்விகளை இந்தியன் வங்கித் தலைவரும், நிர்வாக இயக்குனருமான டி.எஸ். ராகவன் முன் வைத்தோம்!

"உங்கள் கேள்வியில் உள்ள நியாயத்தை நான் மறுக்கவில்லை. முதலில் ஒரு சின்ன திருத்தம். தனியார் வங்கிகள் சிறப்பான சேவை செய்வதாகச் சொன்னீர்கள். நீங்கள் சொல்லுகின்ற தனியார் வங்கிகள் என்பது சமீபகாலமாக செயல்படத் துவங்கியிருப்பவை. நீண்ட காலமாக நமது நாட்டில் செயல்பட்டு வரும் தனியார் வங்கிகளை விட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் சேவை சிறப்பாக இருப்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

"வெளியூர்க் காசோலைகளை விரைவில் பணமாக்க இந்தியன் வங்கியைப் பொறுத்த மட்டில் பல ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது; செய்ய இருக்கிறது. உதாரணமாக Expressway என்று ஒரு திட்டம். கம்ப்யூட்டர் தகவல் தொடர்பு மற்றும் கூரியர் சர்வீஸ் உதவியுடன் நடக்கும் இந்தத் திட்டத்தில் வெளியூர் செக் ஆறாவது நாளில் காசாகிறது. சென்னை, மும்பை, பெங்களூர் உட்பட பதின்மூன்று மையங்களில் இந்த வசதி இருக்கிறது.

"நீங்கள் சொல்லும் தனியார் வங்கிகளுக்கும் எங்களுக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் கிளைகள் வடுகப்பட்டியிலும் இருக்கும். வாரணாசியிலும் இருக்கும். ஆனால் தனியார் வங்கிகள் மெட்ரோக்களில் மட்டும்தான் இருக்கின்றன. அதனால் கம்ப்யூட்டர் on line தொடர்பு சுலபமாக இருக்கிறது. ஆயிரக்கணக்கான கிளைகளைக் கொண்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை on line செய்வது தற்போதைக்குச் சாத்தியமாக இல்லை. அடுத்து, இந்த Expressway திட்டத்தில் நாங்கள் வாடிக்கையாளரிடம் வசூலிப்பது அதிகபட்சமாகவே இருபது ரூபாய்தான். காரணம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மக்கள் பணியில் முழுவதுமாகத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவை. லாபநோக்கு என்பது இரண்டாம் பட்சம்தான். ஆனால் தனியார் வங்கிகள் சர்வீஸ் சார்ஜாக வசூலிப்பதை நீங்கள் விசாரித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

"Express wayஐ விட இன்னமும் மிக விரைந்து செயல்பட ஒரு திட்டம் உருவாகிக் கொண்டிருக்கிறது. தென்னிந்தியாவில் எந்த ஒரு முக்கியமான நகரத்திலும் பெறப்படும் காசோலை, வேறொரு நகரத்தில் மற்றொருவர் கணக்கில் போடப்பட்டால் மூன்றாவது நாளே பணமாக மாற்றும் திட்டம் இது. இது பற்றிய விவரங்களை நான் இப்போது சொல்வது சரியாக இருக்காது. வாடிக்கையாளர்களின் சிரமங்களைக் குறைக்க எல்லாவித முயற்சிகளையும் நாங்கள் மேற்கொள்வோம் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்!"

சந்திப்பு: **ஸ்ரீநிவாசன்**

சாயங்காலம் வழக்கமான ஆபீஸ் நேரத்தை விட அரைமணி நேரம் முன்னதாகவே வீட்டிற்குக் கிளம்பியாயிற்று.

இன்று மத்தியில் ஆளுங்கட்சியை எதிர்த்து விலைவாசி உயர்வைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் ஆதரவோடு யூனியன்கள் நடத்தும் பந்த்.

ஆட்டோ, பஸ், ரயில் எல்லாம் வன்முறைக்கு பயந்தோ, கோரிக்கைகளை ஏற்றோ ஒத்துழைக்க, வாகன வசதி உள்ள சிலர் மட்டும் அலுவலகத்தில்.

ஜாலியும் சிரிப்புமாய்க் கழிந்தது நேரம். வழியில் சில தலைவர்கள் வழி மறித்தபோது வரதராஜனின் கோபமான பதிலால் அவர்கள் விலகிக் கொண்டனர்.

"யார் ஆட்சிக்கு வந்தாலும் லஞ்சமும் ஊழலும் ஜாதி அரசியலும் இருக்கிற வரை விலைவாசி குறையப் போறது கிடையாது. இந்த பந்த் ஒரு ஸ்டண்ட்..."

"இல்லை தோழர். நீங்க யூனியன்ல முக்கியமான ஆளு. மேலிடத்துல இருந்து ஒரு கட்டளை வரும்போது கேட்கறதுதானே முறை. லேகூஸ் கூட வரலை..."

"கொள்கை அளவுல நான் பந்துக்கு எதிரி. அரசு ஆதரவு தர்றது அதை விட அப்த்தம். மேலிடம் தற்கொலை செய்து கொள்ளச் சொன்னா செய்வீங்களா? இன்னிக்கு நம்ம தலைவர்கள் நேரு, காந்தி மாதிரி இல்லை."

பலத்த போலீஸ் பாதுகாப்பு போட்டிருந்தபடியாலும், அவர்கள் பக்கம் அழுத்தமான நியாயம் இல்லாதபடியாலும் பின்வாங்க தூறலின் நடுவே விரைந்தது வரதராஜன் பைக்.

ஐந்து பெண்கள் ஆட்டோவில் ஆபீஸ் வந்தபோது வழியில் மறித்து கேவலமாகப் பேசினார்களாம் சில தலைவர்கள்.

"நாம வந்திருக்கக் கூடாதோ... நெறையப் பேரு வரலை..."

"இல்லை சித்ரா. அவங்க வராதது போக்குவரத்து வசதி இல்லாததும், வன்முறைக்கு பயந்தும்தான்."

வீட்டில் நுழைந்து ஹேமாவிடம் ஒவ்வொன்றாகச் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தான்.

காம்பவுண்ட் கதவின் அருகே கவலையுடன் ஹேமா.

கையில் குழந்தை.

"ஏன் லேட்டுங்க. வழில பிரச்னை ஒண்ணும் இல்லையே."

"பதறாதே. நீ ஏன் வழில நிக்கறே."

"குழந்தை பாலே குடிக்கலீங்க."

"ஏன்?"

"தெரியலை."

"பாட்டில் பால்."

"வாயை வைக்க மாட்டேங்கறான்."

"எப்போலேர்ந்து."

"காலைல எழுந்ததுல இருந்து. நானும் மல்லு கட்டிப் பார்க்கறேன் அரை ஸ்பூன் பால் உள்ளே போகலை."



சத்யன்

குழந்தை சோர்ந்து இருந்தாள். வீட்டில் பெரியவர்கள் இருந்தால் நிமிடத்தில் பிரச்னையைத் தீர்த்து விடுவார்கள்.

தமிழ் – தெலுங்கு மொழியுடன் கூடிய ஜாதிப் பிரச்னை.

இரண்டு பக்கமும் விலகிக் கொண்டதால் –


ஆளின்றி அனாதையாய் –

பாலின்றிக் குழந்தை –

"பக்கத்துத் தெரு பரமசிவம் டாக்டர் கிட்டே காட்டி இருக்கலாமே."

"அவர் ஊர்ல இல்லையாம். வடக்கு ரதவீதி பகவதி டாக்டர் கிட்டே போலாம். அவங்க ஸ்பெஷலிஸ்ட்."

"சரி."



"ஆட்டோ கூட கிடையாதே."

"ஆறு மணிக்கு மேல ஓடும்."

"பகுதி நேர பந்த் வாழ்க! ஸ்ட்ராங்கா ஒரு காப்பி ரெடி பண்ணு. பயலுக்கு ட்ரெஸ்ஸை மாத்து. வண்டியை உள்ளே நிறுத்திட்டு ஆறுமுகம் ஆட்டோவை கூட்டி வர்றேன்."

"வாடகை விஷயத்துல தகராறு பண்ணாதீங்க."

"சரிம்மா. இன்னிக்கு அவன் வர்றதே பெரிசு. ஒவ்வொரு நாள் கழியறதும் கடவுள் புண்ணியமா இருக்கு."

மூன்று மாதக் குழந்தையை கவனிக்க இவள்தான் என்ன பாடு படுகிறாள்.

சாப்பிட்டு விட்டு படுக்க சில சமயம் பதினோரு மணி, பன்னிரண்டு மணி கூட ஆகி விடுகிறது.

காலையில் சரியாக ஆறு மணிக்கு எழுந்து சாப்பாடு தயார் செய்து...

சில சமயம் காலைக் காப்பி அவள் குடிக்க ஒன்பது மணி ஆகிவிடும்.

"கஷ்டம்தானே ஹேமா. பணக்கார வீட்டுப் பெண் நீ."

"இதென்னங்க. என் வீட்டு வேலை. நான் செய்யறேன்."

ஒரு சிறு வெளிக் காட்டல் கூட கிடையாது. பெண் ஆச்சரியம்தான்.

தெருவின் மறு கோடியிலுள்ள ஆறுமுகத்தின் வீட்டை நெருங்கிய போது வீட்டின் வாசலில் ஆட்டோ நின்றது ஆறுதலாக இருந்தது.

குரல் கொடுத்ததும் ஆறுமுகம் வெளியே வந்தார்.

"எங்க வரைக்கும் சார்..."

"வடக்கு ரத வீதி."

"இன்னிக்கு ஆட்டோ ஓடாதே. நூறு ரூபாய் ஆவும்."

"வழக்கமா..."

"வழக்கமா தர்றது வேற. இன்னிக்கு எங்க யூனியன்ல தீர்மானம் போட்டிருக்கோம். இதுவே ஆறு மணிக்கு மேலங்



> "சந்தனக் கடத்தல் வீரப்பன் சரணடைய இப்பொழுது ஒரே ஒரு நிபந்தனைதான் விதிக்கிறானாம்."
> "என்ன அது?"
> "ஜெயலலிதா மீதான வழக்குகள் முடிந்த பிறகு அவன் மீது வழக்கைத் தொடங்க வேண்டுமாம்!"
> – அ. ஷண்முகசுந்தரம்

கறதால நான் சரிங்கறேன்."

"இல்லே. குழந்தை உடம்பு அவசரம்."

"அதுனாலதான்பா நூறு ரூபாய்." ஹேமாவின் வார்த்தைகள் நினைவில் வர சரி என்றான்.

ஆட்டோ கிளம்பியது.

ஹேமா அதற்குள் வீட்டைப் பூட்டி கையில் நாலைந்து துணிகளும், காம்பவுண்டின் பூட்டு சாவியுமாய், குழந்தையுடன் தயாராக நின்று கொண்டிருந்தாள்.

"போலாமா."

"ம்."

ஆட்டோ கிளம்பியது.

பிள்ளையார் கோயில் தாண்டும் வரை பிரச்னை இல்லை. பிறகு அங்கங்கு எதிர்ப்புக் குரல்கள்.

"கொஞ்சம் வேகமாப் போங்க. ப்ளீஸ்."

"எம்மா இன்னிக்கு ஆட்டோ ஓட்டறதே தப்பு. அதுல வேகம் வேறையா. பேசாம இரும்மா."

"விலைவாசியைக் குறைக்கச் சொல்லி நடத்தற பந்த்ல ஆட்டோ ரேட்டு டபுள் மடங்கு..." வரதராஜன் மனதிற்குள் சிரித்துக் கொண்டான்.

ஒரு நாள் ஆபீஸ் போய் சம்பாதித்ததை பந்திற்கு இன்னொரு விதமாய் இழந்தாச்சு.

டாக்டரின் வீட்டு வாலில் கவலையுடன் நிறைய முகங்கள்.

கைகளில், இடுப்பில் குழந்தைகள். கண்களில் கவலை.

டாக்டர் வயிற்றை அமுக்கி சோதித்தார். ஹேமாவிடம் உணவு விஷயத்தில் உள்ள கட்டுப்பாட்டை விளக்கினார்.

ஒரு டானிக் எழுதிக் கொடுத்தார்.

ஸ்பெஷலிஸ்ட் என்பதால் பீசும் ஸ்பெஷலாக இருந்தது.

"பயப்படுவதற்கு ஒன்றும் இல்லையே."

"நோ... நோ... நாளைக்குக் காலைல சரியாப் போகலைன்னா ஒரு மோஷன் டெஸ்ட் வேணா எடுத்துடலாம்."

வெளியே வந்ததும் பக்கத்தில் இருந்த மெடிகல் ஷாப்பில் மருந்து வாங்கியாகி விட்டது.

சீறிக் கொண்டு கிளம்பியது ஆட்டோ.

"மொத்தம் எவ்வளவு ஆச்சு?"

"உனக்கு என்ன கவலை."

"இல்லே. சொல்லுங்களேன்."

குழந்தை ஆட்டோவின் சீரான ஓட்டத்தில் ஹேமாவின் மடியில் தூங்க ஆரம்பித்தது.

சின்ன வயதில் உடம்பிற்கு ஏதாவது என்றால் சுக்கை அரைத்துத் தடவுகிற அம்மாவும், "முருகா.. காப்பாத்து..." என்று நெற்றியில் விபூதி தடவுகிற அப்பாவுமாக, செலவில்லாமல் கழிந்த சின்ன வயசு நினைவுகள் வரதராஜனுக்கு.

"ஏங்க..."

"சொல்லு."

"டாக்டருக்கு எவ்வளவு?"

"நூத்தி நாற்பது. மருந்து சேர்த்து..."

"ஆட்டோ..."

"தனியா நூறு."

அதற்குள் ஆறுமுகத்தின் வீடு வந்திருந்தது.

"ஒரு நிமிஷம். ஒரு விஷயம் சொல்லிட்டு ஓடி வந்திர்றேன், ஒரு ஐம்பது ரூபா கொடுங்களேன்."

வரதராஜன் எடுத்துக் கொடுத்தான். குடிசையின் உள்ளே பேச்சுக் குரல் கேட்டது.

"இந்தா ராவுக்கு நல்லா சமைச்சு வை."

"நம்மதான் திங்கணும். பொண்ணு பால் குடிக்க மாட்டேங்குது."

"அட ஆறுமுகம்... உன் பொண்டாட்டியை பீடிங் பாட்டில் முனைல சொட்டு தேன் தடவச் சொல்லு. பிறகு பிள்ளை ஜோராப் பால் குடிக்கும்."

ஆறுமுகத்தின் அம்மா குடிசையின் வெளியிலிருந்து சொல்வது வரதராஜனுக்கும் கேட்டது.

"ஏங்க ஒரு பாட்டில் தேன் எவ்வளவு இருக்கும்."

"இந்த அம்மாவோட அக்கறையைவிட குறைவாகத்தானிருக்கும்!" சொல்லவில்லை அவன். ●



கடத்தல் தங்கத்துக்கு வழி செய்த அரசு!

தங்கத்தின் மீது விதிக்கப்படும் இறக்குமதி வரி அதிகமாகியிருக்கிறது. இதன் காரணமாக 250 ரூபாய் (1 கிராமுக்கு) என்றிருந்த அதன் விலை 400 ரூபாய்!

ஒரு காலத்தில் 'சீரும் சிறப்புமாக' நடைபெற்று வந்த தங்கக் கடத்தல் மீண்டும் துளிர் விட்டு ராட்சத வளர்ச்சி பெற இதனால் வாய்ப்பு உண்டு என்ற பயம் உருவாகியிருக்கிறது.

மீதி நாடுகளிலிருந்து தங்கத்தைக் கடத்தி வருவதில் இருவித லாபம் உண்டு. அங்கே தங்கம் குறைந்த விலை. இங்கோ அத்தோடு, வரி ஏய்ப்பினால் உண்டாகும் லாபமும் கூட.

உலகின் பிற நாடுகளில் விலை சரசரவென்று குறைந்து கொண்டே வருகிறது. கடந்த பதினெட்டு வருடங்களில் அதன் மதிப்பு 67% இறங்கியுள்ளது. வேண்டுமென்ற நிலை எப்போதோ மாறிவிட, பல நாடுகளின் மத்திய வங்கிகள் தங்களிடமுள்ள தங்க இருப்பை விற்கத் தொடங்கி விட்டன. இதனால்தான் தங்கத்தின் விலையில் இறங்கு முகம்.

கிழக்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் கூட தங்கம் மதிப்பை இழந்து விட்டது. கொரியாவில் தங்கத்தின் டிமாண்ட் பாதியாகக் குறைந்து விட்டது.

ஆனால் இந்தியா மட்டும் ஒரு தனி வழியைக் கண்டது. "விலை குறைந்ததா? நல்லது. இன்னும் வாங்கிப் போடுவோம்' என்ற மனநிலை.

இந்தியா ஏன் இந்த விஷயத்தில் விதி விலக்காக இருக்க வேண்டும்? காரணம் இதுதான். பிற நாடுகளில் அது ஒரு அழகான உலோகம். அவ்வளவே. இங்கு அது ஒரு பாதுகாப்பு. பெருமை அடித்துக் கொள்ள ஒரு வடிகால். சமூக அந்தஸ்து. வரி ஏய்ப்புக்கு உதவும் சாதனம். சோதனைக் காலத்துக்குக் கை கொடுக்கக் கூடிய சஞ்சீவினி. சிறப்பான கல்யாணத்துக்கு அளவீடு. இன்றைய தேதியில் பத்தாயிரம் டன்களுக்கு அதிகமான தங்கம் இந்தியப் பெண்களிடம் விதவிதமாகத் தொங்கிக் கொண்டிருக்க, ரிசர்வ் வங்கியின் தங்கக் கையிருப்பு வெறும் நானூறு டன்கள் மட்டுமே! (உலகில் வேறெங்கும் இல்லாத அதிசயம் இந்த நிலை).

1947ல் தங்கம் இறக்குமதி, ஏற்றுமதி இரண்டிற்குமே நம் நாட்டில் தடை விதிக்கப்பட்டது. 1963ல் தங்கக் கட்டுப்பாடு சட்டம் வந்தது. இதன் மூலம் தங்க வியாபாரம் நெறிமுறைப்படுத்தப்படும் என்று எதிர்ப்பார்த்தது அரசு (மட்டும்!). ஆனால் மறைமுக வியாபாரம் பெருகி சர்வதேச தங்க விலையை விட என்பது சதவீதம் அதிக விலையில் தங்கம் விற்கப்பட்டது.


1990ல் அரசு தன் பிடியைத் தளர்த்தியது. அடுத்த இரு வருடங்களில் கட்டுப்பாடு சட்டம் முழுவதுமாகவே நீக்கப்பட்டது. வெளிநாடு வாழ் இந்தியர்கள் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஐந்து கிலோ தங்கம் கொண்டு வரலாம் என்றானது. இரண்டு வருடங்களுக்கு முன் இது பத்து கிலோவாக அதிகரிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட ஏஜென்ஸிகள் எவ்வளவு தங்கம் வேண்டுமானாலும் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்ற நிலை.

தங்க இறக்குமதி இப்படி சுலபமாகிவிட, தங்கக் கடத்தல் வெகுவாகக் குறைந்தது.

இப்போதைய நிலையில், வரி உயர்வினால், கடத்தல் செய்தால் அதிக லாபம் என்ற நிலை ஏற்பட்டுவிட வாய்ப்பு உண்டு. "விரைவில் நாட்டின் உள்ளே நுழையும் தங்கத்தில் பாதிக்கு மேல் சட்ட ஏய்ப்பின் மூலம் வருவதாகவே இருக்கும்" என்றார் பெயர் வெளியிடுவதை விரும்பாத 'ரெவின்யூ இன்டெலிஜென்ஸை'ச் சேர்ந்த ஓர் அதிகாரி.

— ஜி.எஸ்.எஸ்

தீர்ப்புகள் சாபமானால்





2.5 கோடி ரூபாய்ச் செலவில் 5 லட்சம் மரக்கன்றுகளை சென்னையில் நடப்போகிறார்களாம். இதற்காக வனத்துறை அதிகாரியொருவர் ஸ்பெஷலாக நியமிக்கப்படவிருக்கிறார் என்றும் சொல்லியிருக்கிறார் அமைச்சர் பொங்கலூர் பழனிச்சாமி! இது கேலிக் கூத்தாக இருக்கிறது!

தங்களுடைய விளம்பரப்பலகைகளை மறைக்கின்றன என்கிற ஒரேயொரு காரணத்துக்காக, ஆங்காங்கேயுள்ள பச்சை மரங்களையெல்லாம் வெட்டி வெட்டிச் சாய்க்கிற படுபாதகச் செயல்களை நாம் ஏற்கெனவே எழுதியிருக்கிறோம். பல்வேறு பொதுநல அமைப்புகளும் இது பற்றி அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்றன.

ஆனாலும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. 'Clean city' என்று மாநகர மேயர் சொல்வது ஒரு வேளை, மரங்களே இல்லாத கிளீன் சிட்டியோ என்னவோ! அப்படியானால், சென்னை நகரிலுள்ள பச்சை மரங்களை வெட்டித் தள்ளுகிற விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்களுக்கு மாநகராட்சியும் அரசும் சேர்ந்து ஊக்கத் தொகை வழங்கினாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்த நிலையில் - அரசாங்கம் செவிடாக இருக்கிற ஒரு நிலையில் - மரங்களை வெட்டித் தள்ளுகிற விளம்பரப் பலகைகளின் சொந்தக்காரர்களை எதிர்த்துப் பொது மக்களால் என்ன செய்ய முடியும்? சாபம் தான் கொடுக்க முடியும்!

தி. நகரிலுள்ள சில பச்சை மரங்களை வி. பலகைகளின் சொந்தக்காரர்கள் வெட்டித் தள்ளினார்கள். வேறு வழி தெரியாத பொது மக்கள், 'இங்குள்ள மரத்தை வெட்டியவன் குடும்பத்தோடு நாசமாய்ப் போவான்' என்று பேனர் எழுதிக் கட்டினார்கள்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றால், மக்களின் சாபமும் மகேசன் சாபம் ஆகாதோ!

— இளங்கோவன்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 800/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4302/ 99 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

